

உ

கணபதி துணை.

பெரிய சோதிட ஜாதக
கணிதபாலசிகைஷ.

மதுரைமாநகரம்

கவிராஜ கந்தசாமிபிள்ளை அவர்களால்

இயற்றியது.

K. A. மதுரை முதலியார்

ஷண்முகானந்த புத்தகசாலை,

பார்க்டவுன், சென்னை-3

காபிரைட்] [25

குரு-சிஷ்ய சம்பாஷணை என்னும்

ஹஸ்த ரேகை

சாஸ்திரம்

தற்காலம் எத்தனையோ ரேகை சாஸ்திரங்கள் வெளி வந்திருக்கலாம் [illegible] அதுபோல் யில் [illegible] சிஷ்யன் [illegible] வி கேட் பதையும் குரு சொல்வதும் வெகு விமரிசையாகயிருக் கிறது தானேபுத்தகத்தை வைத்து பார்த்துக் கொள் ளலாம். பிறருக்கும் சொலலலாம். வெகு எளிய நடையிலும், ஏராளமான படங்களுடன தெளிவாகவும் சுலபமாகவும் மேனாட்டு அறிஞர் கள் பிரபல மேதாவிகள் படங்களுடன் வெளி வந்து விட்டது. சுமார் 400 படங்களுடன் அடங்கியது. பெரிய மேதாவியும் கைரேகை அனுபவம்வாய்ந்த நிபுணருமான கே. எஸ். சிவ சுப்பிரமணியம் அவர்களால் இயற்றப்பட்டது.

இதன் விலை ரூ 3-50

கிடைக்குமிடம்:

ஷண்முகானந்த புத்தகசாலை

பார்க்டவுன்' சென்னை-3.

சிவமயம்.

பெரிய சோதிட ஜாதக

கணிதபாலசிக்ஷை

விநாயகர் விருத்தம்

ஆதிகஜானனமூர்த்தி மனிதரெல்லாம்
அவனியிலே பிறந்தினிதாய் சுகதுக்கத்தை
நீதியுடனனுபவிக் தும விபரந்தன்னை
னதருளால் சொல்வதற்குன் னருளினாலே
ஜோதிடஜாதககணித பாலசிக்ஷை
சொல்லுகின்ற மார்க்கமெல்லாம் தரணியில்சூழ்
ஜாதகர்க்குச் சரியாக அமைந்திருக்க
தமதருளா லெழுதுகின்றேன் துணைசெய்வீரே.

சரஸ்வதி விருத்தம்

அன்புடனுலகோருக்கு அருமைசேர் ஜோதிடத்தை
நன்மையாய்ப்புகல்வதற்கு நாடுமென் நாவில்நின்று
இன்பமாய்ப்பலனுரைக்கும் இலக்ஷணவிபரந்தன்னை
அன்னையே சரஸ்வதியெனக்கு அனுக்ரகம்புரிகுவாயே.

நவக்கிரகதேவர் விருத்தம்

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி
காரியு மிராகு கேதும் காசினிமாந்தர்கட்கு
நேரிடும்பலாபலன்கள் நிகழ்ந்துதற்றமை துதித்தேன்
சீரதாய் வரந்தந்தாள்வீர் திருவடி துதிக்கின்றேன்,

எண்சீரடி விருத்தம்

பூதலத்தில் மானிடர்கள் முன்ஜன்மத்தில்
புண்ணிய பாபந்தனையே யனுபவிக்க
வேதனுலே தாயின் கர்ப்பத்திருந்
வையகத்திலே பிறந்த கணக்
ஜாதகத்தை யெழுதிப்பலன் சொல்லும்போது
சரியாகவே நடக்கும் பலன்களெல்லாம்
ஈதெல்லாம் கவனித்து சாந்திசெய்து
இன்பமாக வாழ்த்திருப்பீ ருலகுள்ளோரே.

(இ-ள்) மனிதவகுப்பார் முன் ஜன்மத்தில் செய்த பாப புண்ணியத்தினுல் தாயின் வயற்றிலிருந்து பூமியில் பிறந்து வளர்ந்து வருகையில் அவரவர்கள் அனுபவிக்கும் சுகதுக்கத்தைக் கவனிப்பதற்கு அவர்கள் பூமியில் பிறந்தவுடனே அந்தந்த வருஷம், மாதம், தேதி, நக்ஷத்திரம், திதி, சரணம். யோகம், வேளை, மணி நிமிஷம் அல்லது நாழிகை விநாடி அனைத்தும் கவனித்துதான் அவர்கள் பலனை சொல்வதற்காகும். 1

சீஷன் சொல்வது விருத்தம்

என்குருவானநாதா எந்தனுக் கருள்வாயென்று
நன்மைசேர் சோதிடத்தை நாடி நான்வந்துகேட்கும்
தன்மைசேர் விபரமெல்லாம் தனித்தனியாயெனக்கு
பன்னுவீரென்றுபானே பணிந்திட்டேன் குருவேபோற்றி

(இ-ள்.) எனது குருஸ்வாமி? உலகில் பிறந்த மனித வகுப்பினர்கட்கு ஜாதகங் கணித்துப் பலன் சொல்வதெவ் விதமோ அதை அடியேனுக்கு விபரமாய்த் தெரிவிப்பீரென்று தமது திருவடியை தியானஞ்செய்து பணிந்து நமஸ்காரஞ் செய்கின்றேன். 2

குரு சொல்வது விருத்தம்

அன்பான யென்சிஷ்யா பூலோகத்தில்
அவரவர்கள் தான்பிறந்த வேளைதன்னை
இன்பமுடனே யுரைத்தால் கணித்தாராய்ந்து
இலக்கினமும் இராசியும் வரைந்துக்கொண்டு
இன்னின்ன கிரகங்க ளில்லிவ்வீட்டில்
இருந்துபலன் கொடுக்குமென்று அவர்கட்கேற்ற
நன்மைதுன்மை நடக்குமென்று சொல்வதோடு
நவகிரக சாந்தி செய்யப் புகலுவாயே.

(இ-ள்.) எனது அன்பிற்கினிய சிஷ்யனே! உலகிற் பிறந்த மனிதவகுப்பார் தமக்குறிய சுகதுக்கத்தைச் சொல்வாயென்ருல். அவர்கள் பிறந்த வருஷம், மாதம், தேதி, மணியைக் கேட்டுக்கொண்டு அந்த வேளையின் கணக்கின் படி யோணித ஆராய்ச்சி செய்து இலக்கினமிட்டுக் கொண்டு நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது யென்னும் ஒன்பது பேரும் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம். சிங்கம், கன்னி, துலாம் விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் மீனமென்னும் பனிரெண்டு ராசிகளில் எந்தெந்த ஸ்தானத்தில் எவ்வெவ்விதமாயிருக்கின்ருர்களோ அவ்வவ்விதமாகவே பலாபலனைத்தந்து சுகதுக்கத்தை அனுபவிக்கச் செய்வார்கள்; ()

இதற்கு உதாரணம் எவ்விதமெனில் :

'தற்காலத்தில் ஆங்கிலேய அரசாங்கத்தாரின் காலகணித மணியின் பிரகாரம் ஒருவர் வந்து 1930 வருஷம், ஜனவரி மாதம் 26ந் தேதி காலை 6¼ மணிக்குக் குழந்தை பிறந்த தென்ருல்,

ஜாதகம் கணிக்கும் விவரம்

☞ நிகழும் 1930-வருஷம் ஜனவரிமாதம் 26-ந் தேதிக்குச் சரியான தமிழ் சுக்கிலவருஷம் தைமாசம் 13-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணபக்ஷம், துவாதசி 25-48, மூலநக்ஷத்திரம், 57·25, வியாகாதயோகம், 40-40 தைதுலை 25-48 ஸூர்யோதயம் 12க்குச் சரியான சூரிய உதயாதி அரையே அரைகாலுக்கு மகாலக்னமும் தனுசுராசியும் கூடிய அமிர்தயோகத்தில் ஆண்குழந்தை ஜனனம் என்று குறிப்பெழுதி அந்த வேளையில் கிரகங்களிருக்கும் நக்ஷத்திர பாதசாரத்தைக் கவனித்து இராசிசக்கரம் போடவேண்டியது.

இன்னவிதம் நக்ஷத்திர சாரந்தன்னில்
　இருக்கின்ற நவகிரகங்களானோர்
ஒன்பதுபேரெங்கெந்த ராசிதன்னில்
　ஓதுகின்ற பலாபலனை கொடுப்பாரென்று
அன்பாக ஜாதகர்க்குப் பலனைச்சொன்னால்
　ஆயுள்வரை நடப்பதெல்லாம் சரியேயென்பார்
நன்னயமாங் கிரகம்நின்ற நக்ஷத்திரபாதம்
　நலமுடனே ராசிகளில் கவனிப்பாயே.

(இ-ள்) இவ்விதமாக மேற்குறிப்பித்தபடியே வருஷம் மாதம் தேதி, கிழமை, திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் தியாஜ்யமனைத்தும் எழுதிக்கொண்டு பிறகு அன்றைய நக்ஷத்திரத்தின் காலகணிதத்தை ஆராய்ச்சி செய்வதெவ்விதமென்றால் மேல்காட்டிய பிரகாரம் குழந்தைபிறந்த வேளையின்படியே தைமாதம் 13-ந்தேதி காலை அரையே அரைக்கால் நாழிகையில் எங்கெந்தகிரகம் எங்கெந்த நக்ஷத்ர பாதங்களில் நிற்கிறதோ அதை கவனித்து எழுதும் விபரத்தைத் தெரிவிப்போம். அவ்விதமே கிரகங்கள் நன்று பலன் கொடுக்கும் விபரத்தை ஜாதகர்கட்குச் சொன்னால் ஆயுள்வரையினும் நடக்கும் பலன் சரியாய் அமைந்திருக்கும் ஆகையால் மேற்குறிப்பித்த நக்ஷத்திர பாதசாரத்தில் நவக்கிரகங்களிருக்கும் விபரத்தை அடியில் குறிப்பிட்டுச் சொல்லுகின்றேன் கவனிப்பாய் எ-று.

சுக்கில வருஷம் தைமாதம் 13ந்தேதியில் கிரகங்கள் நிற்கும் நக்ஷத்திர பாதசாரநிலைகள்.

நக்ஷத்திரம்	பாதம்	கிரகங்கள்	காரகர்
திருவோணம்	1-ல்	சூரியபகவான்	பிதுர்காரகன்
மூலம்	1-ல்	சந்திரபகவான்	மாதுர்காரகன்
உத்திராடம்	1-ல்	செவ்வாய்பகவான்	சகோதரகாரகன்
திருவோணம்	2-ல்	புதபகவான்	வித்யகாரகன்
ரோகணி	2-ல்	குருபகவான்	புத்ரகாரகன் [ன்
உத்திராடம்	4-ல்	சுக்கிரபகவான்	களஸ்திரகாரக
பூராடம்	1-ல்	சனிபகவான்	ஆயுள்காரகன்
பரணி	1-ல்	இராகுபகவான்.	மோக்ஷகாரகன்
சுவாதி	3-ல்	கேதுபகவான்	ஞானகாரகன்

இவ்விதமாய் மேற்குறிப்பித்த வருஷம் மாதம் தேதியில் அமைத்திருக்கும் நக்ஷத்திர பாதசாரங்களில் கிரகம் நிற்பதை கவனித்து, மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம் கன்னி துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் துவாதச இராசிகளென்னும் பனிரெண்டு ராசிகளிலும் அந்தந்த சமயத்தில் எவ்வெவ்விதமாய் கிரகங்கள் எங்கெந்த நக்ஷத்திர பாதத்திலிருக்கின்றார்களோ அதை கவனித்து அந்தந்த ராசியில் போட்டு அதன்படியே பலன் சொன்னால்சரியாய் அமைந்திருக்கும், இதன்விபரம் எவ்விதமெனில்,



சீஷன் கேட்பது விருத்தம்

குருநாதா பனிரெண்டு ராசிதன்னில்
கூறுமந்த நக்ஷத்திர மிருபத்தேழும்

இருக்கின்றவிபரமதை யெந்தனுக்கு
இனிதுடனே புகல்வீரென் றுமதுதிவ்ப

திருவடியை யான்தொழுது நமஸ்கரித்தேன்
தினகரனும் சந்திரனும் செவ்வாய்மாறும்

குருசுக்ரன் சனிராகு கேதிருந்து
கொடுக்கும்பல னெந்தனுக்குச் சொல்லுவீரே,

(இ-ள்) எனது குருஸ்வாமி! தாங்கள் அடியேனுக்கு உபதேசித்த ஜோதிடகணித ஆராய்ச்சியின்படியே மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் மீனமென்னும் பனிரெண்டு ராசிகளிலும், அஸ்வனி, பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்வசு, பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம். பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம் பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதியென்னும் இருபத்தேழு நக்ஷத்திரங்களும், எவ்வெவ்விதமாய் அமைந்திருக்கின்றன அவைகளில்சூரியன், சந்திரன், செவவாய், புதன், குரு, சுக்ரன், சனி, இராகு, கேது யென்னும் ஒன்பது கிரகங்களுமிருந்து மனிதவகுப்பினருக்குக் கொடுக்கும் பலாபலனை அடியேனுக்கு விபரமாய்ச்சொல்வீர் 5
குருஸ்வாமி (எ-று)

குருசொல்வது எண்சீரடி விருத்தம்

அன்பான என்சிஷ்யா ஜோதிஷத்தை
ஆராய்ந்து பலனுரைக்கும் விபரம்சொல்வேன்

நன்மையாய் கவனிப்பாய் இருபத்தேழு
நக்ஷத்திரம் பனிரேண்டு ராசிதன்னில்

இன்னின்ன விதமாக யிருப்பதேர்ந்து
இரவிமதி சேய்மாலும் குருவும் சுக்ரன்

தன்மையாம் சனிராகு கேதிருந்து
தரும்பலனை விபரமாய்க் கவனிப்பாயே.

(இ-ள்) எனதன்பிற்கிசைந்த சிஷ்யா! ஜோதிஷ சாஸ்திரத்தை ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்வதென்றால் இருபத்தேழு நக்ஷத்திரங்களும் பனிரெண்டு ராசியிலும் அமைந்திருக்

கும்போது நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாய் புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு கேது யென்னும் ஒன்பது கிரகங்களும் தமது கால அளவின்படியே சுற்றிக் கொண்டு வரும்போது எந்தெந்த நக்ஷத்திரகாலில் வருகின்றார்களோ அந்தந்த இராசிபலனையே ஜாதகரை அநுபவிக்கும் படியாகச் செய்வார்கள். (எ-று)

12-இராசிகளில் 27-நக்ஷத்திரங்கள் இருக்கும் விவரம்

<table>
<tr><td>ரேவதி 1
உத்திரட்டா 1
பூரட்டாதி ¼
மீனராசி 4¼</td><td>அஸ்வனி 1
பரணி 1
கிர்த்திகை ¾
மேஷராசி 4</td><td>கிர்த்திகை ¾
ரோகணி 1
மிருகசீரிடம் ½
ரிஷபராசி 4¾</td><td>மிருகசீரிடம் ½
திருவாதிரை 1
புனர்பூசம் ¾
மிதுனராசி 5¾</td></tr>
<tr><td>பூரட்டாதி ¼
சதையம் 1
அவிட்டம் ½
கும்பராசி 4¾</td><td colspan="2" rowspan="2">நக்ஷத்திரங்கள் 27
இராசிகள் 12
ஜாதகன் ஜனன உதய லக்னத்திலிருந்து 60நாழிகைக்கும் பனிரெண்டு இராசிகளும் இவ்விதமே வருமென்பதை கவனிக்க வேண்டும்.</td><td>புனர்பூசம் ¼
பூசம் 1
ஆயிலியம் 1
கடகராசி 5½</td></tr>
<tr><td>அவிட்டம் ½
திருவோண 1
உத்திராடம் ¾
மகரம் 5¼</td><td>மகம் 1
பூரம் 1
உத்திரம் ¼
சிம்மராசி 5¼</td></tr>
<tr><td>உத்திராடம் ¼
பூராடம் 1
மூலம் 1
தனுசு 5½</td><td>கேட்டை 1
அனுஷம் 1
விசாகம் ¼
விரிச்சிகராசி 5¼</td><td>விசாகம் ¾
சுவாதி 1
சித்திரை ½
துலாராசி 5</td><td>உத்திரம் ¾
அஸ்தம் 1
சித்திரை ½
கன்னியராசி 5</td></tr>
</table>

சீஷன் கேட்பது விருத்தம்

சொல்தவறு யென்குருவே அடியேனுக்கு
ஜோதிஷத்தின் விபரமெல்லாம் நன்குணர்த்தி
தொல்லுலகின் ஜாதகர்த்தப் பலனைச்சொல்லும்
தோற்றமெல்லாம் யானினிதாய் கவனித்தற்கு

நல்விதமாகவே இராசி தன்னில்
நவக்கிரக மொன்பதுபே ரிருந்தன்பாக
வல்லமையாய் பலன்கொடுக்கும் மார்க்கமெல்லாம்
வழுத்துவீ ரெந்தனுக்கன் பாகத்தானே:

(இ-ள்) குருநாதா! அடியேனுக்கு ஜோதிஷத்தின் விபரமெல்லாம் தெளிவாய்க் கற்பித்தீர் தமது திருவருளால் யான் ஜாதகம் கணிக்கும் மார்க்கத்தைக் கற்றுணர்ந்தேன். ஆனால் ஜாதகன் உதயலக்கினத்திலிருந்து பனிரெண்டு ஸ்தானங்களிலும் நவக்கிரகங்களிருந்து பலன் கொடுக்கும் விபரத்தை அடியேன் கவனிப்பதற்கிசைந்த விதமாய் திருவருள்புரிவீர் (எ-று) 7

குரு சொல்வது விருத்தம்.

ஜன்மம் ரெண்டுமூன் றுநாள் கைத்தாறேழில்
சாற்று மெட்டொன் பதுபத்து பதினொன் றென்றே
பன்னிரண்டு ஸ்தானத்தில் கிரகம்நிற்கும்
பலனெல்லா மூந்தனுக்கு விபரமாக
அன்புடனே சொல்வேனுன் மனதிருத்தி
அவனியில்வாழ் மனிதரின் ஜாதகத்தைப் பார்த்து
நன்மைதுன்ப மனுபவிக்கும் விபரமெல்லாம்
நவின்றிடுவாய் திசாபுத்தி தனையாராய்ந்தே

(இ-ள்) எனதன்பிற்கிசைந்த சிஷ்யா! மனிதர்களின் ஜாதகமெழுதும்போது எந்த லக்கினம் உதயமாகிறதோ அதே ஜன்மலக்னமாகும், அங்கிருந்து முறையே எண்ணிக் கொண்டு வரும்போது இரண்டாவது வாக்குஸ்தானம். குடும்பஸ்தானம், மூன்றாவது தீரஸ்தானம், பின் சகோதரஸ்தானம் நான்காவது மாதுருஸ்தானம் சுகஸ்தானம் ஐந்தாவது புத்திரஸ்தானம், ஆறாவது சத்துருஸ்தானம் ரோகம்,

ரோகஸ்தானம், ஏழாவது களஸ்திரஸ்தானம், எட்டாவது ஆயுள்ஸ்தானம், ஒன்பதாவது பிதுர்ஸ்தானம், பாக்கிய ஸ்தானம், பத்தாவது ஜீவன ஸ்தானம் பதினொருவது இலாபஸ்தானம், மூத்தசகோதரஸ்தானம், பனிரெண்டாவது சயனஸ்தானம், மோக்ஷஸ்தானம், விரயஸ்தானமென்பதால் விளங்கும், இன்னின்ன ஸ்தானங்களில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி, இராகு, கேது யென்னும் ஒன்பது கிரகங்களுமிருந்துபலன் கொடுக்கும் விபரத்தைப் புகலிவன் கவனித்து ஜாதகர்க்குரிய பலாபலனை அவரவர்களின் ஜாதகபலனுக்கிசைந்த திசாபுத்திகளையும் ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும் (எ-று) 8

மேஷ லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன்

முதல்வீடு இலக்கினஸ்தானம்

அன்புடனே மேஷலக்னம் பிறந்தோருக்கு
ஆதித்தன் லக்னத்தில் ரெண்டில் சுக்ரன்
பொன்னவனும் பாக்கியத்தில் ரிஷபத்தில்சந்ரன்
பொருந்தி மாலுடன்செவ்வாய் லக்கினத்திலாக்ஷி
இன்னவித மிருந்தாலே ஜாதகர்க்கு
இனிதுடனே வித்தைபுத்தி வர்த்தகஉத்தியோகம்
பொன்பொருளும் பூமிலாபத் துடனெப்போதும்
பூவுலகில் பிரபுவென ஜீவிப்பாரே.

(இ-ள்) மேஷலக்கினத்தில் பிறந்தவர்கட்கு சூரியன் இலக்கினத்தில் உச்சமாகவும், இரண்டில் சுக்கிரன் ஆக்ஷியாகவும் குருபகவான் ஒன்பதாமிடமாகிய தனுசில் உச்சம் பெற்றிருக்கவும், புதனுடன் செவ்வாய்பகவான் மேஷமாகிய இலக்கினத்தில் ஆக்ஷி பெற்றிருக்கும்போது பிறந்த ஜாதகன் வித்யாபிவிருத்தியுடன் உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும் பெற்று பொன்பொருள் பூமி லாபத்துடனே சதாகாலமும் பிரபுவைப்போல சுகஜீவியாயிருப்பதற்காகும் (எ-று) 9

புதனிரண்டில் சுக்ரனுடன் சேர்ந்திருக்க
பொன்னவனும் சப்தமத்தில் ஆறில்ராகு
இதமுடனே கேதுபனி ரெண்டிலுற்று
இரவிஜன்ம லக்கினத்தி லிருக்கும்போது
மதிகும்பந் தனிலிருந்தால் தனவானாக
மனைவிமைந்தர் பொன்பொருள் பூஸ்திதியோடன்பாய்
நிதிமிகுந்து பந்துமித்ரர் புகழவாழ்ந்து
நீணிலத்தில் பிரபுவென விளங்குவாரே.

(இ-ள்) மேஷலக்கினத்தில் பிறந்தவர்கட்கு புதனும், சுக்கிரனும் இரண்டிலிருந்த ஜனனலக்கினத்தில் சூரியனிருக்கவும் குரு ஏழாமிடத்திலும், ஆறுமிடத்தில் ராகும், பனிரெண்டாமிடத்தில் கேதுயிருந்து சந்திரன் பதினொருமிடமாகிய கும்பத்திலிருந்தால் அழகான மனைவியை மணந்து புத்ர பாக்கியத்துடனே குறையாத தனவந்தனாய்ப் பொன் பொருள் பூஸ்திதியுடனே பந்துமித்திரர்புகழ்ந்துரைக்குந் தன்மையாய் வாழ்ந்திருப்பதற்காகும் (எ-று) 10

சனிராகு லக்னத்தில் ஐந்தில்சூரியன்
சந்திரனும் அஷ்டமத்தில் ஏழில்கேது
முனிவான குஜன்களில் கடகத்துற்றால்
மூடனாய் பகுத்தறிவு மில்லாமற்றான்
கனிமொழியாள் மனைவிமைந்த ரில்லாமற்றான்
கஷ்டநஷ்டத்தோ டிரந்தும் பசிநோயாலே
இனிஎவ்விதம் பிழைப்பதெனக் கலங்கி
எப்போதும் ஐயமேற் றலைகுவாரே.

(இ-ள்) மேஷமாகிய ஜன்மலக்கினத்தில் சனியும் இராகுமிருக்க ஐந்தாமிடத்தில் சூரியனும், அஷ்டமத்தில் சந்திரனும் சப்தமஸ்தானத்தில் கேதும், சுகஸ்தானமாகிய கடகத்தில் செவ்வாயிருக்கும்போது பிறந்த ஜாதகன் சதாகாலமும் கோபமும் குரோதமுடையவனும் பந்து மித்திரர்கட்குப் பகைவனும் மனைவிமைந்தரில்லாமலும் வறுமையாளனாகவும் சதாகாலமும் ஐயமேற்றுண்டு காலத்தைவீணிலே கழித்து சதாகாலமும் ஏழையாகவே யிருப்பதற்காகும்.

ஜன்மலக்கினம் மேஷமாயிருக்க
சனிஐந்தில் புகர் ஆறில் செவ்வாய் நாலில்
பொன்னவனும் அஷ்டமத்தில் மறைந்திருக்க
புதன் விரயஸ்தானமாம் மீனத்திருக்க
பன்னிரெண்டில் ரவிமதியு மிருக்கும்போது
பார்தனிலே பிறந்தோர்க்கு துன்பஞ்சூழ்ந்து
இன்னலாய் மனைவிமைந்த ரில்லாமற்றான்
இடுக்கணுற்று பிக்ஷையேற் றலைகுவாரே.

(இ-ள்) மேஷலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சனி ஐந்தாமிடத்திலும், ஆறுமிடத்தில் சுக்கிரனும், நாலாமிடத்தில் இலக்கினாதிபதியாகிய செவ்வாய் நீசமடைந்திருக்கவும் குரு அஷ்டமஸ்தானத்தில் மறைந்திருக்கவும் புதன்விரயஸ்தானமாகிய மீனத்தில் நீசமடைந்திருக்கவும், பனிரெண்டில் சூரியனும், சந்திரனுமிருந்தால் அந்தஜாதகன் பொருள் சேகரிக்க சக்தியில்லாமல் பந்துமித்திரர் தூஷித்து பரிகாசிக்கவும், மனைவி மைந்தரில்லாமலும் இருக்க இடமில்லாமலும் பலவிடத்திலுமலைந்து பலவித ஆபத்திற்சிக்கி சதாகாலமும் பிக்ஷையேற்றுப்புசித்தும் காலங்கழித்துக்கொண்டிருப்பதற்காகும் (எ-று)

பருதிஜன்மந் தனிலுச்சமாயிருக்க
புகர்மதியும் வாக்கிலுற்று புதனுஞ்சேர்ந்து
குருபகவான் நாலிலே கடகத்துச்சம்
குஜனும் ஜன்மத்திருக்க மாதன்லாபம்
பெருமையுடனேயிருக்க ராகுஆறில்
பேசுபுகழ் கேதுபனிரெண்டி லூற்றால்
பொருள்பூமி மனைவிமைந்தருடனன்பாக
பொன்சேர்த்து பிரபுவாய் ஜீவிப்பாரே

(இ-ள்.) மேஷ லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன் ஜன்ம லக்கினத்திலிருக்க, இரண்டில் சுக்கிரனும் சந்திரனும் புதனுமிருக்க குருபகவான் சுகஸ்தானமாகிய கடகத்தில் உச்சம் பெற்றிருக்க செவ்வாய் ஜன்மத்தில் ஆக்ஷியாயிருக்க,லாபஸ்தானமாகிய கும்பத்தில் சனி ஆக்ஷியாயிருக்க இராகு ஆறிலும், கேது பனிரெண்டிலுமிருந்தால் அந்த ஜாதகன் வித்தையில் தேர்ச்சியடைந்தவனும் உத்தியோகஞ் செய்தும், வியாபாரஞ் செய்தும் வெகுபொருள் சேகரித்து மனைவி மைந்தர் பந்துமித்திரர் புகழ்ந் துரைக்கும்படியான மேன்மையுடனே பொன்பொருள் பூஸ்திதி லாபத்துடனே பிரபுவாய் ஜீவித்திருப்பதற்காகும் (எ-று) 12

ரிஷபலக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

சுக்கிரனும் குரு ரிஷப லக்கினத்தில்
சூரியனுமிரண்டிலே புதனோடுற்று
பக்குவமாய் சந்திரனும் லக்னத்துச்சம்
பக்ஷமுடனே குஜனும் மகரத்துச்சம்
சிக்கிலா திருக்கையிலே கேதுமேஷம்
சேறுகின்ற ராகு துலாத்திருக்கும்போது

மிக்கவேவித்தைகற்று உத்தியோகஞ்செய்தும்
வியாபாரத்தாலும் பொருள் தேடுவாரே

(இ-ன்,) ரிஷபலக்கினத்தில் பிறந்தவர்கட்கு சுக்கிரனும் குருவும் ஜன்ம லக்கினத்திலிருக்க சூரியனும் சந்திரனும் புதபகவானும் இரண்டாமிடமாகிய மிதுனத்திலிருக்கவும் செவ்வாய் பகவான் மகரமாகிய பாக்கிய ஸ்தானத்திலிருக்கவும, கேது மேஷத்திலும் இராகு துலாராசியிலிருக்கும்போது பிறந்த ஜாதகன் சங்கீதம் இலக்கணம் ஜோதிடம் முதலான சாஸ்திர ஆராய்ச்சியிலும் தேறி கல்வி யிற்சியில் சிறந்தவனாய் உத்தியோகஞ் செய்தும், வியாபாரஞ் செய்தும் வெகு பொருள் சேகரிக்கும் திறமையுடைய வனாயிருப்பதற்காகும்

தேடுவான் திரவியங்கள் மிகவேசேர்த்து
தேசத்திலுள்ளோரின் பிரபுவாக
நாடுவான் மனைவிமைந்தர் சுற்றத்தோடு
நலமுடனே வாழ்ந்திருந்து சங்கீதமாக
பாடுவான் பகவானை புகழ்ந் தென்னாளும்
பலவிரதந் தானிருந்து பொன்பொருளும் சேர்த்து
வீடுகழனிகள் தான்யாதி லாபத்தோடும்
வெகுமேன்மையாகவே ஜீவிப்பான்

[இ-ன்.] அந்த ஜாதகன் பலவிதமாய் திரவிய சேகரஞ் செய்து உலகத்தி லிருப்போர்கள் பிரபுத் தன்மையுடையவனென மதிக்கக்கூடிய கீர்த்தியுடையவனாயிருந்து உத்தம மனைவி மைந்தர்களுடன், பந்துமித்திரர் புகழுந்தன்மையாக சங்கீத ஞானத்துடனே பகவானைபுகழ்ந்து பாடிக்கொண்டு விரதானுஷ்டானம் புரிந்து அன்னதானஞ் செய்து, ஆனந்தமாய்ப் பொன்பொருள் சேர்த்துக்கொண்டு வீடுகழனிகளும் தனதான்ய சம்பத்துடனும் வெகு மேன்மையாக ஜீவித்திருப்பதற்காகும் [எ-று]
14

சுக்கிரனும் கன்னியிலே நீசமாகி
சூரியனும் துலாவிலே நீசமானல்
சிக்குடனே புதன்ராகு அஷ்டமத்தில்
சேர்ந்திருக்க கேதிரண்டில் குருபன்னிரண்டில்

தக்கதாய் குஜன்மூன்றி லிருப்பாரானால்
சந்திரனும் சுகஆதானத்திலே யிருந்தால்
மிக்கவே கவலையுடன் வித்தையில்லா
மூடனெனும் தரித்திரனாய்த் திரிகுவானே

(இ-ன்.) ரிஷப லக்கினத்தில் பிறந்தவர்க்கு அந்த லக்னாதிபதியாகிய சுக்கிரன் ஐந்தாமிடமாகிய கன்னியிலே நீசமாயிருக்கவும். தன் குடும்ப வாக்குஸ்தானாதிபதியாகிய புதபகவான் இராகு பகவானுடனே சேர்ந்து அஷ்டமத்திலிருக்கவும் கேது இரண்டிலும், குரு பனிரெண்டாமிடத்திலும், செவ்வாய் மூன்றுமிடமாகிய கடகத்தில் நீசமாயிருக்க சந்திரன் சுகஸ்தானமாகிய சிம்மத்திலிருக்க, சுகாதிபதியாகிய சூரியன் ஆறுமிடமாகிய துலாராசியிலிருக்கும் போது ரிஷப லக்கினத்தில் பிறந்த ஜாதகர்களுக்கு துன்பமும் துயரமுமென்மேலும் பெருகி வறுமையாளராய் மனைவி மைந்தர் பந்து மித்திரரில்லாததரித்திர இம்சையடைந்துசதாகாலமும் மூடத்தன்மையாகஅன்னவஸ்திரமில்லாமல் அன்னபிக்ஷை எடுத்து ஜீவித்து கொண்டிருப்பான் (எ-று.)

அன்புடனே ரிஷபலக்னத்தில் பிறந்தால்
ஆதித்தன் காலில் செவ்வாயுடனிருக்க
பொன்னவனும் குருசுக்ரன் லாபத்துற்று
புதனைந்தில் ராகாறில் பனிரெண்டில் கேதுவும்
அன்னயமா யிருந்தாலே பலநூலோர்ந்து
நலமுடனே புராண பிரசங்கஞ் செய்து
பொன் பொருளும்சேர்த்து மனைவிமைந்தர் சுற்றிப்
பொருந்தியே வாழ்ந்திருப்பர் கவனிப்பீரே.

(இ-ன்.) ரிஷப லக்கினத்தில் பிறந்த ஜாதகர்கட்கு சூரியனும் செவ்வாயும்நான்காமிடமாகிய சுகஸ்தானத்திலிருக்க குருவும் சுக்கிரனும் பாபஸ்தானமாகிய பதினோருமிடத்திலி புதன் ஐந்தாமிடமாகிய கன்னியிலிருக்க இராகு ஆறிலும் கேது பனிரண்டிலும் இருந்தால் பலவித சாஸ்திர புராணங்களுக்கு இலக்கணம் ஜோதிடம் சங்கீதம் முதலானது கற்று

ணர்ந்து பலவிதமாய் திரவிய சேகரஞ் செய்து பொன் பொருள் பூஸ்திதியனைத்தும் பொருந்தி மனைவி மைந்தருடனே பந்துமித்திரர் புகழ்ந்துரைக்கும்படியான தனவந்தனுயிருப்பதற்காகும். 16

மிதுன லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

மனமகிழ்வாய் மிதுனலக்கினந்தனில் பிறந்தால்
மந்தன் சுக்ரன் வீரபக்தி யிருந்திட்டாலும்
தினகரனும் மதிபுதனும் குருவும் ரெண்டில்
செவ்வாயும் சேர்ந்திருந்தால் பலநூலோர்ந்து
தனதான்ய பத்து மிகவே சேர்ந்து
தரணியிலே விண்பாயஞ் செய்துநாளும்
மனைவிமைந்தர் பந்துமித்திரர் சுற்றத்தோடு
மாகஷிமையாய்ப் பிரபுவைப்போல் ஜீவிப்பாரே.

(இ-ன்) மிதுன லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு ரவியும் சுக்ரேபகவானும் விரயஸ்தானமாகிய பனிரெண்டாமிடத்திலிருந்தாலும் இரண்டாமிடமாகிய தனகுடும்ப வாக்கு ஸ்தானமாகிய கடகத்தில் சூரியன், சந்திரன், புதன், குரு, செவ்வாயும் சேர்ந்திருந்தால் பலவிதமாகிய சாஸ்திர புராணங்களும் கற்றுணர்ந்து இலக்கணம், சங்கீதம் ஜோதிடம், முதலானவைகளில் தேர்ந்த வித்வானாய் விளங்கி, உத்தியோக சம்பத்துடனும், வியாபாரலாபத்துடனும் புராணபிரசங்க சாதுரியத்துடனும் வெகுபொருள் சேகரித்து தனதானிய சம்பத்துடனும் மனைவிமைந்தர் பந்து மித்திரர் புகழ்ந்துரைக்கும்படியாக விண்டம்பமாய்ப்பொருள் செலவுசெய்துபொன்னாபரணம் அணிந்து கீர்த்திபிரகாசனாய் தரணியோர் புகழ்ந்துரைக்கும் தனவந்தனாயிருப்பதற்காகும் (எ-று) 17

அன்புடனே மிதுனத்தில் பிறந்திட்டோர்க்கு
அரவக வீராறு சஷ்ட மத்திருந்தும்

பொன்னவனும் மதிபுதனும் கடகத்துற்று
புகர்கும்பம் சனிலக்னந் தனிலிருந்தால்
நன்மையாய் வித்தைகற் றுத்யோகஞ் செய்தும்
நலமுடனே வியாபாரஞ் செய்தன்பாக
பொன்பொருளும் சேகரித்து மனைவிமைந்தரோடு
பிரபுவாய் வாழ்ந்திருப்பார் கவனிப்பீரே.

(இ-ன்) மிதுனலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு பனிரெண்டாமிடத்தில் கேதுபகவானும், சத்துருஸ்தானமாகிய ஆறுமிடத்தில் இராகுபகவானும், ஜனனலக்னத்தில் சனியும் குருவும், சந்திரனும் புதனும், சுக்கிரனும் தனவாக்கு குடும்பஸ்தானமாகிய கடகத்திலிருந்தால் ஜாதகன் பிறந்த நாளிலிருந்து சுகதேகியாய் கல்விகற்று உத்தியோக விர்த்தி, வியாபார லாபத்துடன் திரவியவந்தனுகி பொன் பொருள் பூஸ்திதியோடு வெகு கீர்த்திபிரகாசமாய் மனைவி மைந்தர்பந்துமித்ரருடனே பிரபுவாய் வாழ்ந்திருப்பதற்காகும் (எ-று) 18

மிதுனலக்னம் பிறந்தோர்க்கிரண்டில்மாலும்
மதிகுருவும் மூன்றில் சூரியனும்செவ்வாய்
மூதுமகனும் ராகுபனிரெண்டில்நிற்க
மூன்னாறில் கேதிருந்தால் சகோதரர்களாலே
நிதிமிகுந்து தனதான்ய சம்பத்தோடு
நீணிலத்தில் பொன்பொருளுஞ் சேகரித்து
அதிகாரஞ்செய்துமுத் யோகம்பெற்று
அவனியிலே பிரபுவாய் ஜீவிப்பாரே.

(இ-ன்) மிதுனலக்னத்தில் பிறந்த ஜாதகருக்கு இரண்டில் சந்திரன், குரு, புதனிருக்கவும், சூரியனும் செவ்வாயும் மூன்றுமிடத்திலிருக்க இராகு பனிரெண்டிலும், ஆறுமிடத்தில் கேதுமிருந்தால் இலக்கணம் ஜோதிஷம் சங்கீதமும் கற்றுணர்ந்து வெகுபொருள் சேகரிக்குந்தன்மையும், தனது

சகோதரர்களின் சகாயத்தால் வெகு கீர்த்திவந்தனாய் வியாபாரத்தினால் தனவந்தனாயிருந்து பொன்பொருள் சேகரித்து அதிகார உத்தியோகஞ்செய்து மகா சமர்த்தனாக மனைவி மைந்தர் பந்துமித்திரர்புகழுந்தன்மையான பிரபுவாய் ஜீவித்திருப்பதற்காகும் (எ-று) 19

ஜன்மலக்னம் மிதுனமாயமைந்திருக்க
சனிஐந்தில் மூன்றில்புதன ரவியோடுற்று
பொன்னவன் லக்கினத்திருந்து ராகுபத்தில்
பொருந்தியே கேதுநாலில் சுக்ரன்ரெண்டில்
மன்னுபுகழ் செவ்வாயும் மேஷத்துற்று
மதி ஆக்ஷியாகவே கடகத்துற்றால்
பொன்பொருளுமிருந்தாலுமைந்தரில்லா
பிரபுவாய் காண்போர்முன் விளங்குவாரே

(இ-ள்) ஜன்மலக்னம் மிதுனமாயிருக்கும்போது இலக்கினாதிபதியாகிய புதன்மூன்றில் சூரியனுடனே சேர்ந்திருக்க ஐந்தில் ரவியும் சனியும், இராகுபத்தாமிடத்திலும் செவ்வாய் பதினோராமிடத்திலும் சுக்கிரனும் சந்திரனும், இரண்டாமிடத்திலும், கேது நான்காமிடத்திலுமிருந்தால் அந்த ஜாதகன்கல்வியில் தேர்ச்சியடைந்து உத்தியோகஞ்செய்து வெகு பொருள் சேகரித்தும் கீர்த்திப்ரகாசனாயிருந்தாலும் தாய்தந்தை மைந்தரில்லாமல் மனக்கவலையடைந்து பகவத் பக்தி ஆனந்தமாய் ஆசார அனுஷ்டானத்துடன் சுகிகரமாய் அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமில்லாமல் சதாசுகமாய்ஜீவித்திருப்பதற்காகும் (எ-று) 20

புதன்ஜன்ம லக்கினம் மிதுனத்திலிருந்து
பொன்னவனும் பத்தில்நிற்க ரவியும்ரெண்டில்
பதினொன்றில் செவ்வாயும் பனிரெண்டில்ராகும்
புகர்மதியும், நாலிலுற்றால் ஆறில்மந்தன் கேதும்

இதமுடனே யிருந்தால் ஜாதகரானோர்கள்
இலக்கணமும் ஜோதிஷமும் சங்கீதவித்தை
அதிகமாய்க்கற்று பொருள்சேகரித்து
அவனியில் பிரபுவாய் ஜீவிப்பாரே,

(இ-ள்) மிதுனலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு புதன் லக்னத்திலும், குரு ஜீவனஸ்தானத்திலும் இலாபஸ்தானத்தில் செவ்வாயும், விரயஸ்தானத்தில் ராகும், சந்திரன் சுக்ரனும் சுகஸ்தானத்திலும், ஆறுமிடத்தில் கேதும் சனியுமிருந்தால் அந்த ஜாதகன் வித்யாபி விர்த்தியுடன் ஜோதிஷம் சங்கீதம் இலக்கணவித்தை யனைத்தும் கற்றுணர்ந்து இராசாங்க உத்தியோகஞ்செய்து வெகுபொருள் சேகரித்து பிரபுவாய் ஜீவித்திருப்பதற்காகும் (எ-று) 21

கடக லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

அன்புடன் கடகந்தன்னில் அந்தணன் சசியும்சூரியன்
இன்புடன் கடகத்துற்றால் இசைந்தபொன் பொருளும்பூமி
நன்மையாய் பெற்றுவாழ்ந்து நலமுறும்மனைவிமைந்தர்
அன்பான சுற்றத்தோடும் அவனியில்வாழ்குவாரே

(இ-ள்) கடகலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு ஜன்மலக்கினத்தில் குருவும், சந்திரனுமிருக்கும்போது, பிறந்தவர்கள் உத்தமர்களாய்ப்பலவிதமாய் திரவிய சேகரஞ்செய்து பொன்பொருள் பூஸ்திதியுடனே உத்தமபந்துமித்திரர் மனைவிமைந்தர்களுடன் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள் (எ-று) 22

கடகத்தில் புதனும் சேயும் கதிரவன்கேதுநிற்க
விடநாகன் ஏழில்நிற்க உச்சமாய் சனியும்நாலில்
இடமுடனிருப்பாரானால் ஜென்மமேகடகமானால்
இடமில்லா வறுமையாலே இரந்துண்பானுலகில்தானே

(இ-ள்) கடகலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு, புதனும், செவ்வாய் சூரியன், சுக்கிரன், கேதுமிருக்க, ஏழாமிடத்தில் இராகு நிற்க. சனி நான்காமிடத்திலிருந்து ஜனனலக்னத்தை பார்த்தால் ஜாதகன் தாய் தந்தையைப்பிரிந்து வறுமையானனாய் சதாகாலமும் துக்கமும் துயரமாயிருப்பதுடன் அனுதினமும் ஐயமேற்றுண்டு அவனியில் அலைந்து திரிவதற்காகும் (எ-று) 23

சிம்ம லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

சிம்மத்தில் ராகு மந்தன் சேய்புகர் விரயமானால்
பங்கமா யுதித்தோர்நாளும் பலதுன்ப மனுபவிப்பார்
துங்கமாய்பருதிமாலும் ஜன்மம் துலாவினில் சனியிருந்
மங்களானந்தமாகமனைவிமைந்தருடனேவாழ்வார் (நால்

(இ-ள்) சிம்மலக்கினத்தில் பிறந்த ஜாதகருக்கு இராகு சனிலக்கினத்திலும், செவ்வாயும் சுக்கிரனும் விரயஸ்தானத்திலிருந்தால் ஜாதகன் பலவித துன்பமனுபவிப்பதற்காகும் ஆனால் சிம்மலக்கினத்தில் சூரியனும் புதனுமிருக்க துலா ராசியில் சனி உச்சம் பெற்றிருக்கும்போது பிறந்த ஜாதகன் பலவிதமாய் திரவியசேகரஞ்செய்து தன தானிய சம்பத்துடன் மனைவிமைந்தர்பந்து மித்திரர்களுடனே சுக ஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள் (எ-று) 24

கன்னியாலக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

கன்னியில்புகரும் ராகும் கதிரவன் சனிசேய்ஜன்மம்
நின்றிடில் பிறந்தோரெல்லாம் நிலையிலா கலங்குவார்கள்
பொன்னவன் புதனுஞ்சந்திரன் பொருந்திகன்னியில் நின்று
பொன்பொருள்பூமிபாக்கியம்பொருந்தியேவாழ்குவாரே (லே

(இ-ள்) கன்னியாலக்கினத்தில் சுக்கிரனும் ராகும் சூரியன் சனி செவ்வாயிருந்தால் அந்த ஜாதகர் பலவிதமாய் துயரமுற்றலைவார்கள் ஆனால் குரு புதன் சந்திரனும் கன்னியா லக்கினத்திலிருக்கும்போது பிறந்தஜாதகர் மகாசமர்த்துடன் வியாபாரஞ்செய்து வெகுபொருள் சேகரித்து பொன் பொருள் பூஸ்திதியுடன் உத்தம பந்துமித்திரர் மனைவிமைந்தர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள் 25

துலா லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

துலாவினில் சூரியன் கன்னி சுக்கிரன் மந்தன்மேஷம்
நலமிலாதிருப்பாரானால் நலிகுவான் ஜாதகன்தான்
நிலையுடன்புகருமந்தன் நின்றிடில் அலங்கலன்பாய்
பலபொருள்சேகரித்து பார்மீதுவாழ்குவாரே

(இ-ள்) துலாலக்கினத்தில் சூரியனும் கன்னியில் சுக்கிரனும் மேஷத்தில் சனியுமிருக்கும்போது பிறந்த ஜாதகன் பலவிதுன்பமனுபவிப்பதற்காகும் ஆனால், துலாலக்கினத்தில் சுக்கிரனும், சனியுமிருக்கும்போது பிறந்த ஜாதகன் பொன்பொருள் பூஸ்திதியுடன் பந்துமித்திரர் மனைவிமைந்தருடன் வாழ்ந்திருப்பார்கள் (எ-று) 26

விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

விருச்சிகலக்கினத்தில் சந்திரன் வேதனும் மகாதேவி
தரித்திடும் லக்கினத்தீதான் தரித்திரமாயிருப்பான்
குருசரண்டில் குஜனும்லக்னம் கோரியே நிற்பாரானால்
பொருளுடன் பூமிலாபம் பொருந்தியே வாழ்குவாரே

(இ-ள்) விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சந்திரன் ஜன்மத்திலும் குருஷஷ்டிலிருந்தால் ஜாதகன் வறுமையாளனாயிருப்பதற்காகும், ஆனால், செவ்வாய் விருச்சிக லக்கினத்திலும் குரு தனுசிலுமிருந்தால் ஜாதகர் பிரபுத்தன்மையாய் பொன் பொருள் பூஸ்திதி மனைவிமைந்தர்களுடன் பிரபுத்தன்மையாய் வாழ்ந்திருப்பார் (எ-று) 27

தனுசு லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

தனுசினில் சேயன்சுக்ரன் சனிராகுமாலிருக்க
ஜனித்தவர் வறுமையாவார் ஜன்மத்தில் குருவும்சந்திரன்
தினகரமிருப்பாராகில் திரவியஞ் சேகரித்து
மனைவிமைந்தர் சுற்றத்தார் மகிழ்வுடன் வாழ்ந்தவாரே

(இ-ள்) தனுசு லக்கினத்தில் செவ்வாயும் சுக்கிரனும் ராகு புதனுமிருந்தால் அந்த ஜாதகன் சதா வறுமையாளனா யிருப்பதற்காகும், ஆனால் தனுசு லக்கினத்தில் குரு சந்திரன சூரியனுமிருந்தால் ஜாதகன் வியாபார விருத்தியும் செவ்வ பொருள் சேகரித்து மனைவிமைந்தருடனே வாழ்ந்திருப்பதற் காகும் (எ-று)

மகர லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

மகரத்தில் குரு ராகுநிற்க மாலிகதிர் ஏழிலுற்றால்
ஜகந்தனில் பிறந்தவர்க்கு சஞ்சலம் வறுமையுண்டாம்
புகழ்சனி சேயும் சுக்ரன் பொருந்தியே மகரத்துற்றால்
மகிழுடன் தனவானாக மனைவி மைந்தருடன் வாழ்வாரே

(இ-ள்) மகர லக்கினத்தில் பிறந்த ஜாதகர்களுக்கு குருவும் ராகும் லக்கினத்திலும் புதனும் சூரியனும் ஏழிலுமிருந்தால் அந்த ஜாதகன் சதா சஞ்சலமும் வறுமையும் பொருந்தியவனுயிருப்பதற்காகும், ஆனால் சனியும், செவ்வாய் சுக்கிரனும மகர லக்கினத்திலேயே இருக்கும்போது பிறந்தவர்கள தனதான்ய சம்பத்துடன் மனைவி மைந்தர்களுடன் வாழ்ந்திருப்பதற்காகும். 20

கும்ப லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

கும்பத்தில் சனிசேய்நிற்க குரு விரயத்தில்நிற்க
சிம்மத்தில் சனிநின்றாலே தீராத வறுமையுண்டாம்
வப்பிலாமந்தன் லக்னம் வியாழனும் ரெண்டில்நின்றால்
அம்புவியோர்கள் மெச்சும் ஐஸ்வரியத்துடனே வாழ்வார்

(இ-ள்)கும்பலக்கினத்தில் பிறந்தஜாதகனுக்கு சூரியன் செவ்வாய் ஜன்ம லக்கினத்திலும்,குரு விரயஸ்தானத்திலும் சனி ஏழாமிடமாகிய சிம்மத்திலுமிருந்தால் அந்த ஜாதக னுக்கு தீராதவறுமையினால் கஷ்டப்படுவதற்காகும் ஆனால் சனி லக்கினத்திலும், இரண்டில் குருவுமிருந்தால் உலகோர் மெச்சும் தனவானாயிருப்பதற்காகும். ()

மீன லக்கினத்தில் பிறந்தவர்களின் பலன் விபரம்

மீனத்தில்மந்தன்மாலும் வேந்தனும் துலாவில்நிற்க
ஈனமாம் ஜாதகர்க்கு இசைந்தமீனத்தில் பொன்னும்
ஆனதோர் ரவியும் ரெண்டில் அமைந்திடில் பந்துமித்திரர்
காணவே தனவானாக காசினிதனில் வாழ்வாரே

(இ-ன்) மீனலக்கினத்தில் பிறந்த ஜாதகர்களுக்கு உதைய லக்கினத்தில் சனியும், புதனுமிருக்க குரு அஷ்டமஸ்தான மாகிய துலாராசியிலிருந்தால் ஜாதகன் ஈனதிசையாகிய வறுமையினால் கலங்குவதாகும், ஆனால், குரு ஜனன லக்கினத் திலும் இரண்டாமிடத்தில் சூரியனுமிருந்தால் அந்த ஜாதகன் திரவிய வந்தனுயிருப்பதுடன் தனது பந்து மித்திரர் புகழுந் தன்மையாய் வாழ்ந்திருப்பதற்காகும் (எ று.) 32

சீஷன் சொல்வது

குருநாதா! தாங்கள் புகன்ற விதமே கவனித்திடினும் மனித வகுப்பார்களின் வாழ்நாளைக் குறிப்பிடும் வருஷம் மாதம், கிழமை, பக்ஷம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரண மென்னும் விபரத்தை அடியேனுக்கு விபரமாய்ப் புகல்வீர்-

குரு சொல்வது

அப்படியே சொல்கின்றேன் ஒவ்வொன்றும் விபர மாய்க் கவனிப்பாய்.

வருஷங்கள் 60.

பிரபவ	சித்திரபானு	ஏவிளம்பி	பரிதாபி 72
விபவ	சுபானு	விளம்பி 58	பிரமாதீச 73
சுக்கில	தாரண	விகாரி 59	ஆனந்த 74
பிரமோதூத	பார்த்திப	சார்வரி 60	இராக்ஷச 75
பிரஜோற்பத்	விய	பிலவ 61	நள 76
ஆங்கிரச [தி	சர்வஜித்து	சுபகிருது 62	பிங்கள 77
ஸ்ரீமுக	சர்வதாரி	சோபகிருது 63	காளயுக்தி 78
பவ	விரோதி	குரோதி 64	சித்தாத்திரி 79
யுவ	விக்ருதி	விசுவாவசு 65	ரௌத்திரி 80
தாது	கர	பராபவ 66	துன்மதி 81
ஈஸ்வர	நந்தன	பிலவங்க 67	துந்துபி 82
வெகுதான்ய	விஜய	கீலக 68	ருத்திரோற்கா 83
பிரமாதி	ஜய	சௌமிய 69	ரத்தாக்ஷி [ரி 1984
விக்ரம	மன்மத	சாதாரண 70	குரோதன
விஷு	துன்முகி	விரோதிகிருது 71	அக்ஷய

ஆக மொத்தம் வருஷங்கள் 60 ஆகும்

மாதங்கள் 12

சித்திரை	ஆடி	ஐப்பசி	தை
வைகாசி	ஆவணி	கார்த்திகை	மாசி
ஆனி	புரட்டாசி	மார்கழி	பங்குனி

வாரங்கள் 7.

ஞாயிறு	செவ்வாய்	வியாழன்	சனி
திங்கள்	புதன்	வெள்ளி	

ஆக 7

திதிகள் 15

பிரதமை	சஷ்டி	ஏகாதசி
துவிதியை	சப்தமி	துவாதசி
திரிதியை	அஷ்டமி	திரயோதசி
சதுர்த்தி	நவமி	சதுர்தசி
பஞ்சமி	தசமி	அமாவாசை

தேய்பிறையிலிருந்து கடைசிதினம் அமாவாசையாகும்
வளர்பிறையிலிருந்து கடைசிதினம் பௌர்ணமியாகும்

யோகங்கள் 27.

விஷ்கம்பம்	திருதி	வச்சிரம்	சாக்கியம்
பிரீதி	சூலம்	சித்தி	சுபம்
ஆயுஷ்மான்	கண்டம்	விதிபாதம்	சுப்பிரமம்
சவுபாக்கியம்	விருத்தி	வரியான்	பிரமம்
சோபனம்	துருவம்	பரிகம்	ஐந்திரம்
அதிகண்டம்	வியகாதம்	சிவம்	வைதிருதி
சுகர்மம்	அரிஷணம்	சித்தம்	ஆக 27

கரணங்கள் 12

பவம்	தைதுலை	பத்திரை	நாகவம்
பாலவம்	கரசை	சகுனி	கிமிஸ்துக்கி
கௌலவம்	வணசை	சதுஷ்பாதம்	ஆக 12 [னம்

இவ்விதமே வருஷம், மாதம், வாரம், திதி, நக்ஷத்திரம் யோகங்களனைத்தும் வ்பரமாய் பஞ்சாங்கத்திலுள்ள விதமாகவே கவனித்து கொண்டு அந்த ஜாதகன் பிறந்த மணி, வேளையை, நாழிகையாக பெருக்கினால் ஜனன காலத்தில் சூரியோதயநாழிகை இவ்வளவாச்சு தென்று தெரியும்.

அதன்படியே லக்கினம் கணிக்கவேண்டும், அதெவ்விதமெனில்

இங்கிலீஷ் மணி 1க்கு 2½ நாழிகையாகும். இங்கிலாந்தில் இரவு 12 மணிக்குமேல் சூரியன் உதயமாவதால் அச்சமயத்திலிருந்து 1, 2, 3, 4, 5, 6, மணி ஆனபிறகு இந்தியாவில் சூரியன் உதயமாவதால் அந்த 6 மணிக்குமேல் சூரியன் உதயமென்று 1 நாழியாக தொகுக்க வேண்டும் அதெவ்விதமெனில்:- ஓர்ஜாதகன் காலை 8 மணிக்கு பிறந்தால்மணி 1க்கு 2½ நாழிகை ஆக காலை 8 மணிக்கு 5 நாழிகையாகும் இவ்விதமே அந்தந்த தேதியில் ஜாதகன் பிறந்த அந்தந்த மணியின் பிரகாரம் மேற்குறிப்பித்தபடியே நாழிகையாகச் செய்து எந்த நாழிகையில் எந்தலக்கினம் வருகிறதோ அந்தந்தலக்

இனமே ஜனனலக்கினமென்று அமைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதமாய் ஜனனலக்கினம் நிச்சயித்துக்கொண்டபிறகு ஜனனலக்கினமேமுதல் வீடும்மற்றவை 2—3—4—5 6—7—8—9—10—11—12 என்று தீர்மானஞ்செய்து கொள்ளவேண்டும். ஓர் ஜாதகனுக்கு ஜாதகங்கணிக்கும் போது 4வது பேஜியில் குறிப்பித்தபடியே மகரலக்கினத்தில் உதய லக்கினமானால்

இலக்கினங்களின் விபரம்

1 வது லக்கினம் ஜாதகன் பிறந்த உதய லக்கினஸ்தானம்
2 வது ,, தனம், வாக்கு, குடும்பம், பத்திஸ்தானம்
3 வது ,, பின் சகோதரம், தீரம் தைரியஸ்தானம்,
4 வது ,, சுகம், வித்தை பூமி வாகனம் மாதுருஸ்தானம்
5 வது ,, புத்திரஸ்தானம் பெண்புத்ரி ஆண்புத்திர ,,
6 வது ,, சத்துருஸ்தானம் மாரகஸ்தானம்
7 வது ,, களஸ்திரஸ்தானம் மாரகஸ்தானம்
8 வது ,, ஆயுஸ்தானம் மாரகஸ்தானம்
9 வது ,, பாக்கியஸ்தானம் பிதுர்ஸ்தானம்தர்மஸ்தானம்
10வது ,, ஜீவனம் தொழில் முதலான கர்மஸ்தானம்
11-வது ,, இலாபம், வருமானம், மூத்தசகோதரஸ்தானம்
12-வது ,, விரயம், செலவு, சயனம், மாரகஸ்தானம்

இவ்விதமே இலக்கினத்தின் முதல்வீட்டிலிருந்து 12 ஸ்தான பலன்களையும் கவனித்துக்கொண்டு அந்தந்த ஸ்தானங்களில் நவகிரகங்களிருப்பதுபோல பலன் தருவார்கள்

இலக்கினங்கள் 12.

மேஷம் $4\frac{1}{4}$	கடகம் $5\frac{1}{2}$	துலாம் 5	மகரம் $5\frac{1}{4}$	ஆக மொ
ரிஷபம் $4\frac{3}{4}$	சிங்கம் $5\frac{1}{4}$	விருச்சி. $5\frac{1}{4}$	கும்பம் $4\frac{3}{4}$	த்தம் 60
மிதுனம் $5\frac{1}{4}$	கன்னி 5	தனுசு $5\frac{1}{2}$	மீனம் $4\frac{1}{4}$	நாழிகை.

ஆக மொத்தம் சூரியோதயத்திலிருந்து மறுதினம் சூரியோதயம்வரும் வரையிலும் 60 நாழிகையிலும் 12 லக்கினம் ஏற்படும் அதுதான் ஜாதகன் பிறந்த ஜன்மலக்கினமாகும்

ஆனால், இராசியின் விபரமெவ்விதமென்றால், 6 வது பேஜியில் குறிப்பித்தபடியே அன்றையதினத்தில் சந்திரன் எந்த நக்ஷத்திரத்திலிருக்கின்றாரோ அதையே ஜன்மராசியாக கொள்ளவேண்டும் 6 வது பேஜியில் குறிப்பித்திருக்கும் விதமே ஜாதகன் பிறந்ததேதியில் பஞ்சாங்கத்தில் குறிப்பித்திருக்கும் நக்ஷத்திரத்தின் பாதசாரங்களில் எந்த நக்ஷத்திர பாதசாரங்களில் சந்திரனிருக்கின்றாரோ அந்தநக்ஷத்திரமிருக்கும் இராசியையே ஜன்மராசியாகவே மதித்துபலன்சொல்ல வேண்டும். அந்த நக்ஷத்திரங்களின் பெயர்கள் அடியில் வருவதை கவனிக்கவும்,

நக்ஷத்திரங்கள் 27.

அஸ்வனி	பூசம்	சுவாதி	திருவோணம்
பரணி	ஆயிலியம்	விசாகம்	அவிட்டம்
கிர்த்திகை	மகம்	அனுஷம்	சதயம்
ரோகணி	பூரம்	கேட்டை	பூரட்டாதி
மிருகசீரிடம்	உத்திரம்	மூலம்	உத்திரட்டாதி
திருவாதிரை	அஸ்தம்	பூராடம்	ரேவதி
புனர்பூசம்	சித்திரை	உத்திராடம்	ஆக 27

இந்த 27—நக்ஷத்திரங்களில் சந்திரனிருக்கும் விபரம்

அஸ்வனி 1 பரணி 1 கிர்த்திகை $\frac{1}{4}$ மேஷம் சரராசி
கிர்த்திகை $\frac{3}{4}$, ரோகணி 1 மிருகசீரிடம் $\frac{1}{2}$ ரிஷபம் ஸ்திரராசி
மிருகசீரிடம் $\frac{1}{2}$ திருவாதிரை 1 புனர்பூசம் $\frac{3}{4}$ மிதுனம் உபயராசி
புனர்பூசம் $\frac{1}{2}$ பூசம் 1 ஆயிலியம் 1 கடகம் சரராசி
மகம் 1 பூசம் 1 உத்திரம் $\frac{1}{4}$ சிங்கம் ஸ்திரராசி
உத்திரம் $\frac{3}{4}$ அஸ்தம் 1 சித்திரை $\frac{1}{2}$ கன்னி உபயராசி

சித்திரை$\frac{1}{2}$ சுவாதி1 விசாகம்$\frac{3}{4}$ துலாம் சரராசி
விசாகம்$\frac{1}{4}$ அனுசம்1 கேட்டை1 விருச்சிகம் ஸ்திரராசி
மூலம்1 பூராடம்1 உத்திராடம்$\frac{1}{4}$ தனுசு உபயராசி
உத்திராடம்$\frac{3}{4}$ திருவோணம்1 அவிட்டம்$\frac{1}{2}$ மகரம் சரராசி
அவிட்டம்$\frac{1}{2}$ சதயம்1 பூரட்டாதி$\frac{3}{4}$ கும்பம் ஸ்திரராசி
பூரட்டாதி$\frac{1}{4}$ உத்திரட்டாதி1 ரேவதி1 மீனம் உபயராசி

ஆகையால் இந்த பனிரெண்டு ராசியிலும் நவக்கிரகங்களாகிய சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேது இந்த ஒன்பதுபேரும் இருக்குங்காலம் எவவளவென்றல்,

12 இராசியிலும் 9 கிரகங்கள் சஞ்சரிக்கும் காலம் விபரம்

சூரியன் 1 மாதம்	சனி $2\frac{1}{2}$ வருஷம்
சந்திரன் $2\frac{1}{4}$ நாள்	இராகு $1\frac{1}{2}$ வருஷம்
செவ்வாய் $1\frac{1}{2}$ மாதம்	கேது $1\frac{1}{2}$ வருஷம்
புதன் 1 மாதம்	இவ்விதமாய் மேற்குறிப்பிட்ட இராசிகளில் பிரவேசிப்பார்கள்
குரு 1 வருஷம்	
சுக்கிரன் 1 மாதம்	

நவக்கிரகங்களின் பெயர்கள் விபரம்

சூரியன் பெயர் — தினகரன் ரவி பருதி கதிர் வெய்யோன முதலானவை.

சந்திரன் பெயர்—சோமன் சசி மதி திங்கள் நிலவு முதலானவை.

செவ்வாய் பெயர்—குஜன் சேய் நிலமகன் முதலானவை

புதன்பெயர்—மால் மதிமகன் புந்தி முதலானவை

குருவின் பெயர்— அந்தணன் சுரகுரு வியாழன் மந்திரி தேவகுரு வேந்தன் அரசன் இறைவன் முதலானவை.

சுக்கிரன் பெயர்—புகர், வெள்ளி, சுங்கன், அசுரகுரு முதலானவை

சனியின் பெயர்—காரி, நிலன், மந்தன், முடவன், முதுமகன் கதிர்மகன் முதலானவை

இராகுவின் பெயர் — கரும்பாம்பு. அகி, அரவு, நாகன் பாம்பு முதலானவை

கேதுவின் பெயர்—சிகி, அரவு, செம்பாம்பு, முதலானவை

இவ்விதமே நவக்கிரகங்கள் ஒன்பது பேருக்கும் பெயரமைந்திருக்குமென்று மகான்கள் சொல்லிய பெருநூலாகிய ஜோதிஷ சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறதென்றுணர்வீர்கள்

12 ஸ்தான விபரம்

உலகிலிருக்கும் ஜாதகர்களுக்கு ஜனன லக்கினத்திலிருந்து 1,2,3,4,5,6,7,8,9,10,11,12ம் இடமென்னும் துவாதஸ ஸ்தானங்களில்,

1,4,7,10ம்	ஸ்தானம்	கேந்திரஸ்தானம்
1,5,9ம்	,,	கோண, திரிகோணஸ்தானம்
2,5,8,11ம்	,,	பணபரஸ்தானம்
3,6,9,12ம்	,,	ஆபோக்லீயஸ்தானம்
3,6,10,11ம்	,,	உபசயஸ்தானம்
3,8	,,	ஆயுள்ஸ்தானம்
2,7,11,	,,	மாரகஸ்தானம்
12ம்	,,	விரயம். சயனஸ்தானம்
1,4,7,10	,,	இந்த ஜன்மம்
2,5,8,11	,,	முன் ஜன்மம்
3,6,9,12	,,	வருகிற ஜன்மம்

இவ்விதமே மேற்குறிப்பித்த ஸ்தானங்களில் கிரகங்கள் ஜனன காலத்தில் பனிரெண்டு ஸ்தானங்களில் எந்தெந்த ஸ்தானங்களிலிருக்கின்றார்களோ அந்தந்த ஸ்தான பலனையே தருவார்கள்

நவக்கிரகங்கள் ஒன்றுக்கொன்று சமமென்னும் விபரத்தைக் கவனித்து எந்தெந்த ஸ்தானத்தில் எந்தெந்த கிரகங்கள் சேர்ந்திருக்கின்றார்களோ யென்பதை கவனித்து பலன் சொல்லும்போது பகை கிரகங்கள் எந்தெந்த ஸ்தானத்தில் சேர்ந்திருந்தாலும் ஜாதகர்கட்குப் பலவிதமான கஷ்டமும் கவலையும் பகைவரால் துபரமு முண்டாகும் நட்பு கிரகங்களுடன் நட்புக்கிரகங்கள் சேர்ந்திருந்தால் சகல நம் ஜாதகர்களுக்குச்சகாயமாகவே யிருந்து நன்மைசெய்வாகள் சமக்கிரகங்களுடனே சமக்கிரகங்கள் சேர்ந்திருந்தால் ஜாதகர் சமபலனையே அனுபவிப்பார்கள்

0 நவக்கிரகங்களின் நட்பு கிரகங்கள் விபரம்

சூரியனுக்கு—சந்திரன், செவ்வாய், குருவும் நட்பாகும்
சந்திரனுக்கு—சூரியனும், புதனும், நட்பாகும்
செவ்வாய்க்கு—சூரியனும், சந்திரனும், குருவும் நட்பாகும்
புதனுக்கு—சூரியனும், சுக்கிரனும் நட்பாகும்
குருவுக்கு—சூரியன், சந்திரனும் செவ்வாய் நட்பாகும்
சுக்கிரனுக்கு—புதனும், சனியும் நட்பாகும்
சனிக்கு—புதனும், சுக்கிரனும் நட்பாகும்
இராகுவுக்கு—சுக்கிரன், குரு, சனியும் நட்பாகும்
கேதுக்கு—செவ்வாய், சுக்கிரன், சனியும் நட்பாகும்

* நவக்கிரகங்களின் பகை கிரகங்கள் விபரம்

சூரியனுக்கு—சுக்கிரன், சனி, ராகு, கேது பகையாகும்
சந்திரனுக்கு—ராகு, கேதும் பகையாகும்
செவ்வாய்க்கு—புதன், சந்திரன் பகையாகும்
புதனுக்கு—சந்திரனும், செவ்வாயும பகையாகும்
குருவுக்கு—சுக்கிரனும், புதனும் பகையாகும்
சுக்கிரனுக்கு—சூரியனும், செவ்வாயும் பகையாகும்
சனிக்கு—சூரியன் சந்திரன், செவ்வாயும் பகையாகும்
இராகுவுக்கு—சூரியன, சந்திரன் பகையாகும்
கேதுவுக்கு—சூரியன், சந்திரன் பகையாகும்

நவக்கிரகங்களின் சமமான கிரகங்கள் விபரம்

சூரியனுக்கு புதனும், சந்திரனுக்கு சுக்கிரனும், சனியும் செவ்வாய்க்கு சுக்கிரனும், சனியும், குருவுக்கு சனியும், சுக்கிரனுக்கு செவ்வாய், குருவும், சனிக்குகுருவும், இராகுவுக்கு புதனகேதும் சமமானவர்களாகும், இவர்கள்சேர்ந்திருந்தால் ஜாதகருககு சமமான பலன் கொடுக்கும்

நவக்கிரக மகாதிசைகளின் விபரம்

கிர்த்திகை உத்திரம் உத்திராடம்—சூரியதிசை—	6	வருஷம்
ரோகணி அஸ்தம் திருவோணம்—சந்திரதிசை—	10	,,
மிருகசீரிடம் சித்திரை அவிட்டம்—செவ்வாய்—	7	,,
திருவாதிரை சுவாதி சதயம்—ராகுதிசை—	18	,,
புனர்பூசம் விசாகம் பூரட்டாதி—குருதிசை	18	,,
பூசம் அனுஷம் உத்திரட்டாதி—சனிதிசை—	16	,,
ஆயிலியம் கேட்டை ரேவதி—புததிசை	19	,,
அசுவணி மகம் மூலம்—கேதுதிசை—	7	,,
பரணி பூரம் பூராடம்—சுக்கிரதிசை—	20	,,

0 நட்பு சினேகம் * பகை சத்துரு

நவக்கிரகங்களின் உச்ச, நீச, சத்துரு, மித்துரு இராசிகளின் விபரம்

மீனம்		மேஷம		ரிஷபம்		மிதுனம்	
சூரியன்,	நட்பு	சூரியன்	உச்சம்	சூரியன்	பகை	சூரியன்	சமம்
சந்திரன்	சமம்	சந்திரன்	சமம்	சந்திரன்	உச்சம்	சந்திரன்	நட்பு
செவ்வாய்	நட்பு	செவ்வா	ஆட்சி	செவ்வாய்	சமம்	செவ்வாய்	பகை
புதன்	நீச்சம்	புதன்	சமம்	புதன்	நட்பு	புதன்	ஆட்சி
வியாழன்	ஆட்சி	வியாழன்	நட்பு	வியாழன்	பகை	வியாழன்	பகை
வெள்ளி	உச்சம்	வெள்ளி	சமம்	வெள்ளி	ஆட்சி	வெள்ளி	நட்பு
சனி	சமம்	சனி	நீசம்	சனி	நட்பு	சனி	நட்பு
ரா-கே	நட்பு	ரா-கே	பகை	ரா-கே	நீச்சம்	ரா-கே	நட்பு

கும்பம்	
சூரியன்	பகை
சந்திரன்	சமம்
செவ்வாய்	சமம்
புதன்	சமம்
வியாழன்	சமம்
வெள்ளி	நட்பு
சனி	ஆட்சி
ரா-கே	பகை

மகரம்	
சூரியன்	பகை
சந்திரன்	சமம்
செவ்வா	உச்சம்
புதன்	சமம்
வியாழன்	நீசம்
வெள்ளி	நட்பு
சனி	ஆட்சி
ரா-கே	பகை

ஆக்ஷி—சொந்தவீடு, முழுபலன் கொடுப்பார்.

உச்சம்—உயர்ந்தவீடு, 1½பலன் கொடுப்பார்

நட்பு—சினேகவீடு, ¾பலன் கொடுப்பார்.

பகை—சத்துருவீடு ¼பலன் கொடுப்பார்.

நீசம்—தாழ்ந்தவீடு, ½பலன்கொடுப்பார்.

சமம்—சமானமான பலன் கொடுப்பார்.

இவ்விதமாய் கிரகங்களிருக்கும் இராசி ஸ்தானத்திற்கிசைந்தவிதமாய் நவக்கிரகங்கள் பலன் கொடுப்பார்கள்.

கடகம்	
சூரியன்	நட்பு
சந்திரன்	ஆட்சி
செவ்வாய்	நீசம்
புதன்	பகை
வியாழன்	உச்சம்
வெள்ளி	பகை
சனி	பகை
ரா கே	பகை

சிம்மம்	
சூரியன்	ஆட்சி
சந்திரன்	நட்பு
செவ்வாய்	நட்பு
புதன்	நட்பு
வியாழன்	நட்பு
வெள்ளி	பகை
சனி	பகை
ரா,கே	பகை

தனுசு		விருச்சிகம்		துலாம்		கன்னி	
சூரியன்	நட்பு	சூரியன்	நட்பு	சூரியன்	நீசம்	சூரியன்	சமம்
சந்திரன்	சமம்	சந்திரன்	நீசம்	சந்திரன்	சமம்	சந்திரன்	நட்பு
செவ்வாய்	நட்பு	செவவா	ஆட்சி	செவ்வாய்	சமம்	செவ்வாய்	பகை
புதன்	சமம்	புதன்	சமம்	புதன்	நட்பு	புதன்	ஆட்சி
வியாழன்	ஆட்சி	வியாழன்	நட்பு	வியாழன்	பகை	வியாழன்	பகை
வெள்ளி	சமம்	வெள்ளி	சமம்	வெள்ளி	ஆட்சி	வெள்ளி	நீசம்
சனி	சமம்	சனி	பகை	சனி	உச்சம்	சனி	நட்பு
ரா-கே	நட்பு	ரா-கே	உச்சம்	ரா கே	நட்பு	ரா கே	நட்பு

நவக்கிரகங்கள் திசாபுத்திகளின் விபரம்

கிருத்திகை உத்திரம் உத்திராடம்
சூரியதிசை ௵ 6

புத்தி	௵	மீ	நா
சூரியன்		3	18
சந்திரன்		6	
செவ்வாய்		4	6
இராகு		10	24
குரு		9	18
சனி		11	12
புதன்		10	6
கேது		4	6
சுக்கிரன்	1		

ரோகணி அஸ்தம் திருவோணம்
சந்திரதிசை ௵ 10

புத்தி	௵	மீ	நா
சந்திரன்		10	
செவ்வாய்		7	
இராகு	1	6	
குரு	1	4	
சனி	1	7	
புதன்	1	5	
கேது		7	
சுக்கிரன்	1	8	
சூரியன்		6	

மிருகசீரிடம் சித்திரை அவிட்டம்
செவ்வாதிசை ௵ 7

புத்தி	௵	மீ	நா
செவ்வாய்		4	27
இராகு	1		18
குரு		11	6
சனி	1	1	9
புதன்		11	27
கேது		4	27
சுக்கிரன்	1	2	
சூரியன்		4	6
சந்திரன்		7	

திருவாதிரை சுவாதி சதயம்
ராகுதிசை ௵ 18

புத்தி	௵	மீ	நா
இராகு	2	8	12
குரு	2	4	24
சனி	2	10	6
புதன்	2	6	18
கேது	1		18
சுக்கிரன்	3		
சூரியன்		10	24
சந்திரன்	1	6	
செவ்வாய்	1		18

புனர்பூசம் விசாகம் பூரட்டாதி குருதிசை௵ 16			
புத்தி	௵	மீ	நா
குரு	2	1	18
சனி	2	6	12
புதன்	2	3	6
கேது		11	6
சுக்கிரன்	2	8	
சூரியன்		9	18
சந்திரன்	1	4	
செவ்வாய்		11	6
இராகு	2	4	24

பூசம்-அனுஷம் உத்திரட்டாதி சனிதிசை௵ 19			
புத்தி	௵	மீ	நா
சனி	3		3
புதன்	2		8
கேது	1	1	9
சுக்கிரன்	3	2	
சூரியன்		11	12
சந்திரன்	1	7	
செவ்வா	1	1	9
இராகு	2	10	6
குரு	2	6	12

ஆயிலியம் கேட்டை ரேவதி புதன்திசை௵ 17			
புத்தி	௵	மீ	நா
புதன்	2	4	27
கேது		11	27
சுக்கிரன்	2	10	
சூரியன்	2	10	6
சந்திரன்	1	5	
செவ்வாய்	4	11	27
இராகு	2	6	18
குரு	2	8	6
சனி	2	8	9

அஸ்வனி மகம் மூலம் கேதுதிசை௵ 7			
புத்தி	௵	மீ	நா
கேது	1	4	27
சுக்கிரன்	1	2	
சூரியன்		4	6
சந்திரன்		7	
செவ்வாய்		4	27
ராகு	1		18
குரு		11	6
சனி	1	1	9
புதன்		11	27

பரணி பூரம் பூராடம் சுக்கிரதிசை௵ 20			
புத்தி	௵	மீ	நா
சுக்கிரன்	3	4	
சூரியன்	1		
சந்திரன்	1	8	
செவ்வாய்	1	2	
ராகு	3		
குரு	2	8	
சனி	3	2	
புதன்	2	10	
கேது	1	2	

4வது பேஜியில் குறிப்பித்திருக்கும் விதமாகவே ஜனன லக்கினம் இன்னினதென்று கவனித்துக் கொண்டு அடியில் வரும் திசாபுத்திகளில் கொடுக்கும் பலாபலனைக்கவனித்தால் சரியாயிருக்கும்,

திசாபுத்தி நாதர்கள் கொடுக்கும் பலன் விபரம்

ஜாதகர்களுக்கு நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது யென்னும் ஒன்பது பேரும் திசாபுத்திகளில் பலன் கொடுக்கும் விபரமெவ்விதமென்றால்:

சூரியதிசையில் சூரியபுத்தி பலன்

சூரியதிசையில் சூரியபுத்தி 3 மாதம் 18 நாள் வரையில் நடப்பதினால் சூரியன் ஜாதகருடைய ஜனனலக்கினத்திற்கு 3-6,8,12ம் ஸ்தானத்தில் பகை நீசமாயிருந்தும் சனி,சுக்கிரன் ராகு, கேது பார்வை பெற்றும்சம்பந்தமாகவுமிருந்தால்,சரீர வியாதியும் துன்பமும், துயரமும்பகையும் மேலிட்டு, உத்தியோகமின்றியும், வியாபாரம் நஷ்டமுமாயிருப்பதுடன் வறுமையால் கலங்கி துடிப்பதற்காகும்.

ஆனால், திசாநாதனாகிய சூரியன் கேந்திர, கோண, திரிகோண ஸ்தானத்தில், ஆக்ஷி, உச்சம், நட்பாயிருந்து குரு புதன், சம்பந்தமாயிருந்தாலும் வளர்பிறைச்சந்திரன், குருபார்வை பெற்றாலும் சரீராரோக்கியமும், வியாபாரலாபமும், உத்தியோக மேன்மையும் பொருந்தி திரவியசம்பத்துடனும் மனைவி, மைந்தர்பந்து மித்திரர்களுடனும் சௌக்கியமாயிருப்பதாகும்,

சூரியதிசையில் சந்திரபுத்தி பலன்

சூரியதிசையில் சந்திரபுத்தி 6 மாதம் நடப்பதினால் திசாநாதனாகிய சூரியன், 3,6,8,12ம் ஸ்தானத்தில் பகைநீசமாயிருந்து, சனி; சுக்கிரன், இராகு கேது சம்பந்தமாகவும், பார்வை பெற்றுவதுமிருக்க, புத்திநாதனாகிய சந்திரனும் இலக்கனத்திற்கும், திசாநாதனுக்கும் 3,6,8,12ம் ஸ்தானத்தில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு சுரரோகமும் ஜன்னிவாதமும், சகலருக்கும் பகையாகவும் வறுமையடைந்து துயரத்தினால் துக்கப்படச்செய்யும்.

ஆனால், திசாநாதனாகிய சூரியன், குரு, புதன் சம்பந்தமாயாவது வளர்பிறைச் சந்திரன், குருபார்வை பெற்றுவது நட்பு ஆக்ஷி உச்சமாய். கோணகேந்திர திரிகோணஸ்தானத்திலிருந்தும் புத்திநாதனாகிய சந்திரன் இலக்கினத்தற்கும் திசாநாதனுக்கும் கேந்திரகோண, திரிகோணஸ்தானங்களில் ஆக்ஷி உச்சம், நட்டாயிருந்து குரு, சுக்கிரன் புதன் பார்வை பெற்றுமிருந்தால், ஜாதகருக்கு உத்யோகவிருத்தியும் வியாபாரலாபமும் சுகசௌக்கியமுமுண்டாவதுடன் திரவியலாபமும் பெருகி மனைவி, மைந்தர், பந்து மித்ரர்களால சௌக்கியமும் பலவிதமான நன்மையு முண்டாகும்.

சூரியதிசையில் செவ்வாய் புத்தி பலன்

சூரியதிசையில் செவ்வாய்புத்தி 4 மாதம் 6 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய சூரியன் பகை நீசஸ்தானத்திலிருந்து சனி சுக்கிரன் இராகு கேது சம்பந்தமாயாவது பார்வை பெற்றுவத இலக்கினத்திற்கு மறைவுஸ்தானத்திலிருக்க, புத்திநாதனாகிய செவ்வாய் இலக்கினத்திற்கும் திசாநாதனு

க்கும், 3,6,8,12ம் ஸ்தானத்தில் பகைநீசமாயிருந்து சனி, ராகு, கேது சுக்ரன்சம்பந்தமாயாவது பார்வை பெற்றுவதிருந்தால். ஜாதகனுக்கு அகஸ்மாத்தான நஷ்டமும் விரோதமும், கலகமும் நேரிடும்.

ஆனால், திசாநாதனாகிய சூரியன், நட்பு, ஆக்ஷி, உச்சமாய், கேந்திர, கோண, திரிகோண ஸ்தானங்களிலிருந்து குருபகவான் வளர்பிறைச்சந்திரன் பார்வை பெற்றுவதிருந்தும் புத்திநாதனாகிய செவ்வாயும், இலக்கினத்திற்கும், திசாநாதனுக்கும், கேந்திர, கோண, திரிகோண ஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவித சுகசௌக்கியமும் நன்மையும், உத்தியோக விருத்தியும், வியாபாரலாபமும், பூஸ்திதிலாபமும் கிடைக்கும்.

சூரியதிசையில் இராகுபுத்தி பலன்

சூரியதிசையில் இராகுபுத்தி 10 மாதம் 24 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய சூரியனுக்கு புத்திநாதனாகிய இராகு பகவான் பகையானதினால் திசாநாதன் 3,6,8,12ம் ஸ்தானத்தில் பகைநீசமாயிருந்து சனி, சுக்கிரன், ராகு, கேது, பார்வை பெற்றும், புத்திநாதனாகிய இராகு 3,6.8,12ம் ஸ்தானமாகிய பகைநீசஸ்தானத்தில் திசாநாதனாகிய சூரியனால் பார்வை பெற்றால் ஜாதகனுக்கு கஷ்ட நஷ்டமும் கவலையும் சரீர வியாதியுமுண்டாகும்.

ஆனால். திசாநாதனாகிய சூரியன்நட்பு. ஆட்சிஉச்சமாய் ஜனன லக்கினத்திற்கு கேந்திர கோண, திரிகோண ஸ்தானத்திலிருக்க புத்திநாதனாகிய இராகு பகவான் நட்பு உச்சமாய் லக்கினத்திற்கும் திசாநாதனுக்கும் கேந்திரஸ்தானத்திலிருந்தால் மனதைரியமும் உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும் பலவித நன்மையுமுண்டாகும்.

சூரியதிசையில் குருபுத்திபலன்

சூரியதிசையில் குருபுத்தி 9-மாதம் 18-நாள் நடப்பதினுல் திசாநாதனுகிய சூரியன் 0 சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகைநீசமாயிருந்த, சனி, ராகு பார்வைபெற்றும், புத்திநாதனுகிய குருபகவான் 3,6,8,12 மிடத்தில் பகை நீசமாயிருந்தும், சுக்கிரன், சனி, ராகு கேது பார்வை பெற்ருலும், சம்பந்தமாயிருந்தாலும் பலவிதமான கஷ்டமும் நஷ்டமும் கவலையுமடைந்து துயரப்படுவதற்காகும்.

ஆனல், திசாநாதனுகிய சூரியன் கேந்திர கோணஸ்தானங்களில் நட்பு ஆக்ஷி உச்சமாயிருக்க புத்திநாதனுகிய குருபகவால இலக்கினத்திற்காகிலும், திசாநாதனுக்காகிலும் கோண திரிகோண ஸ்தானத்தில் நட்பு, ஆக்ஷி, உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவித நன்மையும் சுகசெளக்கியமும், சுபகாரியங்களும், உத்தியோக விருத்தி, வியாபார லாபமும் உண்டாகும்.

சூரியதிசையில் சனிபுத்திபலன்

சூரியதிசையில், சனிபுத்தி 11-மாதம் 12 நாள் நடப்பதினுல் திசாநாதனுகிய சூரியன் இராகு, கேது, சுக்கிரனுடன் சம்பந்தமாய் சஷ்டாஷ்டம விரயஸ்தானத்திலிருந்தாலும் புத்திநாதனுகிய சனிபகவான் திசாநாதனுகிய சூரியனுடன் சம்பந்தமாகவும் 3.6,8,12 மிடத்தில் பகை நீசமாய் இராகு கேது, நீசவ்வாய் பார்வை பெற்றுமிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான கஷ்ட நஷ்டமும் கடன்காரர் துன்பமும் விரிடச்செய்து சரீரவிபாதியால் கலங்கச்செய்யும்.

ஆனல், திசாநாதனுகிய சூரியபகவான் கேந்திர கோண ஸ்தானங்களில் ஆட்சி உச்சமாயிருந்து குரு, புதன் வளர்பிறைச் சந்திரன் பார்வைபெற்றும், புத்திநாதனுகிய சனிபகவான்குரு, சுக்கிரன் பார்வை பெற்று இலக்கினத்திற்கும், திசாநாதனுக்கும்கேந்திர ஸ்தானங்களிலிருந்தால்ஜாதகருக்கு

0 சஷ்டாஷ்டம விரயஸ்தான மென்ருல் 6-8-12 மிடங்கள் ஆகும்.

சுக செளக்கியமும், உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும் மனைவிமைந்தர்பந்து மித்திரர் புகழ்ந்துரைக்கும்தன்மையான சுகசெளக்கியமனைத்தும் பொருந்தியிருப்பதற்காகும்.

சூரியதிசையில் புதன் புத்தி பலன்

சூரியதிசையில் புதன்புத்தி 10 மாதம் 6 நாள் நடப்பதால் திசாநாதனுகிய சூரியனும், புத்திநாதனுகிய புதனும், இலக்கினத்திற்கு 3.6,8,12ம் இடத்தில் பகைநீசமாய் சனி, இராகு, கேது பார்வை பெற்றிருந்தால் ஜாதகருக்கு பலவிதமான துன்பமும் அயரமும் வறுமையும் மேலிட்டு இனஜனவிரோதமும் பந்து மித்திரர் பகையுண்டாகும்.

ஆனல் திசாநாதனுகிய சூரியனும் புத்திநாதனுகிய புதனும் ஜனனலக்கினம் 2,4,5,10,11ம் இடத்தில் ஆட்சி, உச்சம் நட்பாயிருந்தால் ஜாதகன் கல்வியிற்சிறந்துவாசிப்பதில் தேர்ச்சியடைந்து உத்தியோக விர்த்தியுடனும், வியாபாரலாபத்துடனும் பொன்பொருள் பூஸ்திதியுடனும் மனைவி, மைந்தர் பந்துமித்திரர் புகழ்ந்துரைக்கும் தனவந்தனுயிருப்பதற்காகும்.

சூரியதிசையில் கேது புத்திபலன்

சூரியதிசையில் கேதுபுத்தி 4 மாதம் 6 நாள் நடப்பதினுல்திசாநாதனுகிய சூரியன் 8,12ம் ஸ்தானத்தில் பகை, நீசமாய் சனி இராகு சம்பந்தமாயாவது பார்வை பெற்ருவதிருந்தால், பிதுர்வர்க்கத்தில் கஷ்டமும்,சூதகமும் துன்பமும் மேற்படுவதுடன் ஜாதகனுக்குப் பலவிதமாகிய கஷ்டநஷ்டங்களும் உத்தியோகமின்றியும் தொழிலின்றியும் துயரப்படச் செய்வதுடன் விஷ ஜந்துக்களால் துன்பமுண்டாகும்.

ஆனால், திசாநாதனுகிய சூரியன் ஜனன லக்கினத்திற்கு கோண திரிகோண, கேந்திர ஸ்தானங்களில் ஆட்சி, உச்சம் நட்பாயிருப்பதுடன், புத்திநாதனுகிய கேதுபகவான் குரு, சுக்கிரன், புதன் பார்வைபெற்று 2,4;10,11 மிடங்களில் நட்புஉச்சமாயிந்தால் ஜாதகனுக்கு பலவிதமான நன்மையும் உத்தியோக மேன்மையும் கீர்த்தியும், வியாபாரலாபமும் பிதுர்வர்க்கத்தில் பலவிதநன்மையும் பந்துமித்திரர் புகழுந் தன்மையான பெருமையும் பொருள் லாபமுமுண்டாகும்

சூரிய திசையில் சுக்கிரபுத்தி பலன்

சூரியதிசையில் சுக்கிரபுக்தி 1வருஷம் நடப்பதால் திசா நாதனுகிய சூரியன் ஜனனலக்கினத்திற்கு 3,8,12,வது ஸ்தானத்தில் பகை நீசமாய் சனி, இராகு, கேது, சுக்கிரனுடனே சேர்ந்தாவது இவர்களின் பார்வை பெற்றுவதிருந்து புத்தி நாதனுகிய சுக்கிரனும் இருதிய சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான கவலையும், திகிலும் மனசஞ்சலமும் வறுமையும் தொழிலகப்படாத குரூரமும் பகைவரின் கொடுமையும் விரோதமுமுண்டாயிருக்கும்.

ஆனல், திசாநாதனுகிய சூரியன், புதன், குரு, செவ்வாயுடன் சேர்ந்து கேந்திர கோண திரிகோணஸ்தானத்தில் ஆட்சி உச்சமாயிருந்தும், சுபக்கிரக பார்வையைப் பெற்றிருந்தால், வித்தியாபிவிருத்தி திரவியசம்பத்து, உத்தியோக விருத்தி வியாபாரலாபமும் மனைவி மைந்தர் சுற்றத்தாரின் சகாயமும் பொருந்தி கௌரவமாயிருப்பதற்காகும்,

சூரியதிசையில் சுக்கிரபுத்திபலன் விபரம் சம்பூர்ணம்

சந்திரதிசையில் சந்திரபுத்தி பலன்

சந்திரதிசையில் சந்திரபுக்தி 10 மாதம் நடப்பதினுல் சந்திரபகவான் கேந்திர கோண திரிகோண ஸ்தானங்களில் நட்பு உச்சம் ஆட்சியாயிருந்து, புதன், குரு, சுக்கிரன் சம்பந்தமாயிருந்தாலும் பார்வைபெற்றாலும் ஜாதகருக்குப் பல

விதநன்மையும் வித்தியாபிவிருத்தியும், உத்யோகமேன்மையும், வியாபாரலாபமும், திரவியலாபமு முண்டாகும்

ஆனுல், சந்திரன் ஜாதகர் ஜனனலக்கினத்திற்கு 3,6,8,12வது ஸ்தானத்தில் பகை நீசமாய் இராகு, கேது, சனியுடன் சேர்ந்தருந்தாலும், பார்வை பெற்றாலும் ஜாதகர் பலவிதமான மனக்கவலையாலும் மந்தமதியும், மறதியும் நேர்ந்து வாய்ச்சொல்லால் சகலருக்கும் பகையாயிருப்பதுடன் வறுமையும் துயரமும் பொருந்தி வியாபார நஷ்டத்தாலும் தொழிலில்லாத கவலையாலும் வறுமையாளனுய், மனைவி மைந்தர் பந்துமித்ரர் பழிக்குந் தன்மையான மனவிசாரமுடையவனுயிருப்பதற்காகும்.

சந்திர திசையில் செவ்வாய்புத்தி பலன்

சந்திரதிசையில் செவ்வாய்புத்தி 7 மாதம் நடப்பதினுல் சந்திரபகவான் 3,6,8,1 வது ஸ்தானத்தில் பகை நீசமாயிருந்து இராகு, கேது, சனி சம்பந்தமாயாவது பார்வை பெற்றுகிலும் சம்பந்தமுற்றுவதிருந்தால் ஜாதகருக்குப் பலவிதமான கஷ்டமும், கவலையும், வறுமையும் வியாதியும், கலகமும் பந்துமித்ரர் பகையும் நேரிட்டு உத்தியோகமிழந்தும் வியாபார நஷ்டமடைந்தும் துயரப்படச்செய்யும்

ஆனுல், சந்திரன் கேந்திரகோண திரிகோண ஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சமாயிருக்க, புத்திநாதனுகிய செவ்வாயும், ஜனன லக்கினத்திற்கும் திசாநாதனுக்கும், கேந்திர, திரிகோண ஸ்தானங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்தால் ஜாதகனுக்கு திரவிய சம்பத்தும் பூமிலாபமும், வித்யாபிவிருத்தியும், புத்தி சாதுரியமும், உத்தியோகமேன்மையும், வியாபாரலாபமும், மனைவி, மைந்தர், பந்துமித்ரர் சகாயமுமுண்டாகும்.

சந்திர திசையில் இராகு புத்தி பலன்

சந்திரதிசையில் இராகுபுத்தி 1வருஷம் 6 மாதம் நடப்பதால் சந்திரன் ஜனனலக்கினத்திற்கு 3,6,8,12வது ஸ்தானத்தில் பகை நீசமாய் சனி, சூரியன், கேது சம்பந்தமாயா

வது பார்வை பெற்றுவதிருக்க புக்திநாதனுகிய இராகு பக வான் பகை நீசமாய் சனி, செவ்வாய், சூரியன், சந்திரன் பார்வைபெற்றுவது சம்பந்தமாயாவதிருந்தால் ஜாதகனுக்கு வைப்பு சூனிய பயங்கரமும் விஷஜந்துக்களாலும் பகைவர் களாலும் அபாயமும் நேரிடுவதுடன் தோழிற் சாலையில் விரோதமும் உத்தியோகமில்லாமலும் வியாபார நஷ்டத்தி னாலும் பந்துமித்திரர் பகையாலும் திகிலடையும் தன்மையா யிருக்கும்

ஆனுல், சந்திர பகவான் ஜனனலக்கினத்திற்கு கேந்திர கோண திரிகோண ஸ்தானத்தில் ஆட்சி, உச்சம், நட்பாதி ருப்பதுடன் குரு, சுக்கிரன், புதன் சம்பந்தமாயாவது பார் வை பெற்றுவதிருக்கும்போது புக்திநாதனுகிய இராகு பக வான் நட்புஸ்தானத்தில் குரு சுக்கிரன், பார்வை பெற்று ஜனனலக்கினத்திற்கும் திசாநாதனுக்கும் கேந்திர திரிகோண ஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்குப பலவித நன்மையனைத் தும் கொடுப்பதுடன் உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும் மனைவி,மைந்தர் பந்துமித்திரர்சகாயமும் திரவியலா பமும் கிடைக்கும்படியாய்ச் செய்யும்.

சந்திரதிசையில் குருபுத்தி பலன்.

சந்திரதிசையில் குருபுத்தி 1வருஷம் 4 மாதம் நடப்ப தால் திசாநாதனுகிய சந்திரன் ஜனனலக்கினத்திற்கு கேந்திர கோண திரிகோண ஸ்தானத்தில ஆட்சி உச்சம் நட்பாயிருக் கும்போதுபுத்திநாதனுகிய குருபகவான் ஜனன லக்கினத் திற்கு 2,5.9,10,11வது ஸ்தானத்திலாயினும் நட்பு, ஆட்சி உச்சமாய் நட்பு கிரகங்களின் சம்பந்தமாயிருந்தால் ஜாதக னுக்கு வித்தியாபி விருத்தியும் உத்தியோக மேன்மையும் சம்பத்தும்பெற்று வியாபாரலாபமும், பந்துமித்திரர் சகாய மும் சாஸ்திர ஆராய்ச்சியும் பெற்று தனதான்யசம்பத்துடன் கீர்த்திப்பிரகாசமாயிருப்பதற்காகும்.

ஆனுல், திசாநாதனுகிய சந்திரன் ஜனனலக்கினத்திற்கு சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகைநீசமாய் இராகு கேது சனி முதலானேர் சம்பந்தமாயாவது இவர்கள் பார்வைபெற் றுவதிருப்பதுடன் புத்திநாதனுகிய குருபகவான் சனி சுக்கி

ரன் இராகு சம்பந்தமாய் 6,8,12வது ஸ்தானத்தில் பகை நீச மாயிருந்தால் ஜாதகனுக்கு பலவித கஷ்டமும் கவலையும், சத்துருக்களால் நேரிட்டு வறுமையால் கலங்கும்படிச்செய் யும்.

சந்திரதிசையில் சனிபுத்திபலன்

சந்திரதிசையில் சனிபுத்தி 1 வருஷம் 7 மாதம் நடப் பதால் திசாநாதனுகிய சந்திரன், ஜனனலக்கினத்திற்கு 3-6-8-12ம் ஸ்தானத்திலிருக்க, புத்திநாதனுகிய சனிபகவான், இராகு, சூரியனுடன் சம்பந்தமாயாவது பார்வைபெற்று வது ஜனனலக்கினத்திற்காகிலும் திசாநாதனுக்காகிலும்1,7, 8,12வது ஸ்தானத்தில் பகை நீசமாய் சூரியன், செவ்வாய், இராகு பார்வை பெற்றிருந்தால், ஜாதகனுக்கு பலவிதமான துன்பமும் துயரமும் நேரிடச்செய்து உத்தியோகமில்லாம லும், வியாபார நஷ்டத்தாலும் பலவிதமானகஷ்டநஷ்டமும் கவலையும் அடைந்து துயரப்படச்செய்யும்.

ஆனுல் திசாநாதனுகிய ஜனன லக்கினத்திற்கு கேந்திர கோண திரிகோணஸ்தானத்தில் நட்பு, ஆட்சிஉச்சமாய்குரு புதன் சம்பந்தமாயாவது பார்வைபெற்றுவதிருக்க புத்திநாத னுகிய சனிபகவான் திசாநாதனுக்கு 2,4,7,10,11 ஆமிடத்தில் ஆட்சி, உச்சம் நட்பாயிருந்து குரு சுக்கிரன்,புதன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு வியாபாரவிருத்தியும், உத்தி யோக மேன்மையும் வியாபாரலாபமும் திரவியசம்பத்தும் மனைவி மைந்தர் பந்துமித்திரர் புகழ்ந்துரைக்குந்தன்மையும் பொருந்தி சுக சௌக்கியமாயிருப்பதற்காகும்.

சந்திரதிசையில் புதன்புத்திபலன்

சந்திரதிசையில் புதன்புத்தி 1வருஷம் 5மாதம் நடப்பதி னல் திசாநாதனுகிய சந்திரன் ஜனனலக்கினம் 2,4,5 7,9,11 மிடத்தில் நட்பு ஆட்சி உச்சமாய் புத்திநாதனுகிய புதனுட னே சம்பந்தமாயிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவிருத்தியும் ஞாபகசக்தியும் வியாபாரலாபமும், உத்தியோகவிருத்தியும்,

தொழில் முயற்சியுமுண்டாவதுடன் திரவியலாபமும்மனைவி மைந்தர், உபசரணையும், கீர்த்தியும் தனவந்தர்சகாயமும் பொருந்தியிருக்கும்.

ஆனால், திசாநாதனாகிய சந்திரன் 3,6,7,8,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருக்க புத்திநாதனாகிய புதபகவான் இலக்கினத்திற்காகிலும், திசாநாதனுக்காகிலும் திரிதியசஷ்டாஷ்டம ஸ்தானத்தில்பகைநீசமாயிருந்தால் ஜாதகனுக்குவாதரோகம் கீல்வாய்வு சுரரோகமனைத்தும் நேரிடச்செய்து வறுமையினால் கலங்கும்படிச்செய்யும்.

சந்திர திசையில் கேது புத்தி பலன்

சந்திரதிசையில் கேதுபுத்தி 7 மாதம் நடப்பதினால் திசாநாதனாகிய சந்திரன் ஜனனலக்கினத்திற்கு 3,6,8,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்து புத்திநாதனாகிய கேதுடனே சம்பந்தமாய் சனி ராகு பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு விஷஜந்துக்களால் பயமும் அபாயமும் சத்துருக்களினால் பகையும் கொடுமையும் கலகமும் நேரிட்டு வறுமையும் துயரமுமுண்டாகும்.

ஆனால் திசாநாதனாகிய சந்திரன் கேந்திரகோணதிரிகோண ஸ்தானத்தில் ஆட்சி உச்சமாய் புதன் குரு, சுக்கிரன் சம்பந்தமாயாவது பார்வை பெற்றுவதிருக்க புத்திநாதனாகியகேது கட்புஸ்தானங்களிலிருந்து குரு சுக்கிரன், புதன் பார்வை பெற்றால் ஜாதகனுக்கு ஆசார அனுஷ்டானமும் தெய்வ பக்தியும், ஸ்தலயாத்திரையும் தீர்த்த ஸ்நான வைபமும் பெரியோர் சேர்க்கையும் திரவியலாபமு முண்டாகும்,

சந்திரதிசையில் சுக்கிரபுத்தி பலன்

சந்திர திசையில் சுக்கிரன்புத்தி 1வருஷம் 8மாதம்நடப்பதினால்திசாநாதனாகிச் சந்திரன்நட்பு ஆட்சிஉச்சமாய்ஜனன லக்கினத்திற்கு கேந்திர கோண திரிகோணஸ்தானத்திலிருந்து புதன் குரு பார்வை பெற்றிருந்தும் புத்திநாதனாகிய சுக்கிரனும் திசாநாதனுக்காகிலும் இலக்கினத்திற்காகிலும் 1-2-4

5 7 9 10 11 ஆமிடங்களிலிருந்தால்ஜாதகனுக்கு சுகசௌக்கியமும் பந்துமித்ரர் கூட்டமும் சுபகாரியவைபவங்களும் உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும் திரவியசேர்க்கையும் பொன் பொருள் லாபமுமுண்டாகும்.

ஆனால், திசாநாதனாகிய சந்திரன் பகைநீச ஸ்தானத்திலிருக்க புத்திநாதனாகிய சுக்கிரனும் இலக்கினத்திற்கும் திசாநாதனுக்கும் திரிதிய சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகைநீசமாய் பகைகிரகங்களின் சம்பந்தமாயாவது பார்வை பெற்றுவதிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான துன்பமும் துயரமும் பகைவரால் கஷ்டநஷ்டமு முண்டாகும்.

சந்திரதிசையில் சூரியபுத்தி பலன்

சந்திரதிசையில் சூரியபுத்தி 6 மாதம் நடப்பதினால் திசாநாதனாகிய சந்திரனும்புத்திநாதனாகிய சூரியனும் ஜனனலக்கினத்திற்கு திரிதியசஷ்டாஷ்டம விரயஸ்தானத்திலிருந்துசனி, ராகு, கேது பார்வைபெற்று பகை நீசஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான துன்பமும் துயரமும் நேரிட்டு பகைவர்களால்கஷ்டமுங்கவலையுமடைந்துதுயருறச்செய்து சுரரோகத்தாலும் வறுமையாலும் கஷ்டநஷ்டமடையச் செய்யும்.

ஆனால், திசாநாதனாகிய சூரியனும் புத்திநாதனாகிய சந்திரனும் இலக்கினம் 2 4 5 7 10 11 ஆமிடத்தில் நட்புஆக்ஷி உச்சமாய் குரு புதன் சம்பந்தமாயாவது பார்வை பெற்றுவதிருந்தால்ஜாதகனுக்குப்பலவிதமான நன்மையும்,வித்தியாபிவிருத்தியும், சுகசௌக்கியமும் உத்தியோகமேன்மையும் வியாபாரலாபமும் பொருள்சேர்க்கையு முண்டாகும்மனைவி மைந்தர்பந்து மித்திரர்புகழுந்தன்மையான தனவந்தனாயிருப்

பதற்காகும். (சந்திர திசையில் சூரிய புத்தி சம்பூர்ணம்)

செவ்வாய்திசையில் செவ்வாய்புத்திபலன்.

செவ்வாய்திசையில் செவ்வாய்புத்தி 4 மாதம் 27நாள் நடப்பதால்திசாநாதனாகிய செவ்வாய் பகவான்கேந்திர ஸ்தானங்களில் ஆட்சி உச்சமாயிருந்து குருபார்வை பெற்றால் ஜாதகனுக்கு பூமிலாபமும் கீர்த்தியும், தைரியமும் சுபகாரியங்களுமுண்டாகும் படியான நன்மையனைத்தும் யுண்டாகும்.

ஆனால், திசாநாதனாகியசெவ்வாய் சஷ்டாஷ்டமவிரயஸ்தானத்தில் பகை கிரகங்களின் சம்பந்தமாயாவது பார்வை பெற்றாவதிருந்தால் ஜாதகனுக்குப் பலவித கஷ்டநஷ்டமும் கவலையும் பொருந்தி பகைவரால் குரூர பயங்கரகலகமும் தொழிலகப்படாத துன்பமும் வியாபாரநஷ்டமும் வறுமையும் பொருந்தியிருக்கும்.

செவ்வாய்திசையில் இராகுபுத்தி பலன்.

செவ்வாய் திசையில் இராகுபுத்தி 1 வருஷம் 18 நாள் நடப்பதால் திசாநாதனாகிய செவ்வாய் புத்திநாதனாகிய இராகுசம்மந்தமாய் பகைகிரகங்களின் பார்வைபெற்று இலக்கினத்திற்கு 1,5,8,9 ஆமிடத்திலிருந்தால் ஜாதகனுக்குபலவித கஷ்டநஷ்டமும், கலகமும் குரூர பயங்கரமான துன்பமும் தொழிலகப்படாதகவலையும் வறுமையும்பொருந்தியிருக்கும்

ஆனால் திசாநாதனாகிய செவ்வாய் 4 7 10 11 ஆமிடத்தில் நட்புஆட்சி உச்சமாயிருக்க புத்திநாதனாகிய இராகு மேஷம், ரிஷபம், கடகம், விருச்சிகம் மகரத்திலிருந்து குரு சுக்கிரன் புதனும்பார்வை பெற்றால் ஜாதகனுக்குப் பலவிதமான நன்மையும் உத்தமசினேகிதர் சேர்க்கையும் பூமிலாபமும் திரவியலாபமும் உண்டாகும்.

செவ்வாய்திசையில் குருபுத்தி பலன்.

செவ்வாய் திசையில் குருபுத்தி 11மாதம் 6 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய செவ்வாயும் குருபகவானும் சேர்ந்திருப்பதுடன் ஜனனலக்கினத்திற்கு 1 4 7 9 10 11 ஆமிடங்களில் ஆக்ஷி உச்சமாயிருந்துவளர்பிறைச் சந்திரனும் புதனும் பார்வை செலுத்தினால் ஜாதகருக்குப் பொன், பொருள் பூஸ்திதி லாபமும் உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும் இடைத்துமனைவி மைந்தர்களுடனேசுக சௌக்கியமாயிருப்பதற்காகும்.

ஆனால், திசாநாதனாகிய செவ்வாய் பகை நீசஸ்தானத்திலிருக்க குரு இலக்கினத்திற்கு திரிதியசஷ்டாஷ்டம விரயஸ்தானத்திலிருந்து பகை கிரகங்களின் சம்பந்தமாயாவது பார்வை பெற்றாவதிருந்தால் ஜாதகனுக்கு வாத உஷ்ண ரோகாதிகளும் மன விசாரமும் வறுமையும் தொழிலில்லாத சஞ்சலமும் வியாபார நஷ்டமும் பந்து மித்திரர்களின் பகையும் சூழ்ந்து துயரப்படச்செய்யும்.

செவ்வாய்திசையில் சனிபுத்திபலன்.

செவ்வாய் திசையில் சனிபுத்தி 1 வருஷம் 1 மாதம் 9 நாள் நடப்பதினால்திசாநாதனாகிய செவ்வாய்பகவான்ஜனனலக்கினத்திற்கு 5-7-8-9-12வதுஸ்தானத்தில் புத்திநாதனாகிய சனியும் சுக்கிரன் இராகுடன் சம்பந்தமாய் பகை நீசஸ்தானத்திலிருக்க ஜாதகனுக்கு பலவித துன்பமும் துயரமும்சோரிடுவதுடன் மனைவிமைந்தர்களைப்பிரிந்து கஷ்டநஷ்டத்தால் கலங்குந்தன்மையும் மனைவிக்கு தோஷமும் புத்திரரால் துயரமும் பொருந்தி பகைவரால் துயரடைந்து வறுமையாளனாயிருக்கும்படியான கவலையடைந்து கலங்கச்செய்யும்.

ஆனால் திசாநாதனாகிய செவ்வாய் பகவான் கேந்திர, ஸ்தானங்களில் ஆக்ஷி உச்சமாயிருக்க புத்திரநாதனாகிய சனி பகவானும் ஆட்சி உச்சமாய் கேந்திர, ஸ்தானங்களிலிருந்

தால் ஜாதகனுக்கு சுகசௌக்கியமும் மனைவிமைந்தரால் கீர்த்தியும் பெருமையும் உத்தியோக விருத்தியும் வியாபார லாபமும் பொருந்திபூமிலாபத்துடன் வாழ்ந்திருப்பதற்காகும்

செவ்வாய்திசையில் புதன்புத்திபலன்.

செவ்வாய் திசையில் புதன்புத்தி 11 மாதம் 27 நாள் நடப்பதால் திசாநாதனுகிய செவ்வாய் பகவான் 5-7-8-12 ஆமிடத்தில் சுக்கிரன் சனி ராகு கேதுடன் சம்பந்தமாய் பகை ஸ்தானங்களிலிருக்க புத்திநாதனுகிய புதபகவான் இலக்கினத்திற்கு 3-6-8-12 வது ஸ்தானத்தில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான கஷ்டநஷ்டங்களும் துன்பமும் துயரமும் வறுமையும் தொழிலகப்படாமலும் வியாபார நஷ்டத்தாலும் கடன்காரர் துன்பத்தாலும் திகிற்படச்செய்து வாதஉஷ்ணரோகத்தினுல் கலங்கச்செய்யும்.

ஆனுல், திசாநாதனுகிய செவ்வாய்பகவான் ஆட்சிஉச்சமாய் கேந்திர ஸ்தானங்களிலிருக்க புத்திநாதனுகிய புதன் கோண திரிகோண ஸ்தானங்களில் நட்பு ஆட்சி உச்சமாய், குரு வளர்பிறைச் சந்திரன் சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு வியாபார லாபமும் உத்தியோக விருத்தியும்திரவியலாபமும்பொன் பொருள்பூஸ்திதிலாபமும்கிடைத்தும் மனைவி மைந்தர்பந்துமித்திரர் புகழுந் தனவர்தனுயிருப்பதற்காகும்.

செவ்வாய்திசையில் கேதுபுத்தி பலன்

செவ்வாய் திசையில்கேதுபுத்தி 4 மாதம் 27 நாள்நடப்பதால் திசாநாதனுகிய செவ்வாய் பகவான் லக்கினம் 2 5 7 9 12 வது ஸ்தானத்தில் கேது பகவானுடன் சம்பந்தமாய் பகை நீசஸ்தானத்திலிருந்தால் ஜாதகன விஷ ஜந்துக்களாலும் பலவிதமானபயங்கர கஷ்ட நஷ்டமடைந்தும் உஷ்ண ரோக வியாதியாலும் கலங்கும்படியாகச் செய்யும்

ஆனுல், திசாநாதனுகிய செவ்வாய்பகவான், இலக்கினத்திற்கு கேந்திரஸ்தானங்களில் ஆட்சி உச்சமாயிருந்து

குரு சுக்கிரன் புதன் வளர்பிறைச்சந்திரன் பார்வை பெற்று மிருக்க புத்திநாதனுகிய கேதுபகவான் திசாநாதனுக்கு 3 6 11 வது ஸ்தானத்தில் நட்பு உச்சமாயிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமானநன்மையும் தொழில்விருத்தியும் வியாபார லாபமும் உத்தியோக மேன்மையும் பொன் பொருள் பூஸ்திதிலாபமும் பொருந்திய சுகசௌக்கியமுண்டாகும்,

செவ்வாய்திசையில் சுக்கிரபுத்திபலன்

செவ்வாய்திசையில் சுக்கிரபுத்தி 1 வருஷம் 2 மாதம் நடப்பதினுல் திசாநாதனுகிய செவ்வாய் ஜனனலக்கினத்திற்கு கேந்திரஸ்தானங்களில் ஆட்சி உச்சமாய் குரு, புதன் வளர்பிறைச்சந்திரன் பார்வை பெற்றிருக்க, புத்திநாதனுகிய சுக்கிரன் திசாநாதனுக்கு கேந்திர கோண திரிகோணஸ்தானத்தில் ஆட்சிஉச்சமாயிருந்து வளர்பிறைச்சந்திரன் புதன் குரு பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்தியாபிவிருத்தியும், உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும் பொருந்தி பொன் பொருள் பூஸ்திதி லாபத்துடன் மனைவி மைந்தர் பந்துமித்ரர்களுடன் வாழ்ந்திருப்பதற்காகும்.

ஆனுல், திசாநாதனுகிய செவ்வாயும் புத்திநாதனுகியசுக்கிரனும் 3 6 8 12 மிடத்தில் பகைநீசமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான கஷ்டநஷ்டமும் தொழிலகப்படாத துன்பமும் வியாபாரநஷ்டமும் பொருந்தி வறுமையால்கலங்கும்படியான சோம்பலாயிருப்பதற்காகும்.

செவ்வாய்திசையில் சூரிய புத்திபலன்

செவ்வாய் திசையில் சூரியபுத்தி 4 மாதம் 6 நாள் நடப்பதினுல் செவ்வாய்பகவான் இலக்கினத்திற்கு 5 7 12 மிடத்தில் பகை நீசமாய் சனி, சுக்கிரன் இராகுவுடன் சேர்ந்திருக்க புத்திநாதனுகிய சூரியன் இலக்கினத்திற்கு 6 8, 12 ஆமிடத்தில் பகை நீசமாய் சனி ராகு பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான கலகமும் பிதுர்வர்க்கத்தில் சூதக

மும், பயங்கரமும் விசனமும் வியாகூலமும், வறுமையும், உத்தியோகம் தொழிலுமில்லாத ஏழ்மைத்தனமும் பொருந்தியிருக்கும்,

ஆனால், செவ்வாய் பகவான் இலக்கினத்திற்கு கேந்திர ஸ்தானங்களில் ஆட்சி நட்பு உச்சமாயிருக்க புத்திநாதனாகிய சூரியனும் திசாநாதனுக்கு கேந்திரஸ்தானங்களில் குரு, புதன் வளர்பிறைச்சந்திரன் சம்பந்தமாயாவது பார்வை பெற்றுவதிருந்தால் ஜாதகருக்கு மன தைரியமும், ஞாபக சக்தியும், வித்தியாபிவிருத்தியும் உத்தியோக லாபமும் தொழில் முயற்சியும் வியாபார லாபமும் பொன்பொருள்பூஸ்திதி லாபமும்பொருந்திமனைவிமைந்தர் பந்துமித்ரர்களுடனே சுக சௌக்கியமாயிருப்பதற்காகும்,

செவ்வாய்திசையில் சந்திரபுத்தி பலன்

செவ்வாய்திசையில் சந்திரபுத்தி 7 மாதம் நடப்பதினால் திசாநாதனாகிய செவ்வாய்பகவான் ஜனனலக்கினத்திற்கு 5;7,9,12ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க, புத்தி நாதனாகிய சந்திரன் திசாநாதனுக்கும் ஜனனலக்கினத்திற்கும் 3,6, 8,12ஆமிடங்களில் பகைநீசமாயிருந்து, சனி இராகு கேது சம்பந்தமாயாவது பார்வைபெற்றுவதிருந்தால் ஜாதகருக்கு பலவிதமான கஷ்டநஷ்டங்களும்,வறுமையும் சூழ்ந்துகவலையடையச் செய்வதுடனே உத்தியோகமின்றியும் வியாபார நஷ்டமும் தொழிலகப்படாத துன்பமாயிருக்கும்.

ஆனால், திசாநாதனாகிய செவ்வாய் பகவான் 1,4,7,10, 11ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருக்க புத்திநாதனாகிய சந்திரன் கேந்திர கோண, திரிகோண ஸ்தானங்களில் ஆட்சி உச்சம், நட்பாயிருந்தால் ஜாதகனுக்குப் பொன்பொருள் பூஸ்திதிலாபமும் உத்தியோக விருத்தியும் வியாபாரலாபமும் பொருந்தி தனவந்தனாயிருப்பதற்காகும். (செவ்வாய் திசையில் சந்திரபுத்தி சம்பூர்ணம்)

இராகு திசையில் இராகுபுத்தி பலன்

இராகுதிசையில் இராகுபுத்தி 2 வருஷம் 8 மாதம் 12 நாள் நடப்பதினால் இராகுபகவான் ஜனனலக்கினத்திற்கு 1,5 7,9,12ஆமிடத்திலிருக்க சனி சூரியன் பார்வை செலுத்தினால் ஜாதகனுக்குபலவிதமான கஷ்டநஷ்டமான வறுமையும், வாதரோகமும், தொழிலகப்படாத கவலையும், வியாபார நஷ்டமும் சோம்பலும், கடன்காரர் தொந்தரவு முண்டாகும்.

ஆனால் இராகுபகவான் ஜனனலக்கினத்திற்கு 2-4-6-8 10 11 ஆமிடங்களில் நட்பு உச்சமாயிருக்க குரு புதன் சுக்கிரன்பார்வை செலுத்தினால் ஜாதகனுக்கு வித்தியாபிவிருத்தியும் தைரியமும் ஞாபகசக்தியும் வியாபாரலாபமும் தொழில் முயற்சியும் பொன் பொருள் பூஸ்திதிலாபமும் உத்தியோக சம்பத்தும் பொருந்தி சுக சௌக்கியமா யிருப்பதற்காகும்

இராகுதிசையில் குருபுத்தி பலன்.

இராகுதிசையில் குருபுத்தி 2 வருஷம் 4 மாதம் 24 நாள் நடப்பதால் திசாநாதனாகிய இராகுபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,10,11 ஆமிடங்களில் நட்புக்கிரகங்களுடனே சேர்ந்து நட்புஸ்தானங்களிலிருக்க புத்தி நாதனாகிய குருபகவான் ஜனனலக்கினம் 2,5,7,9,11 ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்து, நட்புகிரகங்கள் சம்பந்தமாய் புதன்வளர்பிறைச்சந்திரன் பார்வைபெற்றால் ஜாதகனுக்கு வித்தியாபிவிருத்தியும் சாஸ்திர ஆராய்ச்சியும் ஞாபகசக்தியும் உத்தியோகவிருத்தியும், தொழில் முயற்சியும் வியாபாரலாபமும் பொருந்திய தனவந்தனாயிருப்பதுடன் மனைவி மைந்தர்பந்து மித்திரர்களுடன் சுகசம்பத்துடனிருப்பதற்காகும்.

ஆனால், திசாநாதனாகிய இராகு பகவானும் புத்திநாதனாகிய குருவும் சம்பந்தமாய் சனி சுக்கிரன் பார்வைபெற்று பகைநீச ஸ்தானங்களிலிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான கலகங்களு மேற்பட்டு துன்பமனுபவிக்கச் செய்வதுடன்

தொழிலகப் படாமலும் உத்தியோகமில்லாமலும் வியாபார நஷ்டத்தாலும் வறுமையால் துயரப்படச் செய்யும்,

இராகுதிசையில் சனிபுத்திபலன்

இராகு திசையில் சனிபுத்தி 2வருஷம்,10 மாதம் 6 நாள் நடப்பதால் திசாநாதனுகிய இராகுபகவான் ஜனனலக்கினத்திற்கு 5, 7, 8, 12 ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க, புத்திநாதனுகிய சனிபகவான் ஜனனலக்கினத்திற்கு 4,5,7,9, ஆமிடங்களில் பகை நீசமாயிருப்பதுடன் பகை கிரகங்களின் பார்வைபெற்றால் ஜாதகனுக்குப் பலவிதமான கவலையும், பித்தரோகமும் வறுமையும் வியாபார நஷ்டமும் சூழ்ந்து துயரப்படச்செய்யும்.

ஆனல், திசாநாதனுகிய இராகுபகவான் ஜனனலக்கினத்திற்கு 4, 6, 11 ஆமிடங்களில் நட்பு உச்சமாயிருக்க புத்திநாதனுகிய சனிபகவானும் ஜனனலக்கினத்திற்காகிலும் 3.6, 11 ஆம் ஸ்தானங்களில, ஆட்சி உச்ச நட்பாகயிருந்தால்ஜாதகனுக்குப் பலவிதமான நன்மையும் சுகசெளக்கியமும் உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபத்துடன் தனவந்தமையும்மனைவி மைந்தர் பந்துமித்திரர்களின் சகாயத்துடன் சுகசெளக்கியமாயிருப்பதற்காகும்,

இராகுதிசையில் புதன்புத்திபலன்

இராகு திசையில் புதன்புத்தி 2வருஷம் 6மாதம் 18நாள் நடப்பதால் திசாநாதனுகிய இராகுபகவான் இலக்கினம் 2.4 7,8,9,12 ஆமிடத்திலிருந்து பகைகிரகங்களின் பார்வை பெற்று பகைநீசமாயிருக்க புத்திநாதனுகிய புதன் ஜனனலக்கினத்திற்காகிலும் திசாநாதனுக்காகிலும் 3,6,8.12 ஆமிடங்களில்பகைநீசமாயிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான துன்பங்களும் துயரமும் பொருந்தி யிருப்பதுடன் வாதரோகமும் சுரரோகமும் பொருந்தி மனசஞ்சலவிசாரமும் தொழிலகப்படாத துன்பமும் துயரமும் நேரிடச்செய்து பந்துமித்திரர்பகையு முண்டாகும்

ஆனல் திசாநாதனுகிய இராகுபகவான் 3,6,11 ஆமிடங்களில் நட்பு உச்சமாயிருக்க புத்திநாதனுகிய புதபகவான் ஜனனலக்கினத்திற்காகிலும் திசாநாதனுக்காகினும் 2,4,5,7 9,10,12 ஆமிடத்தில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்து குரு சுக்கிரன் வளர்பிறைச்சந்திரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான நன்மையும் திரவியலாபமும், உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும் மனைவிமைந்தர் சகாயமும் பந்துமித்திரர் உபசரணையுமுண்டாகும்.

இராகுதிசையில் கேதுபுத்தி பலன்

இராகுதிசையில் கேதுபுத்தி 1 வருஷம் 18 நாள் நடப்பதால் திசாநாதனுகிய இராகுபகவான் ஜனனலக்கினத்திலும் 4,7,9,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்து சூரியன் பார்வை பெற்றிருப்பதுடன், புத்திநாதனுகிய கேது 5,7,9 மிடத்தில் பகை நீசமாய் சூரியன், சந்திரன், அங்காரகனுடன் சம்பந்தமாயாவது பார்வை பெற்றுவதுமிருந்தால் ஜாதகனுக்கு விஷஜந்துக்களால் பயங்கரமும் வைப்பு சூனியமும் பேய் பில்லி சேஷ்டையும் இனஜனவிரோதமும் பலவிதமான ரோகாதிகளாலும் கஷ்டபடச்செய்யும்.

ஆனல், திசாநாதனுகிய இராகுபகவான் 3,6,11 ஆமிடத்தில் உச்சம் நட்பாயிருக்க புத்திநாதனுகிய கேதுபகவானும் குரு, சுக்கிரன், புதன் பார்வைபெற்றும் 3,6,11 ஆமிடத்தில் நட்பு உச்சமாயிருந்தால் ஜாதகனுக்குப்பலவிதமானநன்மையும் ஞாபகசக்தியும், சரீராரோக்கியமும், உத்தியோக விருத்தியும், வியாபார லாபமும் தனதான்ய சம்பத்தும் பொருந்தி மனைவிமைந்தர் பந்து மித்திரர் புகழுந்தன்மையான தனவந்தனுயிருப்பதற்காகும்.

இராகுதிசையில் சுக்கிரபுத்தி பலன்

இராகுதிசையில் சுக்கிரபுத்தி 3வருஷம் நடப்பதால்திசநாதனுகிய இராகுபகவான் லக்கினம் 4,7,8,9,12வது ஸ்தானங்களில் பகைநீசமாயிருந்து சூரியன், சந்திரன் பார்வை பெற்றிருக்கபுத்திநாதனுகிய சுக்கிரன் ஜனனலக்கினத்திற்கு

3,6,8,12ஆமிடங்களில் பகைநீசமாய் பகை கிரகங்களின் பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்குப் பலவித மான துன்பமும் துயரமும் பொருந்தி தொழிற்சாலையில் கலகமும் வியாபார நஷ்டமும் வறுமையும் துயரமும் பந்துமித்திரர் கலகமும் உண்டாவதுடன் பலவிதமான மனவிசாரமாயிருக்கும்.

ஆனல், திசாநாதனுகிய இராகு பகவான் 3,6,11ஆமிடத்துல் நட்பு உச்சமாய் குரு, புதன் பார்வைபெற்றும், புத்திநாதனுகிய சுக்கிரனும் இலக்கினம் 2,4,5,7,10,11ஆமிடத்தில் நட்புகிரகங்களின் பார்வைபெற்று நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகருக்குப் பொன்பொருள் பூஸ்திதியும், திரவியலாபமும் உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும் பொருந்தி மனைவிமைந்தர்பந்துமித்திரரால் சுகசௌக்கியமாயிருப்பதற்காகும்.

இராகுதிசையில் சூரியபுத்தி பலன்

இராகுதிசையில் சூரியபுத்தி 10மாதம் 24நாள் நடப்பதினுல் திசாநாதனுகிய இராகுபகவான் இலக்கினப் 4,5,7,12, ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க. புத்திநாதனுகிய சூரியன் இராகு சனியுடன் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்குப் பலவித துன்பமும், துயரமும் நேரிட்டு பகைவரால் பலவிதமான கஷ்டமும், கலகமும் சண்டைசச்சரவும் விஷஜந்துக்களால் அபாயமும் தொழிலின்றிய கொடுமையும் வியாபார நஷ்டமும் பகைவரால் பயங்கரமுண்டாகும்.

ஆனல் திசாநாதனுகிய இராகுபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,10,11 மிடத்தில் நட்பு உச்சமாய் குரு, சுக்கிரன் புதன்பார்வை பெற்றிருக்க, புத்திநாதனுகிய சூரியன் 2,4,5, 7,9வது ஸ்தானங்களில் ஆக்ஷி, உச்சம் நட்பாயிருந்து, நட்பு கிரகங்களின் பார்வை சம்பந்தமாய் குரு வளர்பிறைச்சந்திரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு தீரமும் மனேற்சாகமும், ஞாபகசக்தியும், உத்தியோகவிருத்தியும் வியாபார லாபமும் பெற்று தனதானியசம்பத்துடனும் மனைவிமைந்தர் பந்துமித்திரர் புகழுந்தன்மையான பெருமையாயிருப்பதற்காகும்.

இராகுதிசையில் சந்திரபுத்தி பலன்.

இராகுதிசையில் சந்திரபுத்தி 1 வருஷம் 6 மாதம் நடப்பதால் திசாநாதனுகிய இராகு பகவான் 2,4,7,8,9வது ஸ்தானத்தில் பகைநீசமாயிருந்து சூரியன் சந்திரன்பார்வை பெற்றிருக்க புத்திநாதனுகிய சந்திரன் 3,6,8,12 ஆமிடங்களில் பகைநீசமாயிருந்தால் ஜாதகனுக்கு விகாரபுத்தியும் மனவிசாரமும் முன்கோபமும், இனஜனவிரோதமும் தொழிலில்லாத வறுமையும், சோம்பலும் வியாபாரநஷ்டமும் வறுமையும் சூழ்ந்து துன்பமனுபவிக்கச்செய்யும்.

ஆனல். திசாநாதனுகிய இராகு பகவான்ஜனனலக்கினத்திற்கு 3,6.11 ஆமிடத்தில் நட்பு உச்சமாயிருக்க புத்திநாதனுகிய சந்திரபகவான் இலக்கினம் 2 4,5,7,9,10,11 ஆமிடத்தில் குரு புதன்பார்வை பெற்று நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவிர்த்தியும் வியாபாரலாபமும் திரவியலாபமும் மனைவிமைந்தர் பந்துமித்திரர்சகாயமும் முண்டாகும்.

இராகுதிசையில் செவ்வாய்புத்தி பலன்

இராகுதிசையில் செவ்வாய் புத்தி 1வருஷம்18நாள்நடப்பதினுல் திசாநாதனுகிய இராகுபகவான் லக்கினம் 4,5,7,9, 12ஆமிடங்களில் பகைநீசமாயிருந்தும் புத்திநாதனுகிய செவ்வாய் பகவான் திசாநாதனுக்கு 2,5,7,8,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்குப் பித்த உஷ்ண பேதியும் சுரரோகமும் பகைவரால் துன்பமும் தொழிலகப்படாத துயரமும் வியாபார நஷ்டகஷ்டங்களும் கவலையும் வறுமையும் மனஸ்தாபங்களும் இனஜன விரோதமும் பொருந்தியிருக்கும்.

ஆனல் திசாநாதனுகிய இராகுபகவான் இலக்கினத்திற்கு 3,6,11 ஆமிடத்தில் நட்பு உச்சமாயிருக்க புத்திநாதனுகிய செவ்வாய்பகவான் திசாநாதனுக்கு கேந்திர ஸ்தானங்களிலாயினும் இலக்கினத்திற்கு 4,7,10,11 ஆமிடங்களிலாயினும் நட்பு ஆக்ஷி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்குத் தைரியமும்

ஞாபகசக்தியும் தொழிலபிவிருத்தியும் வியாபாரலாபமும் திரவியசம்பத்தும் பூமிலாபமும் உண்டாவதுடன் தனவந்தனுயிருப்பதற்காகும்.

இராகு திசையில் செவ்வாய்புத்தி சம்பூர்ணம்

குருதிசையில் குருபுத்தி பலன்

குருதிசையில் குருபுத்தி 2 வருஷம் 1 மாதம் 18 நாள் நடப்பதால் திசாநாதனுகிய குரு பகவான் ஜாதகனுடைய ஜனனலக்கினம் 2,5,9,10,11 ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்து நட்பு கிரகங்கள் பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவிர்த்தியும் அறிவும், ஞானமும், சாஸ்திர ஆராய்ச்சியும், வித்யாபிவிர்த்தியும் உத்தியோகமேன்மையும் வியாபாரலாபமும் பொருந்தி தனலாபமும் கிடைக்கச் செய்யும்.

ஆனல், திசாநாதனுகிய குருபகவான் இலக்கினத்திற்கு 3,6,8, 12 ஆமிடத்தில் மறைந்து சனி·ராகு பார்வை பெற்றிருந்தால் வறுமையும் துயரமுமுண்டாவதுடன் கடன்காரர் தொந்தரையும் இன ஜன விரோதமுமுண்டாயிருக்கும்.

குருதிசையில் சனிபுத்தி பலன்

குரு திசையில் சனிபுத்தி 2வருஷம் 6மாதம் 12 நாள் நடப்பதால் திசாநாதனுகிய குருபகவான் 3,6,8,12 ஆமிடங்களில் பகை நீசஸ்தானத்திலிருந்து பகை கிரகங்களின் பார்வை பேற்ருல் ஜாதகன் பலவிதமான துன்பமும், துயரமும் நேரிடும்படியான கஷ்டமும் கவலேயுமடைந்து துயரப்படச் செய்வதுடன் வறுமையும் தொழிலகப்படாத துன்பமும் நேரிட்டு வியாபார நஷ்டமும் கவலேயும் துன்பமுமாயிருக்கும்.

ஆனல் திசாநாதனுகிய குருபகவான் 1,2,5,7,9,11 ஆமிடங்களில் ஆட்சி உச்சமாயிருக்க புத்திநாதனுகிய சனிபகவான் 3,6,11ஆமிடத்தில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு ஞாபகசக்தியும், வித்தியாபிவிருத்தியும், உத்தியோக மேன்மையும், வியாபார லாபமும் பொன், பொருள் சேர்க்கை முதலான நன்மையுண்டாகும்.

குருதிசையில் புதன்புத்திபலன்

குருதிசையில் புதன்புத்தி 2 வருஷம் 3 மாதம் 6 நாள் நடப்பதால் திசாநாதனுகிய குருவும், புத்திநாதனுகிய, புதனும் ஜனனலக்கினத்திற்கு 3,6,8,12வது ஸ்தானத்திலிருந்து சனி ராகு, கேதுபார்வை பெற்ருல் ஜாதகனுக்கு சோம்பல் பெருநித்திரை, மறதி, கிலேசம் பந்துமித்திரர் பகை முதலான பயங்கரமும் உத்தியோகமின்றிய வறுமையும் வியாபார நஷ்டமும்பகைவரின் கொடுமையுமுண்டாயிருக்கும்.

ஆனல் திசாநாதனுகிய குருபகவான் இலக்கினம் 2,5,7 9,11 ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்தும் புத்திநாதனுகிய புதபகவானும் திசாநாதனுக்கு 5,7,9,11மிடத்தில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவிருத்தி ஞாபகசக்தி தொழில் முயற்சி உத்தியோகமேன்மை வியாபாரலாபமுதலான நன்மையனைத்தும் பொருந்தியிருக்கும்

குருதிசையில் கேதுபுத்தி பலன்

குருதிசையில் கேதுபுத்தி 11மாதம் 6நாள் நடப்பதால் திசாநாதனுகிய குருபகவான் ஜனனலக்கினத்திற்கு3,6,8,12 வது மிடங்களிலிருந்து சனி ராகு பார்வைபெற்று பகை நீசஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்கு விஷஜந்துக்களினுல் அபாயமும் சரீரவியாதியும்சுரரோகமும் மறதியும பகைவர் கொடுமையும் வறுமையும் உண்டாகும்.

ஆனல், திசாநாதனுகிய குரு லக்கினம் 2,5,7,9,11ஆமிடங்களில் நட்பு உச்சமாய் நட்புக்கிரகங்களின் சம்பந்தமாயிருக்க புத்திநாதனுகிய கேதுபகவான் இலக்கினத்திற்கு 3,6,11 ஆமிடத்தில் நட்புஉச்சமாய் சந்திரன் சூரியன்பார்வை பெருமல், குரு சுக்கிரன் புதன் பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்கு ஞானமும் கல்வியும் வித்தியாபிவிருத்தியும் ஆசார அனுஷ்டானத்துடன் பெரியோர்கள் சேர்க்கையும் தனதானிய சம்பத்தும் மனேற்சாகமும் பொருந்தி பந்துமித்திரருடன் சுகசௌக்கியமாயிருப்பதற்காகும்.

குருதிசையில் சுக்கிரபுத்திபலன்

குருதிசையில் சுக்கிரபுத்தி 2 வருஷம் 8 மாதம் நடப்பதால் திசாநாதனாகிய குரு ஜனனலக்கினத்திலாயினும் 2, 5, 7 9, 11 ஆமிடத்திலாயினும் ஆட்சி உச்சம் நட்பாயிருக்க புத்திநாதனாகிய சுக்கிரன் திசாநாதனுக்கு 4, 7, 10, 11 ஆமிடத்தில் ஆட்சி, உச்சம் நட்பாயிருந்தால் ஜாதகனுக்கு சரீரசௌக்கியமும் உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும் பொன் பொருள் பூஸ்திதி லாபமும் பொருந்தி மனைவி மைந்தர் பந்து மித்திரர்களுடனே சுகசௌக்கியமா யிருப்பதற்காகும்.

ஆனல் திசாநாதனாகிய குருபகவான் இலக்கினத்திற்கு 3, 6, 8, 12 ஆமிடத்தில் பகை நீசமாய் சனி இராகுடனே சேர்ந்திருக்க புத்திநாதனாகிய சுக்கிரன் ஜனனலக்கினத்திற்காகிலும் திசாநாதனுக்காகிலும் 3, 6, 8, 12 ஆமிடங்களில் பகைநீசமாய் இருந்தால் ஜாதகனுக்கு மறதியும்; சோம்பலும் திகிலும் பயங்கரமும் சத்துருவிரோதமும் பந்துமித்ரர் பகையும் தொழிலில்லாத துன்பமும் வியாபார நஷ்டமும், கவலையும் மனவிசாரமுமாயிருக்கும்.

குருதிசையில் சூரியபுத்தி பலன்.

குரு திசையில் சூரியபுத்தி 9 மாதம் 18 நாள் நடப்பதினல் திசாநாதனாகிய குருபகவான் ஜனனலக்கினத்திற்கு 3-6-8-12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்தும் புத்திநாதனாகிய சூரியனும் சனி ராகு சம்பந்தமாயாவது பார்வை பெற்ருவதிருந்து ஜனனலக்கினத்திற்கு 2, 5, 7, 8, ?, வது ஸ்தானத்தில்பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு சுரரோகமும் மறதியும் சோம்பலும், பகைவர்கொடுமையும் பந்துமித்திரர் விரோதமும் தொழிலகப்படாத துன்பமும் வியாபாரநஷ்டமும் வறுமையும் துயரமும் பொருந்தியிருப்பதற்காகும்.

ஆனல் திசாநாதனாகிய குருபகவான் ஜனனலக்கினத்திற்கு 2, 4, 5 7 9, 11 ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருக்க புத்திநாதனாகிய சூரியன் ஜனனலக்கினத்திலாயினும் திசாநாதனுக்காகிலும் கேந்திர ஸ்தானங்களில் நட்பு ஆட்சி

உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவிருத்தியும் உத்தியோகமுயற்சியும் வியாபார லாபமும் பொன்பொருள் பூஸ்திதியும் பொருந்தியிருப்பதுடன் சுபகாரியமும் சுகசவுக்கியமுமுண்டாகும்.

குருதிசையில் சந்திரபுத்தி பலன்

குருதிசையில் சந்திரபுத்தி 1 வருஷம் 4 மாதம் நடப்பதினல் திசாநாதனாகிய குருபகவான் ஜனனலக்கினத்திற்கு 3 6-8-12 ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க, புத்திநாதனாகிய சந்திரன் திசாநாதனாகிய குருபகவானுக்காகிலும் ஜனனலக்கினத்திற்காகிலும் 3, 6, 8, 12வது ஸ்தானங்களில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு பாலாரிஷ்டமும் பலவித கஷ்டங்களும் சரீரவியாதியும், சுரரோகமும் பகைவர் குரோதமும் கொடுமையும், தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் வறுமையும் துயரமாயிருப்பதற்காகும்.

ஆனல், திசாநாதனாகிய குருபகவான் ஜனனலக்கினம் 2, 5. 7, 9, 11 ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருக்க புத்திநாதனாகிய சந்திரபகவான் ஜனனலக்கினத்திற்கு 2, 4, 5 7, 9, 10. 11 ஆமிடங்களில் ஆக்ஷி உச்சமாய் குரு அங்காரகனுடனே சம்பந்தமாயாவது குரு பார்வை பெற்ருவதிருந்தால் ஜாகனுக்கு வித்தியாபிவிர்த்தியும், புத்திசாதுரியமும் ஞாபகசக்தியும், தொழில்முயற்சியும், உத்தியோக மேன்மையும், வியாபாரலாபமும், தனதானிய சம்பத்தும்பந்துமித்திரர் சகாயமும் பொருந்தியிருப்பதற்காகும்.

குரு திசையில் செவ்வாய்புத்தி பலன்

குருதிசையில் செவ்வாய்புத்தி 11 மாதம் 6 நாள் நடப்பதால் திசாநாதனாகிய குருபகவான் இலக்கினம் 2-5-7-9-11 ஆமிடத்தில் நட்பு ஆட்சி உச்சமாய் புத்திநாதனாகிய செவ்வாய். லக்கினத்திற்கு 4, 5, 9, 10, 11 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாய் குரு புதன் வளர்பிறைச் சந்திரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவிருத்தி ஞாபகசக்தி தொழில்முயற்சி உத்தியோக மேன்மை பூமிலாபம் தனதா

னியசம்பத்து மனைவி மைந்தர் பந்து மித்திரர்களுடன் பொருந்தியிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய குருபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,8,12 ஆமிடத்தில் பகைநீசமாய் சனிராகுடனே சேர்ந்தாவது பார்வைபெற்றாவதிருக்க, புத்திநாதனாகிய செவ்வாய் ஜனனலக்கினத்திற்காகிலும் திசாநாதனுக்காகிலும் 2,3,5 8 9 12 ஆமிடங்களில் பகைநீசமாய் சனி, இராகு, சுக்கிரன், சூரியனுடனே சம்பந்தமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான சஞ்சலமும் திகிலும் மனபயங்கரமும் குரோதமுண்டாகி, இன ஜன விரோதம், முன்கோபம் வறுமையும் உண்டாவதுடன் தொழிலில்லாமலும் வியாபார நஷ்டத்தாலும் கஷ்டநஷ்டமடையச்செய்யும்.

குருதிசையில் இராகுபுத்தி பலன்

குருதிசையில் இராகுபுத்தி 2வருஷம் 5 மாதம் 24 நாள் நடப்பதால் திசாநாதனாகிய குருபகவான் ஜனன லக்கினத்திற்கு 3,6,8 12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்து சனிசம்பந்தமாயாவது பார்வை பெற்றாவதிருக்க புத்திநாதனாகிய இராகு பகவான் ஜனனலக்கினத்திற்காகிலும்திசாநாதனுக்காகிலும் 1,2,5,7,9,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்து சூரியன் சந்திரனுடனே சம்பந்தமாய் அங்காரகன் பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்குவாதசீதள சுரரோகமும் வாய்வுரோகமும் உண்டாவதுடன் தொழிலகப்படாத துன்பமும்வியாபார நஷ்டமும் வறுமையும் பந்துமித்ரர் விரோதமும், சேர்ட்டும் அபரப்படச்செய்யும்‘

ஆனல், திசாநாதனாகிய குருபகவான்ஜனன லக்கினம் 2,5,7,9.11 ஆமிடத்தில் நட்பு ஆட்சிஉச்சமாய் இருக்கபுத்திநாதனாகிய இராகுபகவான் 2,4,6,10 ஆமிடத்தில் நட்பு உச்சமாயிருந்து குரு சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகருக்கு வித்யாபிவிருத்தியும் உத்தியோகமேன்மையும் வியாபாரலாபமும் பொன்பொருள் சேர்க்கையும் மனைவிமைந்தர் பந்துமித்திரர் சகாயமும் பொருந்தியிருக்கும்.

குருதிசையில் இராகுபுத்தி சம்பூர்ணம்

சனிதிசையில் சனிபுத்தி பலன்

சனிதிசையில் சனிபுத்தி 3வருஷம் 8நாள் நடப்பதால் திசாநாதனாகிய சனிபகவான் ஜனன லக்கினம் 2-4-7-8-12 ஆமிடத்தில் சூரியன் ராகு சம்பந்தமாயிருந்து பகைநீசமாயிருந்தால் ஜாதனுக்கு பலவிதமான கஷ்டமும் கவலையும் தொழிலகப்படாததுன்பமும் துயரமுமேற்பட்டு வறுமையால் கலங்கி மனைவிமைந்தர் பந்துமித்திரர் பகையினால் கலங்கி விரோதிகளின் குரூரபயங்கரமும் தீராமனக்கவலைபுமாயிருக்கும்

ஆனால் திசாநாதனாகிய சனிபகவான் 3,6,10,11 ஆமிடத்தில் நட்புஆட்சிஉச்சமாய் குரு சுக்கிரன் புதன் வளர்பிறைச் சந்திரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு மனதைரியமும் உற்சாகமும் தீரமும் உத்தியோக விருத்தியும் வியாபாலாபமும் பொன் பொருள் சேர்க்கையும் மனைவிமைந்தர்புகழுந்தன்மையான பலவித நன்மையும் பொருந்தி தனவந்தனுயிருப்பதற்காகும்

சனிதிசையில் புதன்புத்தி பலன்

சனிதிசையில் புதன்புத்தி 2 வருஷம் 8 மாதம் 9 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய சனிபகவான் இலக்கினம் 2 4 7,8,9 வது ஸ்தானங்களில் பகை நீசமாயிருந்து சூரியன் இராகுடனே சம்பந்தமாயிருந்தாலும் பார்வைபெற்றாலும் புத்திநாதனாகிய புதபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,8,12 ஆமிடத்தில் பகைநீசமாகவுமிருந்தால் ஜாதகனுக்குப்பலவிதமான கஷ்டமும் கலகமும் மனஸ்தாபமும் தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் மனைவிமைந்தர் பந்துமித்திரர் விரோதமும் வறுமையும் கஷ்டநஷ்டமும் கவலையுமாயிருக்கும்.

ஆனால் திசாநாதனாகிய சனிபகவான் 3,6 11 ஆமிடங்களில் நட்பு ஆக்ஷி உச்சமாயிருந்து குரு சுக்கிரன் பார்வை பெற்றிருக்க புத்திநாதனாகிய புதபகவான் ஜனனலக்கினம்

2,4;5,7,9,11வது ஸ்தானத்தில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்து குருவளர்பிறைச்சந்திரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்தியாபிவிர்த்தியும் ஞாபகசக்தியும் சங்கீத ஞானமும் உத்தியோக விர்த்தியும் சரீராரோக்கியமும் வியாபாரலாபமும் பொன் பொருள் பூஸ்திதிகளும் மனைவிமைந்தர் பந்து மித்திரர் உபசரணையும் பொருந்தியிருக்கும்.

சனி திசையில் கேதுபுத்தி பலன்

சனி திசையில் கேதுபுத்தி 1 வருஷம் 1 மாதம் 9 நாள் நடப்பதால் திசாநாதனுகிய சனிபகவான் 3,6,11மிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்து புதன் குரு சுக்கிரன் பார்வை பெற்றிருக்க புத்திநாதனுகிய கேதுபகவான திசாநாதனுக்கு 3,4,6,11ஆமிடங்களில் நட்பு உச்சமாயிருந்து குரு சுக்கிரன் பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்கு கல்வியும் ஞானமும் ஆசார அனுஷ்டானமும் பொருந்தியிருப்பதுடன் திரவிய லாபத்துடனும் வியாபாரலாபத்துடனும் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடன் சுகசௌக்கியமாயிருப்பதற்காகும்.

ஆனுல் திசாநாதனுகிய சனிபகவான் ஜனன லக்கினத்திற்கு 2,4,79,12மிடத்தில் பகை நீசமாய் சூரியன் இராகுடனே சேர்ந்தாகிலும் பார்வை பெற்றாகிலுமிருக்க புத்திநாதனுகிய கேது ஜனனலக்கினத்திற்கு 2,4,7,9,12 மிடத்தில் பகை நீசமாயிந்தால் ஜாதகனுக்கு மன சஞ்சலம் வறுமையும் கஷ்டநஷ்டமுமனுபவித்து துயரப்படுவதாயிருக்கும்.

சனிதிசையில் சுக்கிரபுத்தி பலன்

சனிதிசையில் சுக்கிரபுத்தி 3 வருஷம் 2மாதம் நடப்பதினுல் திசாநாதனுகிய சனிபகவான் சூரியன் ராகுடனேசம்பந்தமாய் லக்கினம் 4 7 10 12ஆமிடத்தில் பகை நீசமாயிருக்க புத்திநாதனுகிப சுக்கிரன் இலக்கினத்திற்கு 3 6 8 12 ஆம் ஸ்தானத்தில் பகை நீசமாயிருந்து சூரியன் செவ்வாய் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான கஷ்ட நஷ்டங்களும் கவலையும் மன விசாரமுமாயிருப்பதற்காகும்.

ஆனுல், திசாநாதனுகிய சனிபகவானுக்கு புத்திநாதனுகிய சுக்கிரன் நட்புக்கிரமானபடியால், சுக்கிரன் திசாநாதனுக்கும் இலக்கினத்திற்கும் 4,7 9,11வது ஸ்தானங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்து நட்புக்கிரகங்களின் பார்வை பெற்றிருந்தால் ஜாதகன் வித்யாபிவிர்த்தியுடன் சாஸ்திர ஆராய்ச்சியிலும் தேறி சகலருக்கும் உத்தமனுயிருந்து ஆசார அனுஷ்டானத்துடன தெய்வபக்தியிற்சிறந்தவனுய் தொழில் முயர்ச்சி உத்தியோகவிருக்கி வியாபாரலாபமும் பொருந்தியிருப்பதுடன் பொன்பொருள் பூஸ்திதியுடன் மனைவிமைந்தர் பந்துமித்ரர்களுடனே சுகஜீவியாயிருப்பதர்க்காகும்

சனிதிசையில் சூரியபுத்தி பலன்

சனிதிசையில் சூரியபுத்தி 11 மாதம் 12நாள் நடப்பதினுல் திசாநாதனுகிய சனிபகவானும் புத்திநாதனுகிய சூரியனும் சுக்கிரன் இராகுடனே சம்பந்தமாய் லக்கினம் 2,4,5,7 8,9,12ஆமிடங்களில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான கஷ்டநஷ்டங்களும் பகைவர் கொடுமையும் பந்துமித்திரர் விரோதமும் உண்டாகி துயரப்படச்செய்யும்.

ஆனுல், திசாநாதனுகிய சனிபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,10,11வது ஸ்தானத்தில் ஆக்ஷி உச்சம் நட்பாயிருந்து சுக்கிரன் குருபார்வை பெற்றிருக்க புத்திநாதனுகிய சூரியன் செவ்வாய் புதனுடனே சேர்ந்து ஜனனலக்கினம் 2,4,7,9வது ஸ்தானத்தில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்து குரு வளர்பிறைச்சந்திரன் பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவ்ருத்தி திரவியலாபம் பொன் பொருள் பூஸ்திதிலாபத்துடன் மனைவிமைந்தர் பந்துமித்திரர்களுடன் சுகசௌக்கியமாய்வாழ்ந்திருப்பதற்காகும்.

சனிதிசையில் சந்திரபுத்தி பலன்

சனி திசையில் சுக்கிரபுத்தி 1வருஷம் 7மாதம் நடப்பதால் திசாநாதனுகிய சனிபகவான் லக்கினம் 2, 4, 7, 9, 12

மிடத்தில் பகை நீசமாய் சூரியன் இராகுடன் சேர்ந்திருக்க புத்திநாதனாகிய சந்திரனும் லக்கினத்திற்கு 3, 6, 8, 12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு மந்தபுத்தியும் அசாரதனமும் மறதியும் சோம்பலும் மூதேவி வாசமும் தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் மனைவி மைந்தர் பந்துமித்ரர் பகையும் விரோதிகளின் கொடுமையும் குரோதமும் துன்பமும் துயரமும் பொருந்தியிருக்கும்.

ஆனால் திசாநாதனாகிய சனிபகவான் இலக்கினத்திற்கு 3,6,11 ஆமிடத்தில் நட்பு ஆட்சி உச்சமாய் சுக்கிரனுடன் சம்பந்தமாகவும் குரு புதன் பார்வைபெற்றுமிருக்க, புத்தி நாதனாகிய சந்திரன் இலக்கினத்திற்கு 2 4,5,7,9,10 ஆமிடங்களில் நட்பு ஆட்சி, உச்சமாய் குரு புதன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்தியாபிவிருத்தியும் ஞாபகசக்தியும் கல்வியும் ஞானமும் ஆசார அனுஷ்டானம் இலக்ஷ்மி கடாக்ஷமும் உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும்பொருந்தி தனதானிய சம்பத்துடன் பொன் பொருள் பூஸ்திதி லாபமும் பொருந்தியிருப்பதர்க்காகும்

சனிதிசையில் செவ்வாய்புத்தி பலன்

சனிதிசையில் செவ்வாய்புத்தி 1வருஷம் 1மாதம் 9நாள் நடப்பதனுல் திசாநாதனாகிய சனிபகவான் ஜனனலக்கினத்திற்கு 2,4,7,8,9,12வது ஸ்தானத்தில் பகைநீசமாய் சூரியன் ராகுடனே சம்பந்தமாயிருக்க புத்திநாதனாகிய செவ்வாய் ஜனனலக்கினத்திற்கு 2,4,7,8,12 ஆமிடத்தில் பகைநீசமாய் பகை கிரகங்களின் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான துன்பமும் துயரமும் கஷ்டமும் கவலையுமுண்டாகி பந்துமித்துரர் பகையும் சத்துருக்கள் விரோதமுமுண்டாகி மனைவிமைந்தரில்லாமல் வறுமையும் வியாதியும் பொருந்தியிருப்பதற்காகும்

ஆனுல், திசாநாதனாகிய சனிபகவான் 3,6 11வது ஸ்தானத்தில் ஆட்சி உச்சமாய் சுக்கிரனுடனே சேர்ந்து குரு புதன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான நன்மையும் வித்யாசாதுர்யமும், ஞாபகசக்தியும் உத்தியோக

விருத்தியும் வியாபார லாபமும் பொருந்தி பொன் பொருள் பூஸ்திதிலாபமும் பூர்வீகபூமியும் கிடைத்து மனைவிமைந்தர்களுடன் சுகசவுக்கியமாயிருப்பதற்காகும்.

சனிதிசையில் இராகுபுத்தி பலன்

சனிதிசையில் இராகுபுத்தி 2வருஷம் 10மாதம் 6நாள் நடப்பதினுல் திசாநாதனாகிய சனிபகவான் ஜனனலக்கினம் 2,4,7 9,12மிடங்களில் பகை நீசமாய் சூரியனுடனே சம்பந்தமாகவும் செவ்வாய் பார்வை பெற்றிருக்க புத்திநாதனாகிய ராகுபகவான் லக்கினம் 4,5,8 9,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருக்க சந்திரன் பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்கு மனசஞ்சலமும், சத்துருவிரோதமும் தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் வறுமையும் கவலையுமாயிருக்கும்.

ஆனுல் திசாநாதனாகிய சனிபகவான் 3,6,11 ஆமிடத்தில் ஆக்ஷி உச்சம் நட்பாயிருந்து குருபுதன் சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் புத்திநாதனாகிய இராகு பகவான் திசாநாதனுக்கு 4,7,10,11 ஆமிடத்தில் நட்பு உச்சமாயிருந்து குரு பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்கு மனதைரியமும் உற்சாகமும் உத்தியோக விர்த்தியும் வியாபாரலாபமும் பொன் பொருள் பூஸ்திதிலாபமும் மனைவிமைந்தர் பந்துமித்ரர் உபசரணையும் பொருந்தி சுகசவுக்கியமாயிருப்பதற்காகும்.

சனிதிசையில் குருபுத்திபலன்

சனி திசையில் குருபுத்தி 2 வருஷம் 6 மாதம் 12 நாள் நடப்பதினுல் திசாநாதனாகிய சனிபகவான் ஜனன லக்கினத்திற்கு 3,6,11 ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்து புதன் வளர்பிறைச்சந்திரன் சுக்கிரன் பார்வை பெற்றிருக்க புத்திநாதனாகிய குருபகவான் இலக்கினம் 2,4,5,7,9 ஆமிடத்தில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவிருத்தியும் இலக்ஷ்மி கடாக்ஷமும் உத்தியோகவிருத்தியும் வியாபாரலாபமும் பொருந்தி பொன் பொருள் பூஸ்திதி லாபமும் மென்மேலும் பெருகி கீர்த்திப் பிரகாசமாயிருப்பதர்க்காகும்.

ஆனல், திசாநாதனுகிய சனிபகவான் 4,5,7,8,9,12 ஆமிடத்தில் பகை நீசமாய் சூரியனேடு சேர்ந்திருக்க புத்திநாதனுகிய குருபகவான் இலக்கினத்திற்கு 3,6,8,12 ஆமிடத்தில் சுக்கிரனுடனே சம்பந்தமாய் இராகு பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான கஷ்டநஷ்டங்களும் வறுமையும் பகைவர்களின் கொடுமையும் பொருந்தி மனவிசாரமாயிருப்பதற்காகும்.

சனிதிசையில் குருபுத்தி சம்பூர்ணம்

புதன்திசையில் புதன்புத்தி பலன

புதன் திசையில் புதன் புத்தி 2வருஷம் 4மாதம் 27நாள் நடப்பதால் புதபகவான் இலக்கினம் 2,4,5'7 9,10,11 ஆடங்களில் நட்பு ஆட்சி உச்சமாய் வளர்பிறைச்சந்திரன் குரு பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான நன்மையும் திரவியலாபமும் உண்டாவதுடன் மனைவி மைந்தர் பந்து மித்ரர்களுடன் சுகசவுக்கியமாயிருப்பதர்க்காகும்.

ஆனல் புதபகவான் இலக்கினத்திற்கு 3,6,8,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான துன்பமும்கவலையும் மனவிசாரமாயிருப்பதுடன் உத்தியோகம் தொழிலில்லாத வறுமையும் வியாபார கஷ்டமும் கடன்காரர் தொந்தரையாலும் மன விசாரப்படுவதாயிருக்கும்.

புதன் திசையில் கேது புத்தி பலன்

புதன் திசையில் கேதுபுத்தி 11 மாதம் 27 நாள் நடப்பதால் திசாநாதனுகிய புதபகவான் ஜனன இலக்கினத்திற்கு 3 6,8.12 ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க புத்திநாதனுகிய கேதுபகவான் ஜனனலக்கினம் 2,4,5,7,8,9,12 ஆமிடங்களில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு விஷபயங்கரமும் மனஸ்தாபமும் வறுமையும் துன்பமும் பகைவரால் கலகமும் தொழிலப்படாத துன்பமும் மனைவி மைந்தர்பந்து மித்திரர்களால் கலகமுமுண்டாகும்.

ஆனல்; திசாநாதனுகிய புதபகவான் ஜனனலக்கினம் 2,5,7,9 10,11 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருக்க புத்திநாதனுகிய கேதுபகவானும் இலக்கினத்திற்கு 3,6 ஆமிடங்களில் நட்பு உச்சமாயிருந்து குரு பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு ஆசார அனுஷ்டானமும், கல்வியும் ஞானம் வித்தியாபிவிருத்தியும், உத்தியோகமேன்மையும் வியாபார லாபமும் பொன், பொருள் பூஸ்திதிலாபமும் பெற்று மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகஜீவியாயிருப்பதற்காகும்.

புதன்திசையில் சுக்கிரபுத்தி பலன்

புதன் திசையில் சுக்கிரபுத்தி 2வருஷம் 10 மாதம் நடப்பதினுல் திசாநாதனுகிய புதபகவான் இலக்கினத்திற்கு 3,6,8 12 ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க புத்திநாதனுகிய சுக்கிரன் திசாநாதனுக்கு திரிதியசஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகைநீசமாய் சூரியனுடனே சேர்ந்திருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான மனஸ்தாபமும் வறுமையும் துன்பமும் அன்னியஸ்திரீகளால் கலகமும் தொழிலகப்படாத கவலையும் வியாபாரகஷ்டமும் பொருந்தி மனவிசாரமாய் திகில்படச்செய்யும்.

ஆனல் திசாநாதனுகிய புதனும்புத்தி நாதனுகிய சுக்கிரனும் சம்பந்தமாய் ஜனனலக்கினம் 2,4,5,7,9,10,11 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்குகல்வியும் ஞானமும் அறிவும் ஆலோசனையும் ஆசார அனுஷ்டானமும் சாஸ்திர ஆராய்ச்சியும் பெரியோர்கள் சேர்க்கையும் சுபகாரிய வைபவங்களும் உத்தியோக விருத்தியும் வியாபாரலாபமும் பொன் பொருள் பூஸ்திதி சேர்க்கையும் பொருந்தி மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

புதன்திசையில் சூரியபுத்தி பலன்.

புதன் திசையில் சூரியபுத்தி 10 மாதம் 6 நாள் நடப்பதினுல் திசாநாதனுகிய புதன் 3,6,8,12வது ஸ்தானத்தில் பகை

நீசமாயிருக்க புத்திநாதனாகிய சூரியன் திசாநாதனுடன் சேர்ந்து ஜனனலக்கினத்திற்கு 3,6,8,12வது ஸ்தானத்தில் சனி இராகு சம்பந்தமாய் பகை நீசமாய் சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு பகைவர்களின் விரோதமும் பலவித துன்பமும் வறுமையும் சூழ்ந்து துயரப்படச்செய்யும்.

ஆனால் திசாநாதனாகிய புதனும் புத்திநாதனாகிய சூரியனும் ஜனனலக்கினம் 2,4,5,7,9,10,11ஆமிடங்களில் ஆட்சி உச்சம்நட்பாய் குருபார்வை பெற்றிருந்தால் ஜாதகன் வித்தியாபிவிர்த்தியுடனும் சாஸ்திர ஆராய்ச்சியில் சிறந்தவனாய் உத்தியோக மேன்மையுடனும் வியாபார லாபத்துடனும் பொன் பொருள் சேகரஞ் செய்து மனைவிமைந்தர் பந்துமித்திரர்களுடன் பெருமையாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

புதன்திசையில் சந்திரபுத்தி பலன்.

புதன் திசையில் சந்திரபுத்தி 1வருஷம் 5மாதம் நடப்பதனால் திசாநாதனாகிய புதன் சனி இராகு சூரியனுடனே சம்பந்தமாய் லக்கினத்திற்கு 3,6,8,12ஆமிடங்களில் பகைநீசமாய் சனிஇராகு பார்வை பெற்றிருக்க புத்திநாதனாகிய சந்திரன் திசாநாதனுக்கு திரிதிய சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசமாயிருநதால் ஜாதகனுக்குப் பலவிதமான கவலையும் மனவிசாரமும் விகாரபுத்தியும் தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் மனைவிமைந்தர் பந்துமித்திரர்களின் விரோதமும் மதிமயக்கமும் மந்தபுத்தியும் உண்டாகும்

ஆனால் திசாநாதனாகியபுதபகவான் சூரியன் குருவுடனே சேர்ந்து ஜனனலக்கினம் 2 4-5-7-9-10-11வது ஸ்தானங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருக்க புத்திநாதனாகிய சந்திரன் ஜனன லக்கினத்திற்கு 2 5 7 11 வது ஸ்தானங்களிருந்தால் ஜாதகனுக்கு ஞாபக சக்தியும் ஆசார அனுஷ்டானமும் பெரியோர்கள் சேர்க்கையும் உத்தியோக விருத்தியும் வியாபாரலாபமும் பொருந்தியிருப்பதுடன் மனைவி மைந்தர் பந்துமித்திரர் சகாயமும் பொருந்தி சுக ஜீவியாயிருப்பதற்காகும்.

புதன் திசையில் செவ்வாய் புத்தி பலன்

புதன் திசையில் செவ்வாய்புத்தி 11 மாதம் 27 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய புதன் திரிதிய சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் மறைந்திருக்க புத்திநாதனாகிய செவ்வாயும் திசாநாதனுக்கு சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் வக்கிரமாயிருந்து சனி ராகு சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான கவலையும் துன்பம் துயரமும் நேரிட்டு மனவிசாரத்தினால் தொழிலகப்படாமலும் வியாபாரகஷ்டத்தாலும் வறுமையாலும் மன பயங்கரத்தாலும் கடன்காரர் தொந்தரையாலும் துயரப்படச்செய்யும்.

ஆனால் திசாநாதனாகிய புதன் லக்கினம் 5 7 9 11 ஆமிடத்தில் நட்பு ஆட்சிஉச்சம் குரு பார்வை பெற்றிருக்கபுத்திநாதனாகிய சேவ்வாயும் இலக்கினத்திற்கு 4 10 11 ஆமிடங்களில் ஆட்சிஉச்சம் நட்பாயிருந்தால் ஜாதகனுக்குபலவிதமான நன்மையும் பொன் பொருள் பூமிலாபமும் திரவிய லாபமும் மனைவி மைந்தர் பந்துமித்திரர் சகாயமும் பொருந்தியிருக்கும்.

புதன் திசையில் இராகு புத்தி பலன்

புதன் திசையில் இராகுபுத்தி 2 வருஷம் 6 மாதம் 18 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய புதபகவான் ஜனன லக்கினம் 5 9 11 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாய்இருந்து குரு வளர்பிறைச்சந்திரனுடைய பார்வைபெற்றிருக்க புத்திநாதனாகிய இராகுபகவான் லக்கினத்திற்கு 3 6 10 வது ஸ்தானத்திலிருந்து குரு சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான நன்மையும் வித்தியாசமர்த்தும் ஞாபகசக்தியும் உத்தியோக விருத்தியும் வியாபார லாபமும் சுபகாரியங்களும் பந்துமித்ரர் சகாயமும் பொருந்தியிருப்பதுடன் மனைவி மைந்தர்களுடனே சுக சௌக்கியமாயிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய புதபகவான் இலக்கினத்திற்கு 3,6.8,12 ஆமிடங்களில் பகைநீசமாயிருக்க புத்திநாதனாகிய இராகுபகவான் லக்கினம் 5,7,9, 12 ஆமிடங்களில் பகை நீசமாய் சூரியன் சனியுடன் சேர்ந்து செவ்வாய் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான மனசஞ்சலமும் திகிலும் வறுமையும் தொழிற்சாலையில் கலகமும்கஷ்டமும் வியாபார நஷ்டமும் பொருந்தி பந்து மித்ரர் பகையுமுண்டாயிருக்கும்.

புதன் திசையில் குருபுத்தி பலன்

புதன் திசையில் குருபுத்தி 2 வருஷம் 3 மாதம் 6 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய புதபகவானும் சூரியனும் புத்திநாதனாகிய குருவும் சேர்ந்து லக்கினம் 2,4,5,7,9 10,11 ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்தால் ஜாதகனுக்கு வித்தியாபிவிர்த்தியும் ஞாபகசக்தியும் ஆசார அனுஷ்டானமும் உத்தியோக விர்த்தியும் வியாபார லாபமும் பொருந்தி தன தானிய சம்பத்துடனும் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடன் சுக சௌக்கியமா யிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய புதபகவானும் புத்திநாதனாகிய குருவும் 3,6,8,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருந்து சனி இராகுடனே சம்பந்தமாயிருந்தால் ஜாதகனுக்குபலவிதமான கஷ்டமும் கவலையும் வறுமையும் தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் கவலையுமாயிருக்கும்.

புதன் திசையில் சனி புத்தி பலன்

புதன் திசையில் சனிபுத்தி 2 வருஷம் 8 மாதம் 9 நாள் நடப்பதால் திசாநாதனாகிய புத பகவான் இலக்கினத்திற்கு 3,6 8,12 ஆமிடங்களில் சூரியன் இராகுடனே சம்பந்தமாயிருக்க புத்திநாதனாகிய சனியும் 4 7 10 11 ஆமிடங்களில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான சஞ்சலமும் திகிலும் விசனமும் வியாகூலமும் தொழிலகப்படாத துன்பமும் துயரமுமா யிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய புதபகவான் வளர்பிறைச்சந்திரன் குருவுடனே சம்பந்தமாய் இலக்கினம் 2,5,9,11 ஆமிடங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்தால் ஜாதகன்வித்யா சமர்த்துடனும் ஞாபகசக்தியுடனும் உத்தியோக மேன்மை வியாபாரலாபத்துடனும் பொன் பொருள் பூஸ்திதியும் பெசகசித்து மனைவிமைந்தருடனே சுகசவுக்கியமாயிருப்பதற்காகும்

புதன்திசையில் சனிபுத்தி சம்பூர்ணம்

கேதுதிசையில் கேதுபுத்தி பலன்

கேதுதிசையில் கேதுபுத்தி 4மாதம் 27 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய கேதுபகவான் சூரியன் சந்திரனுடனே சம்பந்தமாய் ஜனனலக்கினம் 5-7-9 ஆமிடங்களில் பகை நீசமாய் சனிபார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான துன்பமும், துயரமும் கவலையும் மனஸ்சாரமும் பொருந்தியிருப்பதுடன் விஷபூச்சிகளின் பயங்கரமும் தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் வறுமையும் பொருந்தியிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய கேது பகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,11ஆமிடங்களில் நட்பு உச்சமாயிருந்து புதன், குரு சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்யாபிவிருத்தியும் உத்தியோக முயற்சியும் திரவியலாபமும் சுகசவுக்கியமுமுண்டாகும்.

கேதுதிசையில் சுக்கிரபுத்தி பலன்.

கேதுபகவான் திசையில் சுக்கிரபுத்தி 1வருஷம் 2மாதம் நடப்பதால் திசாநாதனாகிய கேதுபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,11 ஆமிடத்தில் நட்பு உச்சமாய் குரு பார்வை பெற்றிருக்க புத்திநாதனாகிய சுக்கிரனை ஜனன இலக்கினம் 2,4,5,7,9,10 ஆமிடங்களில் ஆட்சி உச்சமாய் வளர்பிறைச்சந்திரன் புதன் பார்வைபெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்தியாபிவிருத்தி ஞாபகசக்தி சாஸ்திர ஆராய்ச்சியும்

சங்கீதஞானமும், உத்தியோகமேன்மையும் ஆசார அனுஷ்டானமும் வியாபாரலாபமும் தனதான்யசம்பத்தும் பொன் பொருள் பூஸ்திதி லாபமும் சுகசௌக்கியமும் பொருந்தியிருக்கும்.

ஆனால் திசாநாதனாகிய கேதுபகவான் ஜனனலக்கினம் 2,4,7,9,12 ஆமிடங்களில் சூரியன் சந்திரனுடனே சேர்ந்து பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான துன்பமும் சஞ்சலமும், வியாதியும் மனதிகிலும் விஷபயமும் சத்துரு கொடுமையும் மறுமையும் பொருந்தியிருக்கும்.

கேதுதிசையில் சூரிய புத்தி பலன்

கேது திசையில் சூரியபுத்தி 4மாதம் 6 நாள் நடப்பதினால் திசாநாதனாகிய கேதுபகவான் சனியுடனும் புத்திநாதனாகிய சூரியன் சுக்கிரனுடனும் சம்பந்தமாய் பகை நீசஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான துன்பமும் துயரமும் வறுமையும் பகைவர் கொடுமையும் விஷஜந்துக்களின்பயங்கரமும் தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் பொருந்தி மனவிசாரமாயிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய கேதுபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,11 ஆமிடத்தில் நட்புஉச்சமாயிருப்பதுடன் குருபுதன் சுக்கிரன் பார்வை பெற்றிருக்க புத்திநாதனாகிய சூரியன் புதனுடன் சேர்ந்து ஜனனலக்கினம் 2,4,7,10 ஆமிடங்களில் ஆக்ஷிஉச்சம் நட்பாயிருந்து குருபார்வை பெற்றிருந்தால் ஜாதகன் வித்யா சமர்த்துடனும் ஆசார அனுஷ்டானத்துடனும் சுகசவுக்கியமாயிருப்பதுடன் வித்தியாபிவிர்த்தியும் தொழில்முயற்சி உத்தியோகவிருத்தி வியாபாரலாபம் பொருந்தியிருப்பதுடன் மனைவி மைந்தர் பந்துமித்திரர் புகழுந்தன்மையான பெருமையாயிருப்பதற்காகும்,

கேது திசையில் சந்திர புத்தி பலன்

கேதுதிசையில் சந்திரபுத்தி 7 மாதம் நடப்பதால் திசாநாதனாகிய கேதுபகவான் புத்திநாதனாகியசந்திரனுடனே சேர்ந்து

லக்கினம் 2,5,7,12வது ஸ்தானத்தில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு விஷபயமும் பகைவர் கொடுமையும் தொழில்லாத தன்மையும் வியாபார நஷ்டமும் பொருந்தி வறுமை வியாதியும் மரணபயங்கரமுமுண்டாகும்.

ஆனால் திசாநாதனாகிய கேதுபகவான் நட்பு உச்சமாய் 3,6,11 ஆமிடங்களிலிருக்க புத்திநாதனாகிய சந்திரன் இலக்கினம் 2,5,7,9,10 ஆமிடங்களிலிருந்து குருபுதன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு வித்தியாசமர்த்தும் மனதைரியம் கல்வியும் ஞானமும் உத்தியோகவிருத்தியும் தொழில் முயற்சியும் வியாபார லாபமும் பொன் பொருள் பூஸ்திதி சம்பத்தும் பொருந்தி மனைவிமைந்தர் பந்துமித்திரர்களுடன் சுகஜீவியாயிருப்பதற்காகும்.

கேதுதிசையில் செவ்வாய்புத்தி பலன்

கேதுதிசையில் செவ்வாய்புத்தி 4மாதம் 27நாள் நடப்பதினால் திசாநாதனாகிய கேதுபகவான் ஜனனலக்கினம் 2,4,5,9,10வது ஸ்தானங்களில் பகை நீசமாயிருக்க புத்திநாதனாகிய செவ்வாய் பகவான் ஜனனலக்கினத்திற்கு 7,8,9,12 ஆமிடத்தில் பகை நீசமாய் சுக்கிரன் பார்வை பெற்று சனி சூரியன் சம்பந்தமாயிருந்தால் ஜாதகனுக்கு மனவிசாரமும் துன்பமும் துயரமும் தொழிலகப்படாத கவலையும் வியாபார நஷ்டமும் வறுமையும் பொருந்தியிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய கேதுபகவான் இலக்கினத்திற்கு 2,3,6,9,11 ஆமிடத்தில் உச்சம் நட்பாயிருந்து குரு பார்வை பெற்றிருக்க புத்திநாதனாகிய செவ்வாய் பகவான் இலக்கினம் 4,7,10 ஆமிடங்களிலிருந்து குரு சுக்கிரன் பார்வை பெற்று நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு பூமிலாபமும் பொன் பொருள் சேர்க்கையும் வியாபாரலாபமும் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகசௌக்கியமாயிருப்பதற்காகும்.

கேதுதிசையில் இராகுபுத்தி பலன்

கேதுதிசையில் இராகுபுத்தி 1வருஷம் 18நாள் நடப்பதால் திசாநாதனாகிய கேதுபகவான் ஜனனலக்கினம் 2,4,5, 7,9,10, 2ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க புத்திநாதனாகிய இராகுபகவானும் சூரியன் சனியுடனே சேர்ந்து பகை நீசஸ்தானத்திலிருக்க ஜாதகனுக்கு விஷபயமும், வைப்பு, சூனியம் முதலான குரூரபயங்கரமாயிருப்பதுடன் வைசூரி, சீதபேதி சுரவியாதிமுதலான குரூரபயங்கர ரோகமனைத்தும் பொருந்தியிருப்பதுடன் வறுமையும், துயரமும் தொழிலப்படாத துன்பமும் பொருந்தியிருக்கும்.

ஆனால், திசாநாதனாகிய கேதுபகவான் குருபார்வை பெற்று இலக்கினத்திற்கு 3,6,11ஆமிடத்தில் நட்பு உச்சமாயிருக்க புத்திநாதனாகிய இராகுபகவானும் நட்புஸ்தானங்களில் குரு சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான நன்மையும் தைரியமும், தொழில் முயற்சியும் வியாபாரலாபமும் உத்தமபந்துமித்திரர் சேர்க்கையும் பொருந்தி சுக சௌக்கியமாயிருப்பதற்காகும்.

கேதுதிசையில் குருபுத்தி பலன்

கேது திசையில் குருபுத்தி 11மாதம் 6நாள் நடப்பதினால் திசாநாதனாகிய கேதுபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,11 ஆமிடங்களில் நட்பு உச்சமாயிருக்க புத்திநாதனாகிய குரு பகவான் இலக்கினம் 2,5,7,9,10ஆமிடங்களில் நட்புஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு கல்வியும் ஞானமும் வித்தியாபிவிருத்தியும் பெரியோர்கள் சேர்க்கையும், உத்தியோக மேன்மையும் வியாபார விருத்தியும் பொன் பொருள் பூஸ்திதிலாபமும் பொருந்தி சுக சௌக்கியமாயிருப்பதற்காகும்.

ஆனால், திசாநாதனாகிய கேதுபகவான் ஜனனலக்கினம் 2,4,5.7,9 ஆமிடங்களில பகை நீசமாய் சூரியன் சனியுடனே சம்பந்தமாயிருந்தால் புத்திநாதனாகிய குரு 3.6,8,12ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க ஜாதகனுக்கு மனஸ்தாபமும் பகைவர் கொடுமையும் துன்பமும் துயரமும் பொருந்தி

தொழிலகப்படாத கவலையும் விசனமும் வியாபார நஷ்டமும் பொருந்தி இருக்கும்படியான கொடுமையாயிருப்பதற்காகும்.

கேதுதிசையில் சனிபுத்தி பலன்.

கேதுதிசையில் சனிபுத்தி 1 வருஷம் 1 மாதம் 9 நாள் நடப்பதினால், திசாநாதனாகிய கேதுபகவான்ஜனனலக்கினம் 2,4,5 7,8ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க, புத்திநாதனாகிய சனிபகவான் கேதுடனே சம்பந்தமாய் சூரியன்பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு துன்பமும் துயரமும் சூழ்ந்து தொழிகப்படாத கவலையும், வியாபார நஷ்டமும் மனைவி மைந்தர் பந்துமித்திரர் பகையும் நேரிட்டு துயரப்படச்செய்யும்.

ஆனால், திசாநாதனாகிய கேதுபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,11 ஆமிடங்களில் நட்புஉச்சமாயிருக்க புத்திநாதனாகிய சனிபகவான் சுக்கிரனுடனே சேர்ந்து ஜனனலக்னம் 2 6-7ஆமிடங்களில் ஆக்ஷி உச்சம் நட்பாயிருந்தால் ஜாதகனுக்கு பலவித நன்மையும் தொழில் முயற்சியும் நூதன வியாபாரமும் திரவிய சேர்க்கையும் உண்டாயிருப்பதுடன் மனைவிமைந்தர் பந்துமித்திரர்களின் உபசரணையும் பொருந்தியிருக்கும்

கேது திசையில் புதன்புத்தி பலன்

கேதுதிசையில் புதன்புத்தி 11மாதம் 27நாள் நடப்பதினால் திசாநாதனாகிய கேதுபகவான் இலக்கினம் 2,4,7,8.9ஆமிடங்களில் பகை நீசமாய் சூரியனுடனேசம்பந்தமாயிருக்க புத்திநாதனாகிய புதபகவான் ஜனன லக்கினத்திற்கு 3,6,12 ஆமிடங்களில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு விசாரமும் திகிலும் சஞ்சலமும் தொழிலகப்படாத துன்பமும் நேரிட்டு கவலையடையச் செய்யும்.

ஆனால் திசாநாதனாகிய கேதுபகவான் நட்பு உச்சமாய் சுபக்கிரகபார்வைபெற்று 3,6,11 ஆடமிங்களில் இருந்தால் ஜாதகனுக்குப் பலவித நன்மையும் பொன் பொருள் பூஸ்தி

திலாபமும் வித்தியாபிவிர்த்தியும் உத்தியோக மேன்மையும் உத்தமர் நேசமும் தனதான்ய சம்பத்துடன் தனவந்தனுயி ருப்பதற்காகும்.

கேதுதிசையில் புதன்புத்தி சம்பூர்ணம்

சுக்கிரதிசையில் சுக்கிரபுத்தி பலன்

சுக்கிரதிசையில் சுக்கிரபுத்தி 3வருஷம் 4 மாதம் நடப் பதினுல் திசாநாதனுகிய சுக்கிரபகவான் ஜனனலக்கினத்திற்கு 3-6-8-12 ஆமிடங்களில் சூரியன் இராகுடனே சம்பந்தமாய் பகை நீசஸ்தானங்களிலிருந்தால் சுக்கிரன் தனது திசையி லும் புத்தியிலும் ஜாதகனே பலவிதமாய் துன்பப்படுத்துவது டன் சரீரவியாதியாலும் பகைவர் கொடுமையாலும் தொழி லகப்படாமலும் வியாபார நஷ்டத்தினுலும் வறுமையாற் கலங்கி மனைவி மைந்தர் பந்துமித்திரர் கட்கு விரோதமா யிருப்பதற்காகும்.

ஆனுல் சுக்கிரபகவான் ஜனன இலக்கினம் 2,4,5,7,9 10,11 ஆமிடங்களில் நட்பு ஆக்ஷி உச்சமாய் புதனுடனே சேர்ந்திருந்தால் திசாநாதனுகிய சுக்கிரன் தனது திசாபுத்தி களில் ஜாதகனுக்குப் பலவித நன்மையும் ஆசார அனுஷ் டானமும் ஞாபக சக்தியும் வியாபாரவிர்த்தியும் உத்தியோக மேன்மையும் தொழில் முயற்சியும் திரவியலாபமும் பொன் பொருள் பூஸ்திதியும் பொருந்தி தனவந்தனுயிருப்பதற்கா கும்.

சுக்கிரதிசையில் சூரியபுத்தி பலன்

சுக்கிரதிசைவில் சூரியபுத்தி 1 வருஷம் நடப்பதினுல் திசாநாதனுகிய சுக்கிரனும் புத்திநாதனுகிய சூரியனும் ராகு டனே சேர்ந்து பகை நீசமாய் 3-6-8-12 ஆமிடத்திலிருந் தால் ஜாதகனுக்கு மறதியும் சோம்பலும் முன்கோபமும் பகைவர் கொடுமையும் சரீரவியாதியும் சுர ரோகமும் வியாபார நஷ்டமும் தொழிற்சாலையில் கலகமும் வறுமையும் பயங்கரமும் துன்பமும் துயரமும் இனஜன விரோதமுமா யிருக்கும்.

ஆனுல் திசாநாதனுகிய சுக்கிரன் ஜனனலக்கினத்திற்கு 2,4,7,9,10,11 ஆமிடத்தில் ஆட்சி உச்சம் நட்பாயிருக்க புத்திநாதனுகிய சூரியன் குரு பார்வை பெற்று புதனுடனே சேர்ந்து இலக்கினம் 5,9 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்ச மாயிருந்தால் ஜாதகனுக்கு ஆசார அனுஷ்டானமும் ஞாபக சக்தியும் வித்தியாசமர்த்தும் உத்தியோக மேன்மையும் வியா பாரலாபமும் பொருந்தி தனதான்ய சம்பத்துடன் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகசவுக்கியமாயிருப்பதற் காகும்

சுக்கிரதிசையில் சந்திரபுத்தி பலன்

சுக்கிரதிசையில் சந்திரபுத்தி 1வருஷம் 8மாதம் நடப்ப தினுல் திசாநாதனுகிய சுக்கிரன் 3,6,8,12 ஆமிடத்தில் பகை நீசமாயிருக்க புத்திநாதனுகிய சந்திரன் ராகுடனே சம்பந்த மாய் ஜனன லக்கினத்திற்கு 2,4,7.10 ஆமிடத்திலிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான கஷ்டமும் கலகமும் மனவிசார மும் பகைவர் கொடுமையும் வறுமையும் அலைச்சலும் மன ஸ்தாபங்களும் தொழிற்சாலை கலகங்களும் வறுமையும் துன்பமும் துயரமும் முண்டாயிருக்கும்

ஆனுல் திசாநாதனுகிய சுக்கிரனும் புத்திநாதனுகிய சந் திரனுடனே சம்பந்தமாய் குரு புதன் பார்வைபெற்று இலக் கினம் 2,4,5,7,9,10,11 ஆமிடத்திலிருந்தால் ஜாதகனுக்கு வித்தியாபிவிர்த்தியும் கல்வியும் ஞானமும் அறிவும் ஆலோ சனையும் தொழில் முயற்சியும் உத்தியோக மேன்மையும் வியாபாரலாபமும் திரவியசேர்க்கையும் பொருந்தி மனைவி மைந்தர்களுடன் சுகசவுக்கியமாயிருப்பதற்காகும்.

சுக்கிரதிசையில் செவ்வாய்புத்தி பலன்

சுக்கிரதிசையில் செவ்வாய்புத்தி 1 வருஷம் 2 மாதம் நடப்பதினுல் திசாநாதனுகிய சுக்கிரன் இலக்கினம் 2,4,5,7,9 10,11 ஆமிடங்களில் ஆட்சிநட்பு உச்சமாயிருக்கபுத்திநாதனு கிய செவ்வாய் திசாநாதனுகிய சுக்கிரனுக்கு 3,4,7,10 ஆமி டங்களில் ஆட்சி உச்சம் நட்பாயிருந்து புதன் குரு பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு தைரியமும் வித்தியாசமர்த்தும்

உத்தியோக முயற்சியும் வியாபாரலாபமும் பொன் பொருள் பூஸ்திதி சேர்க்கையும் பொருந்தி தனவந்தனாயிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய சுக்கிரனும் புத்திநாதனாகிய செவ்வாயும் சூரியன் சனிராகுடனே சம்பந்தமாய் லக்கினம் 2,5,7,9,12 ஆமிடங்களில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு பலவிதமான மன விசாரமும் பகைவர் கொடுமையும் குரோதமுமுண்டாவதுடன் தொழிற்சாலை விரோதமும் நேரிட்டு வறுமையாளனாயிருப்பதுடன் வியாபார நஷ்டமும் பொருந்தி துயரப்படுவதற்காகும்.

சுக்கிரதிசையில் இராகுபுத்திபலன்

சுக்கிரதிசையில் இராகு புத்தி 3 வருஷம் நடப்பதினால் திசாநாதனாகிய சுக்கிரன் ஜனனலக்கினம் 2,4,5,9,10,11ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருக்க புத்திநாதனாகிய இராகுபகவானும் நட்பு உச்சமாய் 3,6 ஆமிடங்களிலிருந்து குரு பார்வை பெற்றிருந்தால் ஜாதகன் வித்யாசமர்த்துடன் உத்தியோகமேன்மையும் தொழில் முயற்சியும் பொருந்தி பொன் பொருள் பூஸ்திதியுடன் திரவிய சேகரஞ்செய்து மனைவி மைந்தர்களுடன் சுகசவுக்கியமாயிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய சுக்கிரன் பகை நீசமாய் இலக்கினத்திற்கு 3,6 8,12 ஆமிடங்களிலிருக்க புத்திநாதனாகிய இராகு பகவான் இலக்கினம 2,4,5,7.10 ஆமிடங்களில் சூரியன் சனிசம்பந்தமாயிருந்தால் ஜாதகனுக்கு சரீரவியாதியும் வைப்பு சூனியம் பேய்பில்லி பயங்கரமும் விஷஜந்துக்களின் பயமும் பொருந்தி வறுமையால் கலங்கி தொழிற்சாலையில் கலகமும் வியாபார நஷ்டமும் பொருந்தியிருப்பதற்காகும்.

சுக்கிரதிசையில் குருபுத்தி பலன்

சுக்கிரதிசையில் குருபுத்தி 2வருஷம் 8மாதம் நடப்பதினால் திசாநாதனாகிய சுக்கிரபகவான் ஜனன லக்கினத்திற்கு 2,4,10 ஆமிடங்களில் ஆட்சி நட்பு உச்சமாயிருக்க புத்திநா

தனாகிய குருபகவான் ஜனனஇலக்கினம் 5,7,9,11 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு வித்தியாசமர்த்தும் சாஸ்திர ஆராய்ச்சியும் ஞாபகசக்தியும் இலட்சுமி கடாக்ஷமும் ஆசார அனுஷ்டானமும் உத்தியோக மேன்மையும் வியாபாரமும் பொருந்தியிருப்பதுடன் தன தான்ய சம்பத்துடன் மனைவிமைந்தர் பந்துமித்திரர்களுடன் சுகசவுக்கியமாயிருப்பதற்காகும்

ஆனால் திசாநாதனாகிய சுக்கிரன் சூரியனுடனே சேர்ந்து இலக்கினத்திற்கு 3,6,8,12ஆமிடத்தில் பகை நீசமாயிருக்க புத்திநாதனாகிய குரு பகவான் திசாநாதனுக்கு 6 7,8,12 ஆமிடங்களில் பகை நீசமாய் இருந்தால் ஜாதகனுக்குமறதியும் சோம்பலும் சரீரவியாதியும் சுரரோகமும் தொழிலில்லாத துன்பமும் வறுமையும் வியாபார நஷ்டமும்பொருந்தியிருப்பதற்காகும்.

சுக்கிரதிசையில் சனிபுத்தி பலன்

சுக்கிரதிசையில் சனிபுத்தி 3 வருஷம் 2 மாதம் நடப்பதினால் திசாநாதனாகிய சுக்கிரன் ஜனனலக்கினம் 2,4,5,7,9,10 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருக்க புத்திநாதனாகிய சனி பகவான் லக்கினத்திற்கு 3,6,11 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகன் மனோற்சாகமும் சுறுசுறுப்பும் பொருந்தி தொழில் முயற்சியும் வியாபார லாபமும் உத்தியோக விர்த்தியும் பொருந்தி தனதான்ய சம்பத்துடன் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகசவுக்கியமாயிருப்பதற்காகும்.

ஆனால் திசாநாதனாகிய சுக்கிரபகவான் ஜனனலக்கினத்திற்கு 3-6-8-12 ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க புத்திநாதனாகிய சனிபகவான் ஜனனலக்கினம் 2,4,5,7,10ஆமிடங்களில் பகை நீசமாய் சூரியன் செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்குத் தீராக்கவலையும் திகலும் பகைவர் கொடுமையும் பந்துமித்திரர் விரோதமும் தொழிற்சாலை கலகமும் உத்தியோகமின்றிய கவலையும் வறுமையும் சூழ்ந்து துயரப்படச்செய்யும்.

சுக்கிர திசையில் புதன்புத்தி பலன்

சுக்கிரதிசையில் புதன்புத்தி 2வருஷம் 10 மாதம் நடப்பதினுல் திசாநாதனுகியசுக்கிரன் புத்திநாதனுகியபுதனுடனே சேர்ந்து இலக்கினம் 2,4 5,7,9,10,11 ஆமிடங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு புத்திகூர்மையும் வித்தியா சமர்த்தும் உத்தியோகமேன்மையும் தொழில் முயற்சியும் பொருந்தி யிருப்பதுடன் திரவியலாபமும்மனைவி மைந்தர் பந்துமித்தரர் உபசரணையுமுண்டாகும்.

ஆனுல் திசாநாதனுகிய சுக்கிரன் சூரியன் இராகுடனே சேர்ந்து இலக்கினத்திற்கு 3,6,8.12 ஆமிடங்களில் பகை நீசமாயிருக்க புத்திநாதனுகிய புதன் திசாநாதனுகியசுக்கிரனுக்கு திரிதிய சஷ்டாஷ்ம விரயஸ்தானத்தில் பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான துன்பமும் வியாதியும் மந்தபுத்தியும் மறதியும் தொழிலகப்படாத துன்பமும் வியாபார நஷ்டமும் பந்து மித்திரபகையும் நேரிட்டு வறுமையால் கலங்கும்படிச்செய்யும்.

சுக்கிரதிசையில் கேதுபுத்தி பலன்

சுக்கிரதிசையில் கேதுபுத்தி 1வருஷம் 2மாதம் நடப்பதினுல் திசாநாதனுகிய சுக்கிரபகவான் ஜனனலக்கினத்திற்கு 3,6,8,12 ஆமிடங்களில் பகை நீசமாய் சூரியன் இராகுடனே சேர்ந்து செவ்வாய் பார்வைபெற்றிருக்க புத்திநாதனுகிய கேதுபகவான் இலக்கினம் 2,4,5,7,10 ஆமிடத்தில் சந்திரனுடனே சேர்ந்து பகை நீசமாயிருந்தால் ஜாதகனுக்குப் பலவிதமான துன்பமும் துயரமும் வறுமையும் சூழ்ந்து பந்து மித்திரர் கொடுமையாலும் தொழிலகப்படாத துன்பமும் துயரமும் வறுமையும் சூழ்ந்து பந்து மித்திரர் கொடுமையாலும், தொழிலகப்படாத துன்பமும் விஷயமும் பொருந்தியிருக்கும்.

ஆனல், திசாநாதனுகிய சுக்கிரன் இலக்கினம் 2-4-5-7 9-10 ஆமிடங்களில் நட்பு, ஆட்சி, உச்சமாய் இருக்க புத்திநாதனுகிய கேது பகவான் இலக்கினத்திற்கு 3, 6, 11 ஆமி

டங்களில் நட்பு உச்சமாய் குரு பார்வை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு கல்வியும், ஞானமும், பெரியோர் சேர்க்கையும் ஞாபக சக்தியும் திரவிய சம்பத்தும் தொழில் முயற்சியும் உத்தியோக மேன்மையும் பொருந்தி வியாபாரலாபமும் தனதான்ய விருத்தியும் பந்துமித்திரர் சகாயமும், மனைவிமைந்தர் சுக சவுக்கியமும் பொருந்தியிருக்கும்.

சுக்கிரதிசையில் கேது புத்தி சம்பூர்ணம்

கோட்சாரபலன்

கோட்சாரபலன் எவ்விதமென்றால் 27-நட்சத்திரங்களில் எந்தஎந்த நட்சத்திரத்தில் மனிதனாகப்பிறந்தார் ஜனிக்கின்றார்களோ அதையே ஜன்ம நட்சத்திரமாகவும் அந்த நட்சத்திரமிருக்கும் ஸ்தானமே ஜாதகரின் ஜன்மராசியென்றும் சொல்லப்படும் அதெவ்விதமெனில் அஸ்வனி 1 பரணி 1 கிருத்திகை $\frac{1}{4}$ மேஷம் ஜென்மராசி யென்றும் கிருத்திகை
$\frac{3}{4}$ ரோகிணி 1 மிருகசீரிடம் $\frac{1}{2}$ ரிஷபஜென்மராசி யென்றும்
மிருகசீரிடம் $\frac{1}{2}$ திருவாதிரை 1 புனர்பூசம் $\frac{3}{4}$ மிதுனராசி
புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம் 1 ஆயிலியம் 1 கடகராசியென்றும்
மகம் 1 பூரம் 1 உத்திரம் $\frac{1}{4}$ சிம்மராசி யென்றும்
உத்திரம் $\frac{3}{4}$ அஸ்தம் 1 சித்திரை $\frac{1}{2}$ கன்னியாராசியென்றும்
சித்திரை $\frac{1}{2}$ சுவாதி 1 விசாகம் $\frac{3}{4}$ துலாராசியென்றும்.
விசாகம் $\frac{1}{4}$ அனுஷம் 1 கேட்டை 1 விருச்சிகராசியென்றும்
மூலம் 1 பூராடம் 1 உத்திராடம் $\frac{1}{4}$ தனுசுராசி யென்றும்
உத்திராடம் $\frac{3}{4}$ திருவோணம் 1 அவிட்டம் $\frac{1}{2}$ மகரஜன்மராசி
அவிட்டம் $\frac{1}{2}$ சதயம் 1 பூரட்டாதி $\frac{3}{4}$ கும்பம் ஜென்மராசி
பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி 1 ரேவதி 1 மீனம்

வைத்துக்கொண்டு அங்கிருந்து முறையே 2,3 4,5,6.7 8,9,10,11,12 இராசிகளிலும் சூரியன் சுக்கிரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேது என்னும் ஒன்பது கிரகங்களும் இருக்கும் விதமே ஜாதகனுக்கு நல்ல பலனையோ கெட்டபலனையோ கொடுத்துக் கொண்டு வருவார்கள்.

அதன் விபரம் அடியிற் காண்க

சூரியன் 12 இராசிகளிலுமிருந்து பலன் கொடுப்பது

1—வது ஜன்மராசி;— உஷ்ணம் சீதபேதி மனதிகில் முன்கோபம் விரோதம் முதலான பலன்

2—வது கண்நோய் விரோதம் குரோதம் கடன் முதலானவை

3—வது திரவியலாபம் வியாபாரவிர்த்தி உத்தியோக மேன்மை தொழில் விருத்தி முதலானவை

4—வது சத்துரு விரோதம் பந்து மித்திரர்பகை, கடன்காரர் தொந்தரை மனவியாதி முதலானவை

5—வது செய்தொழிலில்விரோதம், மனஸ்தாபம்,சரீரவியாதி கலகம், முதலானவை

6—வது பொன் பொருள் சேர்க்கை வியாபாரலாபம் திரவிய சேர்க்கை உத்தியோகமேன்மை முதலானவை

7—வது இடம்மாறுதல், தேச சஞ்சாரம், மனஸ்தாபம், கலகம் கவலை முதலானவை

8—வது சரீரவியாதி பலவித கஷ்டம், துன்பம், தொழிற்சாலையில் கலகம் துயரம் முதலானவை

9—வது பயங்கரம், விரோதம் கலகம், பகைவர் கொடுமை மனவிசாரமுதலானவை

10—வது தொழில் விர்த்தி வியாபாரலாபம், பொன் பொருள் பூஸ்திதி சேர்க்கை முதலானவை

11—வது தனதானிய சம்பத்து, திரவியலாபம் மனோற்சாகம் முதலானவை

12—வது காரிய நஷ்டம், தனவிரயம், வியாபார நஷ்டம் தொழிற்சாலை கலகம்முதலானவை பொருந்தியிருக்கும்

சந்திரன் 12 இராசியிலுமிருந்து பலன் கொடுக்கும் விபரம்.

1—வது ஜன்மராசி:—சரீரசவுக்கியம்மனோற்சாவம் சுகசவுக்கியம் முதலானவை.

2—,, வியாபார நஷ்டம்கைப்பொருள் சேதம்முதலானவை.

3—வது பொன் பொருள் வரவு திரவியலாபம் முதலானவை

4—,, சீதளரோகம் சுரவியாதி, ஜன்னி வாதசீதளம் முதலானவை

5—வது செய்தொழில்கலகம் வீண்பிரயாசை, நஷ்டம் முதலானவை.

6—,, மனோற்சாகம் சந்தோஷம் திரவியலாபம் முதலானவை.

7—வது சரீரசவுக்கியம் மனோல்லாசம் வியாபாரலாபம் முதலானவை.

8—,, சீதள சுரரோகம் தலைவலி கவலை முதலானவை

9—வது தொழில் விக்கினம், வியாபாரநஷ்டம் கஷ்டம் முதலானவை.

10—,, தனலாபம், மனோற்சாகம் தைரியம் முதலானவை.

11—,, பொன் பொருள் வரவு திரவியலாபம் முதலானவை.

12—வது பொருள் நஷ்டம் கைப்பொருள் சேதம் துன்பம் துயரம் முதலானவை பொருந்தியிருக்கும்.

செவ்வாய் 12 இராசியிலுமிருந்து பலன் கொடுக்கும் விபரம்

1—வது ஜன்மராசி—மறதி சோம்பல் கஷ்டம் கவலை

2— சரீரவியாதி முன்கோபம் சத்துரு விரோதம் முதலான

3— வியாபார விருத்தி உத்தியோக மேன்மை திரவியலாபம் முதலானவை

4— முன்கோபம் சரீரவியாதி துன்பம் துயரம்

5— கைப்பொருள் சேதம் சூதகம் வியாதி கஷ்டம் முதலானவை

6— மனோற்சாகம் உத்தியோக விருத்தி வியாபார லாபம் திரவியசேகரம் முதலானவை

7— சண்டை சச்சரவு இனஜன வழக்கு சிறைப்பயம் முதலானவை

8— வியாதி சீதபேதி இருமல் வயற்றுநோய் முதலானவை

9— செய் தொழில் நஷ்டம் மன விசாரம் கவலை

10— பகைவர் கொடுமை திரவியநாசம்பயம் முதலானவை

11— உத்தியோகவிர்த்தி வியாபாரலாபம் திரவியலாபம் முதலானவை
12— வியாதி பணச்செலவு சத்துரு விரோதம் முதலானவை பொருந்தியிருக்கும்.

புதன் 12 இராசிகளிலுமிருந்து பலன் கொடுக்கும் விபரம்

1—வது ஜன்மராசி—தேசசஞ்சாரம் மந்த புத்தி திகில் முதலானவை
2— புத்திகூர்மை அறிவு ஆலோசனே முதலானவை
3— மறதி சோம்பல் மந்த புத்தி கலகம் முதலானவை
4— புத்தி சாதுர்யம் வியாதி துக்கம் முதலானவை
5—அபகீர்த்தி கஷ்டம் கலகம் தேசசஞ்சாரம் முதலானவை
6— தொழில்முயற்சி வியாபாரலாபம் திரவிய சேர்க்கை முதலானவை
7— சோக்கம் விசனம் துக்கம் துன்பம் கவலே
8— வியாபாரலாபம் சர்வானுகூலம்திரவியசேர்க்கை
9— சோம்பல் மறதி விசாரபுத்தி திகில் முதலானவை
10— மனோற்சாகம் திரவிரலாபம் பொருள் வரவு
11—,, வியாபாரலாபம் பொன்பொருள் சேர்க்கை
12—,, பலவிதமானகவலே பொருள் செலவுநஷ்டம்

குரு 12 இராசியிலுமிருந்து பலன்கொடுக்கும் விபரம்

1—வது ஜன்மராசி சரீரவியாதி மரணபயம் திரவியநஷ்டம்
2— வியாபார விருத்தி பொன் பொருள் பூஸ்திதிலாபம்
3— பலவிதமான கஷ்டநஷ்டம் சூதகம் வியாதி
4— தேச சஞ்சாரம் சிநேகிதர்பகை சத்துருவிரோதம்
5— வியாபாரலாபம் தனலாபம் திரவிய சேர்க்கை
6— திகில் பகைவரால் துயரம் சண்டை மரணபயம்
7— சுபகாரியம் ஸ்திரீகள் நேசம் தனலாபம்
8— விரோதிகளால் துன்பம் சண்டை மரணபயம்
9— பலவிதமாய் பொருள்வரவு தருமம் கல்யாணம்
10— மனவிசாரம் தேசசஞ்சாரம் துன்பம் கஷ்டம்
11— பொன் பொருள் பூஸ்திதி திரவியலாபம்
12— சரீரவியாதி பொருள் செலவு நஷ்டம் முதலானவை பொருந்தியிருக்கும்.

சுக்கிரன் 12 ராசியிலுமிருந்து பலன் கொடுக்கும் விபரம்

1—வது ஜன்மராசி வியாபார விருத்தி பொன் பொருள் சேர்க்கை தனலாபம் முதலானவை
2—வது திரவிய சேர்க்கை சுக சவுக்கியம் முதலானவை
3...வது சரீராரோக்யம் திரவியலாபம் முதலானவை
4...வது பந்துமித்திரர் சேர்க்கை மனோற்சாகம்
5...வது பொன் பொருள் பூஸ்திதி சேர்க்கை முதலானவை
6...வது தானிருக்கும் நிலே தவறி துயரப்படுவது
7...வது சரீர வியாதி கவலே மனவிசாரம் முதலானவை
8....வது பந்துமித்திரர் நேசம் சுகசவுக்கியம் முதலானவை
9....வது வியாபாரலாபம் தருமசிந்தனே திரவியலாம் முதலானவை
10....வது பலவிதமான கஷ்டநஷ்டம் திரவியநாசம் வறுமை முதலானவை
11...வது சுகசவுக்கியம் பொருள் வரவு சுகபோஜனம்
12....வது சுபகரமான சவுக்கியம் திரவியலாபம் முதலானவை பொருந்தியிருக்கும்

சனி 12 ராசிகளிலுமிருந்து பலன் கொடுக்கும் விபரம்

1...வது ஜன்மராசி திகில், மனபயங்கரம், கஷ்டம் கவலே முதலானவை
2....வது கவலே மனவிசாரம், கடன், வியாதி, சச்சரவு
3....வது வியாபார விருத்தி, தொழில், உத்தியோக மேன்மை திரவியலாபம் முதலானவை
4....வது முன்கோபம் சுரம் வாய்வு வாதரோகம் வியாதி வறுமை முதலானவை
5....வது கைப்பொருள் சேதம், சூதகம், கலகம், துயரம், வறுமை முதலானவை
6....வது உத்தியோக மேன்மை, தொழில் முயற்சிவியாபார விருத்தி திரவியலாபம் முதலானவை
7....வது கலகம், சச்சரவு, பகை, விரோதிகள் கொடுமை, சிறைபயம் முதலானவை

8...வது பித்தசுரம், சீதபேதி, இருமல், வயற்றுநோய் வறுமை முதலானவை

9....வது செய்தொழிலில் கலகம், திரவிய நஷ்டம், கடன் வறுமை முதலானவை

10...வது பகைவர் கொடுமை, திரவிய நாசம், பயம், திகில் முதலானவை

11—வது உத்தியோகம், தொழிலிலாபம், வியாபாரவிருத்தி திரவிய சேர்க்கை முதலானவை

12—வது திரவிய நஷ்டம்; பலவித வியாதி, சத்துருவிரோதம் வறுமை முதலானவை

இராகு 12 இராசியிலுமிருந்து பலன் கொடுக்கும்விபரம்

1—வது ஜன்மராசியில் கலகம் வாதரோகம் வாய்வுவியாதி வறுமை முதலானவை

2—வது சரீரவியாதி உஷ்ணவாய்வு, வாதரோகம் சத்துரு பயம் முதலானவை

3—வது தொழில் முயற்சி, உத்தியோக மேன்மை வியாபார லாபம் திரவியலாபம் முதலானவை

4—வது கோபம் குரோதம் வாதம் இல்வாய்வு வறுமை முதலானவை

5—வது மனவிசாரம் திகில், பகைவர் கொடுமை கலகம் கஷ்டம் முதலானவை

6—வது வியாபாரலாபம் தொழில் முயற்சி, திரவிய லாபம் முதலானவை

7—வது சண்டை சச்சரவு பயம் கலகம் திகில் சிறை துன்பம் முதலானவை

8—வது வியாதி உஷ்ணபேதி விஷபயம் வீண்விரோதம் வழக்கு முதலானவை

9—வது மனசஞ்சலம் திகில் காரிய நஷ்டம் கவலை கஷ்டம் முதலானவை

10—வது இனஜன விரோதம் மனவிசாரம் துன்பம் வறுமை திகில் முதலானவை

11—வது உத்தியோகவிருத்தி வியாபாரம் திரவிய லாபம் பூஸ்திதி சேர்க்கை முதலானவை

12—வது பயங்கரம் வீண்விரயம் சத்துரு விரோதம் கஷ்ட நஷ்டம் முதலானவை பொருந்தியிருக்கும்.

கேது 12ராசிகளிலுமிருந்து பலன் கொடுக்கும் விபரம்

1—வது ஜன்மராசியில் மனபயங்கரம், இல்வாய்வு, தொழிலில்லா துன்பம், வறுமை முதலானவை

2—வது திகில், துன்பம், வறுமை, வியாதி வாதம், வாய்வு முதலானவை

3—வது பெரியோர்கள் சேர்க்கை, வியாபாரலாபம், திரவிய லாபம் முதலானவை.

4—வது முன்கோபம் பகைவர் கொடுமை பந்து மித்திரர் குரோதம் நஷ்டம் முதலானவை

5—வது வியாதி துன்பம், கொடுமை, குரோதம் பயங்கரம் வறுமை முதலானவை

6—வது சவுக்கியம், திரவியலாபம், வியாபார விர்த்தி

7—வது வீண்வழக்கு கவலை, கலகம், திகில் சிறை, துன்பம் முதலானவை

8—வது உஷ்ணவாய்வு, கலகம் திகில் வறுமை பொருள் நஷ்டம் முதலானவை

9—வது திகில், காரிய நஷ்டம் வறுமை துன்பம் துயரம் முதலானவை

10—வது பந்து மித்திரர் விரோதம் காரிய நஷ்டம் கவலை முதலானவை

11—வது உத்தியோக விருத்தி வியாபாரலாபம் திரவியலாபம் முதலானவை

12—வது பலவித நஷ்டம் வீண்செலவு சத்துரு விரோதம் கஷ்டநஷ்டம் முதலானவை பொருந்தியிருக்கும்

6-வது—பேஜியில் குறிப்பித்த விதமாய் ஜனன லக்கினம் குறிப்பித்து 27—வது பேஜியில் குறிப்பித்தவிதமே திசாபுத்தியில் கிரகங்கள் கொடுக்கும்பலனை கவனித்துக் கொண்டு 8—வது பேஜியில் குறிப்பித்தவிதமே ஜாதகன் ஜனனமான நக்ஷத்திரத்தில் எந்தெந்த ராசியாதமோ அதன் விபரத்தை அடியிற் குறிப்பித்திருக்கும் விபரத்தின்படியே ஜாதகபலனை கவனிக்கவேண்டும்.

இதன் அடியிற்குறிப்பித்த 12 இராசிகளில் கிரகங்களிருக்கும் போது பலன் கொடுக்கும் விபரத்தை கவனித்துக் கொள்வீர்

பங்குனிமீ மீனராசி	சித்திரைமீ மேஷராசி	வைகாசிமீ ரிஷபராசி	ஆனிமீ மிதுனராசி
மாசிமீ கும்பராசி	சூரியன் 1 மாதம் சந்திரன் $2\frac{1}{4}$ நாள் செவ்வாய் $1\frac{1}{2}$ மாதம் புதன் 1 மாதம்		ஆடிமீ கடகராசி
தைமீ மகரராசி	குரு 1 வருஷம் சுக்கிரன் 1 மாதம் சனி $2\frac{1}{2}$ வருஷம் ராகு; கேதுக்கு $1\frac{1}{2}$ வருஷம்		ஆவணிமீ சிங்கராசி
மார்கழிமீ தனுசுராசி	கார்த்திகை விருச்சிகராசி	ஐப்பசிமீ துலாராசி	புரட்டாசிமீ கன்னியாராசி

தினபலன் விபரம் எவ்விதமென்றால்

ஜாதகர் ஜெனனமாகும்போது எந்த நக்ஷத்திரம் ஜனன நக்ஷத்திரமாய் வருகிறதோ அந்த நக்ஷத்திரத்தையே முதலாக வைத்தெண்ணிக் கொண்டு வரும்போது அந்தந்த நக்ஷத்திரங்களில் வரும்பலனை ஜாதகர் அனுபவிப்பதற்காகும். அதன் விபர மெவ்விதமென்றால் ஜாதகன் ஜென்ம நக்ஷத்திரம் அஸ்வனி ஆனால் அதனை முதல் நாளாகக்கொண்டு அதன் பிறகு வரும் 26 நக்ஷத்திரங்கள் வருதனங்களையேஒவ்வொரு நாளாக மதித்து பலன் சொல்வதே தினபலனாகும் அதெவ்விதமெனில்—

ஜென்ம நக்ஷத்திரத்திலிருந்து 27 நக்ஷத்திரம் வரையிலும் வருகின்ற தினபலனை அடியிற்குறிப்பித்திருக்கின்றோம் கவனிப்பீர்கள்

அஸ்வனி முதல் ரேவதிவரைக்கும் பலன் பார்த்துக் கொள்ளவும்.

1—வது அஸ்வனி ஜன்மம் மத்தியபலனாய் எந்த காரியமும் அரைபலனாக நடக்கும்

2—வது பரணிசம்பத்து எடுத்தகாரியமெல்லாம் சித்தியாகும்

3—வது கிருத்திகை விபத்து, அன்றையதினம் வரையிலும் காரியநஷ்டமு கலகமுமாயிருக்கும்.

4...வது ரோகணி க்ஷேமம் எந்த காரியமும் கை கூடும்,

5...வது மிருகசீரிடம் ப்ரத்யக்ஞா தான்நினைத்த காரியமெல்லாம் விரோதமாய் கைகூடாமலிருக்கும்,

6—வது திருவாதிரை சாதனம் தான் செய்யும் முயற்சியால் சகலரும் துணையாயிருந்து நன்மை செய்வார்கள்,

7....வது புனர்பூசம் வதை அன்றையதினம் இரத்த காயமும்

8—வது பூசம் மைத்திரம் சகல காரியமும் சித்தியாவதுடன் சுகசவுக்கியமுண்டாகும்

9—வது ஆயில்யம் பரமமைத்திரம் அன்றையதினத்தில்தான் செய்யும் காரியபங்கமாகாமல் சமமாய் பலன் நடக்கும்!

10—வது மகம் ஜன்மம் ஜாதகனுக்கு அன்றையதினம்வரையிலும் மத்திபமாகவே பலன் நடக்கும்

11...வது பூரம் சம்பத்து ஜாதகன் அன்றையதினம் செய்யும் தொழிலனைத்தும் உத்தமமாய் நடக்கும்

12—வது உத்திரம் விபத்து எந்தகாரியமும் சித்தியாகாது.

13—வது அஸ்தம் க்ஷேமம் அன்றையதினத்தில் செய்யும் காரியத்தில் பங்கம்நேரிடாமல் நன்மையுண்டாகும்

14—வது சித்திரை பிரத்தியக்ஞா அன்றையதினம் சோம்பலாகவே எந்தகாரியத்திலும் மனம் செல்லாது.

15—வது சுவாதி-சாதகம் அன்றையதினத்தில் சுறுசுறுப்பாய் எடுத்தகாரியமெல்லாம் சித்தியாகும்,

16....வது விசாகம்-சாங்காதிகம் அதமம் அன்றையதினத்தில் பலவித துன்பமும் கஷ்டநஷ்டமுமுண்டாகும்.

17....வது அனுஷம் மைத்திரம் உத்தமமான பலவித நன்மையுமுண்டாவதுடன் சிநேகிதரால் பொருள் வரவுமுண்டாகும்,

18....வது கேட்டை பரம மைத்திரம் சமமான பலன்களும் உத்தியோகம், தொழிலகப்படும் விதமான நன்மையுண்டாகும்.

19...வது மூலம் ஜன்மம் மத்திபம் ஆகிய முதலானவையுடன் தான் முயற்சித்தவரையிலும் லாபம் உண்டாகும்.

20....வது பூராடம் சம்பத்து உத்தமமான விஷயங்களும் பெரியோர் நேசமும் திரவியலாபம் உண்டாகும்.

21....வது உத்திராடம் விபத்து அதமமான நாளாகையால் காலிடரல் இரத்தகாயம் மனக்கிலேசம் முதலானவை யுண்டாகும்.

22...வது திருவோணம் உத்தமமான சுபசெப்திகளும் நல்லோர் சேர்க்கையும் பந்து கூட்டமும் பொருந்தியிருக்கும்.

23....வது அவிட்டம் வைகாசிகம் அதமத்திலும் அதமபலன் துர்குறிகளும், கஷ்டநஷ்டமுமுண்டாகும்

24...வது சதயம் சாதகம் தொழில்முயற்சியும்கைப்பொருள் சேர்க்கையும் திரவியலாபமும் கிடைக்கும்.

25....வது பூரட்டாதி மானசம் அதமத்திலும் அதமம் கஷ்டநஷ்டங்களும் சண்டை சச்சரவும் இரத்தகாயமுதலான துர்குறிகாண்பிக்கும்.

26....வது உத்திரட்டாதி மைத்திரம் உத்தமமான பலவித நன்மையும் சுகசவுக்கியமும் கொடுக்கல் வாங்கல்முதலான நன்மைகளைத்தும் உண்டாகும்

27...வது ரேவதி சமுதாயிகம் அதமமான கஷ்டங்களும் கவலையுமுண்டாவதுடன் துயரமுமிருக்கும்.

இவ்விதமே ஜாதகர் பிறந்த ஜன்மநக்ஷத்திரம் எந்தெந்த நக்ஷத்திரமோ அதையே முதலாவது ஜன்மமாகக்கொண்டு 27 வதுவரையிலும் கணக்கெடுத்து முறையே ஒவ்வொரு மாதத்திலும் வரும்நக்ஷத்திரங்களைபேதின பலனைக்கொண்டு பார்க்கும்போது ஜாதகரின் கோட்சார பலன்களையும் அனுசரித்து முதலில் குறிப்பிந்த திசாபுத்தி பலனையும் சேர்த்து ஜாதகரின் பலாபலனை கவனிக்க வேண்டியது.

மகா திசை பிரிக்கும் வழி.

27....வது பேஜியில் குறிப்பித்திருக்கும் திசாபுத்திகளின் விபரமெவ்விதமெனில் ஜாதகரின் ஜன்ம நக்ஷத்திரம் கிருத்திகையானால் 60 நாழிகைக்கு சூரியதிசை 6 வருஷம் ஆனால் இதை 4 பாதமாகச் செய்தால் 1 பாதத்திற்கு 15 நாழிகையானால் சூரியதிசையில் ஒரு வருஷமும் 6 மாதமாகும் கிருத்திகை நக்ஷத்திரம் 2 ம் பாதம் 30 நாழிகையானால் 3 வருஷமாகும் கிருத்திகைநக்ஷத்திரம் 3பாதமானால் 45நாழிகையாகும் சூரியதிசையில் 4 வருஷம் 6 மாதமாகும் கிருத்திகை நக்ஷத்திரம் 4 ம் பாதமானால் 60 நாழிகையாகும் இதற்கு 6வருஷம் இவற்றுள் எத்தனை நாழிகை செல்லாகிறதோ அதை கர்ப்பச்செல் தள்ளி மீதியாயிருப்பதில்,

1—பாதமானால்	கர்ப்பச்செல்	1 வருஷம் 6 மாதமும்
2—பாதமானால்	,,	3 வருஷம்
3—பாதமானால்	,,	4 வருஷம் 6 மாதம்
4—பாதமானால்	,,	6 வருஷம்

இந்த புத்தகத்திற்கு ஆதாரமாய் எங்களிடமிருக்கும் சோதிட ஆசான் என்னும் புத்தகத்தை வாங்கி கையாண்டு வருவார்களானால் சகலவிதமான பலன்களையும் அவரவர்களே கவனித்துக் கொள்வதற்காகும்.

பெரியசோதிட ஜாதககணித பாலசிக்ஷை

சம்பூர்ணம்.

சீனிவாசா அச்சகம்; சூளை, சென்னை 7.

சோதிட ஆசான்

பிரபல ஜோதிட வித்வான்கள் பத்திராதிபர்கள்

நற்சாட்சி பெற்ற நூல்

ஒவ்வொருவரின் கோச்சார விதிகளும் கிரகராசிகளும் நட்சத்திர பலன்களும் கிரகசாரங்களும் கண்டாதி கண்டங்களை பிறர் உதவியின்றிஅறிந்துகொள்ளும் முறையும் விவாக பொருத்த நிமித்தங்களும், புத்திர சந்தானத்திற்குகந்தபொருத்தங்களும் அந்தரங்களின் அரிய விஷயங்களும் மற்றும் பொருத்தமுள்ள பலவித சோதிடமர்ம விஷயங்களெல்லாம் இதில் அடங்கியுள்ளது. இது ஒன்று இருந்தால் வேறு சோதிடபுத்தகம் தேவையில்லை.

4-பாகங்கள் அடங்கியது விலை ரூ. 6-00

நந்திதேவர் அருளிய சோதிடமர்மம்

இந்நூலில் ஜாதக இரகசியத்தை சாதாரண மாணவர்கள் முதல் சோதிடர்கள் வரை இலகுவாக அறிந்துகொள்ளுவதற்காக ஜாதகம், ராசி, அஷ்டவர்க்கம் முதலியவை கணிக்கவும், கோசாரம் பன்னிரு பாவபலன்கள் கிரக நட்புசமம், பகை யறிதல் ஆண், பெண் அறியும் விபரம் பெண்கள் ஜாதகங்களில் அழகு பதிவிரதை நடத்தை புத்திரம்; மலடி அமங்கலை குணம் முதலியவை பற்றி விபரம் உள்ளது.

விலை ரூ. 5.00

குரு சிஷ்ய சம்பாஷணை என்னும் ஹஸ்த ரேகை சாஸ்திரம்

சோதிடக் கலைகளுள் உயர்ந்ததும், உண்மையானதும் கைரேகைக் கலையாகும் அதனுள் மறைந்து கிடக்கும் பல கிடைத்தற்கரியமாபெரும் நுணுக்கங்களை, மிகஎளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம். பல நூற்றுக்கணக்கான படங்களுடன் விளக்கி வெளியிடப் பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக ஆசிரியர், மாணவரிடையே கேள்வி பதில் ரூபத்தில் வெளியிட்டுள்ளது கைரேகை நூல்களிலேயே முதன் முறையாகும்.

அழகிய முகப்புடன் விலை ரூ 3—50

ஷண்முகாநந்த புத்தகசாலை, பார்க்டவுன் சென்னை 3.